கலைக்கதிர்

ரோதி   மாத வெளியீடு   மாசி

550
1-50



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - MAR 1950
MADRAS

இவை
எங்கள் பணி:
பஞ்சு
அரைவை
எண்ணெய்
ஆட்டுதல்
எண்ணெய்
வடிகட்டிப்
பிண்ணாக்குத்
தயார் செய்தல்
காட்டன் ஜின்
ஆயில் எக்ஸ்பெல்லர்
பில்டர் பிரஸ்
ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்
பாப்பநாய்க்கன் பாளையம்
கோயமுத்தூர்
போன் நெ. 51

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - MAR 1950
MADRAS
1598

Estd. 1936. Telegram: VENKATESA, Udamalpet.

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,
உடுமலைப்பேட்டை.

சென்னை-600 008

80நெ. வரை மெலியரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

எங்கள் புதிய தறிகளிலிருந்து தரத்தில் சிறந்த துணி ரகங்கள் வெளிவரத் தயாராய்விட்டன.

மானேஜிங் ஏஜண்டுகள்:
ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு
அண்டு கம்பெனி.

தந்தி : "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ்

லிமிடெட்,

உடுமலைப்பேட்டை.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

பாக்யலக்ஷ்மி & கோ.,

★

20-நெ. முதல் 60-நெ. வரை
ஒற்றை முறுக்கு நூல்கள்
தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்
இந்திய உழைப்பு
இந்திய நிர்வாகம்

★

சிங்கிள் கதிர்கள் 22000 *டப்ளிங் கதிர்கள் 624*

தந்தி: "சுப்ரமணியா"   டெலிபோன் { ஆபீஸ் 176 / பங்களா 146 }

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 36-நெ. முதல் 80-நெ வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,512 கதிர்கள் தொழில் செய்கின்றன.

தேசிய மூலதனம்
தேசிய தொழிலாளர்
தேசிய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:
K. Krishnaswamy Naidu & Brother.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

மூலதனம் மானேஜ்மேண்டு தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அநுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்.

Managing Agents :—

N. APPUSWAMY NAIDU & CO.,

Managing Director:—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

கலைக்கதிர்

மலர் – ௨ விரோதி : மாசி இதழ் – ௩ 3

ஆசிரியர் :
திரு. ஜி. ஆர். தாமோதரன்,
[B. Sc.. Elec., B. Sc. Mech. (Durham). A. M. I. E. E. (London)]

★

இந்த இதழில்

211712

மனிதனும் சூழ்நிலையும்
சாவா இலக்கியம்
கன்னரதேவனும் கண்டராதித்தனும்
ஜவ்வரிசி
கவிதைக் காதல்
ஸ்ரீனிவாச ராமானுஜம்
சடங்குச் செய்யுள்
அணுவின் புராணம்
அடியளந்தான்
மறுபதிப்பு
பொங்கலும் பஞ்சமும்
சுழற் காற்று
வினாக்களும் விடைகளும்
நூல் அரங்கு

★

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

விலை அணா 8

● ‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ என்று குறிப்பிட்ட நேரங்களில் உணர்ச்சி நிலையினை அறிவதைக் குறிப்பிடுகிறோம். அதுபோலவே, உடலின் தன்மை அமைப்புகளைக் கொண்டு மனிதனின் இயல் செயல்களை உணர முடியுமா?...........

மனிதனும் சூழ்நிலையும்

21/572
சென்னை - 600 008

திரு. து. ஏ. சண்முகம் M.A., M.Litt.

●

மனிதன் சமூகப் பிராணி. எனவே அவன் சிறந்த முறையில் சமூகத்தில் வாழும் மற்ற மனிதர்களின் தன்மை (Personality) அறிந்து அவர்களுக்குத் தக வாழவேண்டும். ஆனால், மனிதர்களின் தன்மையை அறிவது அவ்வளவு எளிய காரியமன்று. பல்லாண்டு அவர்களோடு பல துறையில் பழகினால் அல்லது அவர்களுடைய இயல்புகள் தெளிவுபடா. இவ்வாறு ஒவ்வொருவரோடும் பல்லாண்டுகள் பழகி அவர்களது தன்மையை அறிய முயலுவது என்பது இயலாத காரியமே. உளநூலறிஞர்கள் ஆராய்ச்சிகளின் மூலமாகக் குறுகிய காலத்தில் மனிதர்கள் தன்மையை அறியப் பல சிறந்த முறைகளைக் கையாளுகிறார்கள். ராணுவம், சர்க்கார் அலுவலகம் முதலியவைகளுக்கு உயர்தரமான ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தற்போது பெரும்பாலும், உளநூலறிஞர்கள் கண்டறிந்த முறைகளையே கையாளுகிறார்கள். ஆனால் தம் சுற்றுப்புறத்தே வாழும் மனிதர்களின் தன்மை இயல்புகளை (Personality traits) அறிவது என்பது உளநூலறிஞர்கள் கண்டு பிடித்த புதியமுறையன்று. அவர்கள் விஞ்ஞான முறையில் கண்டு பிடித்தார்கள். இம்முறை மக்கள் இவ்வுலகின்கண் தோன்றிய திலிருந்தே பல்வேறு வகைகளாய் இருந்துவந்திருக்கிறது.

ஒருவனது உடலமைப்பைக் கொண்டு அவனது உள்ள நிலையையும் தன்மையையும் நிர்மாணிப்பது தொன்றுதொட்டு இருந்து வரும் ஒரு வழக்கம். ஒருவனுடைய முக அமைப்பு, முகவாய்க்கட்டை அமைப்பு, மூக்கு அளவு, கண்கள் அளவு, நிறம், தலைமயிர், தேகக்கட்டு முதலியவைகளின் தன்மைக்கேற்ப அவனது உள்ளநிலையும் அமைந்திருக்கும் என்று கருதிவந்திருக்கிறார்கள். மேலை நாட்டுக் கவியும், நாடகாசிரியருமான உலகம் போற்றும் ஷேக்ஸ்பியர் (Shakespeare) ஜூலியஸ்ஸீஸர் (Julius Ceasar) என்ற நாடகத்தில் ஒரு கட்டத்திலே ஜூலியஸ்ஸீஸர் வாயிலாக இதுபோன்ற கருத்தை வெளியிடுகின்றார். ஸிஸரோ என்பான் தனக்குத் தீங்கிழைக்க நினைக்கிறான் என்று ஸீஸருக்குத் தெரியாமலிருந்தும் அவன் ஸிஸரோவைக் குறிக்கும்போது “அவன் உலர்ந்து ஒல்லியாக இருக்கிறான். அவன் ஏதோ எப்போதும் யோசனை செய்து கொண்டிருக்கிறான்; என்னுடன் இருப்பவர்களெல்லாம் பருமனாக இருப்பவர்களாக இருக்கட்டும்” என்று கூறுகிறார். ஷேக்ஸ்பியருடைய கருத்தாவது, பருமனாக இருப்பவர்கள் ‘கபடமற்றவர்கள்’ என்பதும், உயர்ந்து ஒல்லியாக இருப்பவர்கள் அறிவு அதிகமுடையவர்கள், ஆதலால்

'சூழ்ச்சி செய்யும் தன்மை உடையவர்கள் என்பதும் ஆம். இது போன்ற கருத்து நமது நாட்டிலும் பொதுவாக எல்லா மக்களிடமும் விளங்குகிறது. உயர்ந்து தடித்து வளர்ந்திருப்பவர்களைக் 'கபடமற்றவர்கள்' என்று கருதுவது இயற்கை. கிரஷ்மியர் (Kretschmer) போன்ற ஜெர்மானிய உள நூலறிஞர்கள் குற்றவாளிகளின் (Criminals) மேலும், உள நோயால் பீடிக்கப்பட்டவர்களின் மேலும் நடத்திய ஆராய்ச்சிகளினால் மேலே கூறப்பட்டவைகளைப் போன்ற உண்மைகளை வெளியிட்டார்கள். கிரஷ்மியர் மக்களை அவரவர்களது உடலமைப்புக்குத் தகப் பிக்னிக்வகை (Pyknic Type), அத்தலட்டிக்வகை (Atheletic Type), அஸ்தனிக் வகை (Asthenic Type) என மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார். பிக்னிக் வகை மனிதர் வட்டமான சதையுள்ள முகமும், சிறிது சப்பையான சிறிய மூக்கும், பருமனான உடலமைப்பும் உடையவர்கள். அவர்கள் சுறு சுறுப்பற்றவர்களாயும், மக்களோடு அதிகம் பழகும் விருப்பமுடையவர்களாயும் நிகழ்கால வாழ்க்கையையே நம்பி வாழ்பவர்களாயும் இருப்பார். இந்தப் பிக்னிக் வகையினர் உள்ள நோய்வாய்ப்பட்டால், ஹிஸ்டீரியா (Hysteria) உளக் கோளாறையும், உற்சாகமும், துக்கமும் கலந்து அடிக்கடி தோன்றும் வியாதியையும் (Manic depressive Psychosis) அடைவார்கள். அத்தலட்டிக்வகையினர் உரமும் பெருத்ததுமான எலும்புகளை உடையவர்களாயும் வலிவு வாய்ந்த தசைகளை (Muscles) உடையவர்களாயும் இருப்பார்கள். இந்த வகையினர் சலியாமல் உழைப்பதில் ஆர்வம் உடையவர்கள். வாழ்க்கையின் அடிப்படையான இலட்சியங்களை உணர்ந்து அதன்படி நடப்பவர். மூன்றாவது வகையினரான ஆஸ்தனிக் (Asthenic) வகையினர், ஒல்லியாகவும் உலர்ந்து உயர்ந்தும் இருப்பார்கள். சதையற்ற தட்டையான மார்பை உடையவர்கள். இவ்வகையினர் எப்போதும் தனித்து வாழ விரும்புவார்கள்; தமது இச்சைகளையும், கருத்துப்களையும் எளிதில் வெளியிடாது அடக்கி வைக்கும் இயல்புடையவர்கள். அத்தலட்டிக் வகையினரும் ஆஸ்தனிக் வகையினரும் உளநோய்களுக்கு ஆளாவார்களானால், ஸ்கிஸோபிரேனியா (Schzophrenia)[1] என்ற நோய்க்கே உள்ளாவார்கள்.

மேற்கூறியவைபோன்று உடலின் அமைப்பைக் கொண்டோ, உடலின் பல்வேறு பாகங்களின் அளவு, நிறம் தன்மை முதலியவைகள் கொண்டோ தன்மை இயல்புகளை ஊகிப்பது சிறந்த முறையன்று என்பதைக் கிரஷ்மியருக்குப் பின் வந்த ஆராய்ச்சியாளர்கள் பலர் நிரூபித்திருக்கிறார்கள். அவர்கள் காட்டிய பல்வேறு காரணங்களில் ஒன்று, பிக்னிக் உடல் வகையினர் அஸ்தனிக் உள்ள இயல்புகளை உடையவர்களாயிருந்தார்கள் என்பதும், அஸ்தனிக் வகையினர் அத்தலட்டிக் வகையினரது உள்ள இயல்புகளை உடையவர்களாயிருந்தார்கள் என்பதுமாகும். இவர்கள் கண்டுபிடித்த உண்மைகளால் உடலமைப்பைக் கொண்டு உள்ளத்தின் இயல்புகளை ஊகிக்கும் வழக்கம் பொருந்தாது என்றே தெரிகிறது.

மக்கள் பிறந்த நாட்களுக்குத் தக அவர்கள் உள்ள இயல்புகளும் அமைகிறது என்பது மற்றொரு கருத்து. நாகரிகத்திலும், பண்பிலும் சிறந்து விளங்கிய பண்டைய கிரேக்க நாட்டிலும் நமது இந்திய நாட்டிலும், மக்

1 ஸ்கிஸோபிரானியா நோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களிடம் காணும் பொதுவான குறிகள் (General symptoms), உலகத்தோடு தொடர்பு இல்லாமல் தன் உள்ளத்தால் கற்பனை செய்யப்பட்ட தனி உலகில் வாழ்வதாகும். எனவே மற்றவர்களைப்போன்று நடப்பதில்லை. சில சமயங்களில் மாதக்கணக்கில் வாய் திறந்து பேசுவதில்லை; பிறர் பேசுவதும் கேட்பதில்லை; உணவும் உண்ண மாட்டார்கள்.

32 NOV 1952

களை அவரவர்கள் பிறந்த நாட்களுக்குத் தக, சனி வகையினர், ஞாயிறு வகையினர், திங்கள், புதன் வகையினர் என இதுபோன்று வகுத்து, அவரவர் களிடம் தனித்தனி உள்ள இயல்பு களும் இருப்பதாகக் கண்டனர். இது போன்று மக்களை அவரவர்கள் பிறந்த நாட்களுக்குத் தக, அந்தந்தக் கோள் களின் (Planets) சக்திக் கேற்ப உள்ள இயல்புகள் அமைகின்றன என்று துணிவாகக் கூறமுடியாது. விஞ்ஞான முறையில் இந்தக் கருத்தை நிரூபித்த வர் எவரும் இலர்.

விஞ்ஞான முறையில் மக்களை வகுக்கும் முறையை ஹிப்பாகிரடஸ் (Hippocrates) என்பவரே முதன் முதல் ஆரம்பித்தார். அவரைத் தொடர்ந்து கேலன் (Galen), ஜேம்ஸ் (James) கால்டன் (Galten) கிரேப் பிலின் (Kraepelin), கிரஷ்மியர் (Kretshmer), யுங் (Juug) போன்ற அறிஞர்கள் மக்களைப் பலவகைகளில் வேறுபடுத்தித் தன்மை இயல்புகளை நிர் மாணித்தனர்.

காலன் என்பார் மக்களை உடலின் கண் உற்பத்தியாகும் இரசாயனப் பொருள்களுக்குத் தக, (chemicals) உள்ள இயல்புகள் அமைகின்றன என்று கண்டார். மனிதர்களுக்குள் பல்வேறு இராசாயன உற்பத்திகளில் மாறுதல்கள் இருக்கின்றன. அதன்படி காலன், ஒருவனது உடலிலே இரத்தம் அதிகமாயிருந்தால் அவனை ஸான்கின் (Sanguine) வகை என்றும், பித்தநீர் அதிகம் இருந்தால் கோளரிக் (Choleric) வகை என்றும், பிளம் என்ற பொருள் அதிகம் இருந்தால் பிளக்மாட்டிக் (Phlegmatic) வகை என்றும், ஸ்பிலீன் என்ற பொருள் அதிகம் இருந்தால் மேலன்கோலிக் (melancholic) வகை என்றும் வேறு படுத்தினர். அந்தந்த இரசாயனமும் திராவகமும் அதிகமாக உடலில் காணப்படுவது காரணமாகத் தன்மை இயல்புகளும் அமைகின்றன என்பதை வெளியிட்டார். அதாவது, இரத்த ஓட்டம் அதிகம் உடைய ஸான்கின் வகையினர் அதிக உற்சாகத்தோடும், சுறுசுறுப்போடும் இருப்பவர்களென் றும் அதிகமான பித்த நீரை உடைய கோளரிக் வகையினர் எப்போதும் கோபமாக இருக்கும் இயல்புடையவர்க ளென்றும், பிளக்மாட்டிக் வகையினர் சாந்தமாகவும் ஆனல் சுறுசுறுப்பற்ற வர்களாயும் இருப்பார்கள் என்றும், மேலன்கோலிக் வகையினர் வாழ்க்கை யில் விருப்பமற்று எப்போதும் துக்க மாக இருக்கும் இயல்புடையவர்கள் என் றும் வெளியிட்டார். காலன், வாழ்ந்த காலத்தில் உடல்நூல் கருத்து ஒன்று வழக்கி லிருந்தது. 'நரம்புகளினின் றும் ஏதோ திராவக நீர் வெளியாகிறது, அந்த நீரே உடல் இயங்குவதற்குக் காரணம்' என்ற அந்தக் கருத்துக்குத் தக, நரம்பு நீர் அதிகம் உடைய தனிப் பட்ட வகையினரையும் (Nervous Type) ஏற்படுத்தினர்.

காலன் மனிதர்களை வேறுபடுத்திய முறை சிறந்தது அல்ல என்று பின் கண்ட ஆராய்ச்சிகள் வெளியிட்டா லும், காலன் கூறியதில் சிறிது உண்மை இருக்கும் என்றே கூறலாம். ஏனெனில் இராசாயனங்கள் குணத் திற் கேற்ப நடத்தையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பது யாவரும் அறிந்ததே. இன்றேல், இரசாயனங் களை ஆதாரமாகக் கொண்ட தற் போதைய மருந்து வகைகள் பிரயோ சனமற்றுப் போகவேண்டு மல்லவா? நாம் மதுவை அருந்திய ஒருவனது உள்ள நிலையிலும் நடத்தையிலும் எவ்வளவு மாறுதல்கள் காண்கிறோம்! எனவே; நிரந்தரமாகவே அதிகமாக உற்பத்தியாகும் இராசாயனங்களும், திராவகங்களும் உடல் உள்ளிருந்து உள்ள இயல்புகளை மாற்றி அவை களின் குணங்களுக்குத் தக மனிதனின் நடத்தையையும் நிர்மாணிக்கிறது என்ற கருத்தில் உண்மை சிறிதளவு இருக்கிறதென்றே கூறலாம்.

மனிதர்களை மற்றொரு வகையாகவும் வகைப்படுத்தி யிருக்கிறார்கள்; அது

ஸ்தனிக் (Sthenic) வகையினர், ஆஸ்தனிக் (Asthenic) வகையினர் என்பதாகும். ஸ்தனிக் வகையினர் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும் இயல்பையும், கோபத்தை எளிதில் வெளியிடல், பிடிவாதம், காம இச்சை அதிகம் வெளியிடல் முதலிய இயல்புடையவர்களாவர்கள். ஆனால், ஆஸ்தனிக் வகையினர் பயந்த சுபாவமும், வாழ்க்கையில் விருப்பமற்று தூக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களும், தம்மையே தாழ்வாக நினைத்துக்கொள்ளும் இயல்புடையவர்களாவர்.

மனிதர்களது தன்மையை அறிய மற்றொரு வகையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இது மனிதனின் முக வெட்டைக் கொண்டதாகும். அதன்படி வேட்டை நாய்வகை (Grey-hound type) புல்டாக் வகை (Bull dog type) வாழைப்பழ வகை (Banana type) என ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வகையில் முக வெட்டுகளுக்குத் தகத் தன்மை இயல்புகள் அமைகின்றன என்பது அடிப்படையான கருத்தாகும். இந்த வகைப்பாடு சிறந்த முறையன்று.

அடுத்தபடியாக, பல்லாண்டு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு மக்களை வேறு வகைப்படுத்தி அமைத்தவர் கார்ல் ஜீ. யுங் (Carl G. Jung) ஆவார். யுங் மக்களை இரு வகையாகப் பிரித்தார். அவை இன்ட்ராவர்ட் (introvert) வகையினர் என்பதும், எக்ஸ்ட்ராவர்ட் (Extrovert) வகையினர் என்பதுமாகும். இவர் மக்களை இவ்வாறு வகைப்படுத்தியது அவர்களது முகவெட்டைக் கொண்டோ, அல்லது பிறந்த நாள் பலன்களைக் கொண்டோ அல்லது பொறிகள் வழியாக உள்ளத்தில் எழும் படிவங்களைக் கொண்டோ, அல்லது உடலமைப்பைக் கொண்டோ இல்லை. யுங்கின் வகைப்பாடு அவரது உளநூல் முறைக்குத்தக அமைந்திருக்கிறது. அது மக்களுக்குப் பிறப்பியல் பல் அமைந்துள்ள உள்ளச் சக்தியாகிய (Psychic energy) லிபிடோ (libido)[2] வின் தன்மைக் கேற்ப அமைந்திருக்கிறது. மக்களில் சிலர் லிபிடோவைச் சூழ்நிலையி லுள்ள பொருள்களின் மேலும் மற்ற மக்களின் மேலும் செலுத்தும் தன்மை வாய்ந்தவர்கள். மற்றும் சிலர் லிபிடோவைத் தன் உடல் மேலேயோ அல்லது யீகோ (Ego) மேலேயோ செலுத்திக்கொள்ளும் தன்மை வாய்ந்தவர்கள். லிபிடோவைப் புறத்தேயுள்ள பொருள்களிடத்துச் செலுத்தும் இயல்பு வாய்ந்தவர்களை எக்ஸ்ட்ராவர்ட் வகையினரென்றும், லிபிடோவைத் தமது யீகோ மேலேயே செலுத்தும் இயல்பு வாய்ந்தவர்களை இன்ட்ராவர்ட் வகையின ரென்றும் விளக்கினர். எக்ஸ்ட்ராவர்ட் வகையினரது நடத்தையாவது: எப்போதும் தம் போன்ற பிற மனிதர்களோடு வாழ விரும்புதலும், சமூக வாழ்வில் அதிகப் பற்றும், சுலபமாக எல்லோரிடமும் நட்புக்கொள்ளும் போக்கும், சுலபமாக எதையும் நம்பும் குணமும், நாடகம் சங்கீதம் முதலியவைகளில் பிரியமும், வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இன்றி யதேச்சையாய்த் திரிந்துவரும் இயல்புடையவர்களுமாவார்கள். இன்ட்ராவர்ட் வகையினர் மேற்கூறியவைகளுக்கு எதிர்மறையான இயல்புடையவர்கள். சிறப்பாகத் தன்னலமும், விடா முயற்சியும் அதிகம் உடையவர்கள் நுண்ணறிவிலும் (intelligence) சிறந்து விளங்குவார்கள். மேற்கூறிய இன்ட்ரா-எக்ஸ்ட்ராவர்ட் வகையினரைத் தெளிவுபடுத்தத் தற்போது கல்லூரியில் வாசிக்கும் இருவர்களை ஆராய்வோம்.

கா. என்பவனும் ப. என்பவனும் சகோதரர்கள். இவர்களுக்குள் வயதில் இரண்டு ஆண்டுகள்தான் வித்தியாசம். இந்த இரண்டு சகோதரர்கள், ஓரிரண்டு முறைகளில் சில நாட்கள் பிரிந்தது

2 லிபிடோவின் தன்மை (Libido) சூழ்நிலையில் மனிதனுக்கு ஆபத்து விளைவிக்கும் பொருள்களினின்றும் காத்துக் கொள்ளும் சக்தியை அளிப்பதாகும் (will to live)

தவிர, பிறந்தது முதற்கொண்டு ஒன்றாகவே வளர்ந்துவந்தார்கள். ஆகவே, இவரிருவரும் சூழ்நிலையினின்றும் ஒரே விதப் பலன்களை அடைந்திருக்கிறார்கள். இருவரும் நுண்ணறிவில் சிறந்து விளங்காவிட்டால் சாதாரண வகையை (average) சேர்ந்தவர்கள். ஒருவரோடு ஒருவர் சண்டையிடும் குணம் கிடையாது. இவர்கள் கல்லூரியாலும் மற்ற மக்களாலும் பெரிதும் விரும்பப்படுபவர்கள். இவ்வாறு இவர்கள் ஒத்திருந்தாலும், உள்ள அமைப்பிலும், தன்மை இயல்புகளிலும், நடத்தையிலும் மாறுபட்டு இருக்கிறார்கள். கா இன்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்தவன். பா எக்ஸ்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்தவன். இதிலே கூர்ந்து கவனிக்க வேண்டியது யாதெனில், அவர்களுடையபெற்றோர்களும் தனித் தனி வகையைச் சேர்ந்தவர்கள். தாய் எக்ஸ்ட்ராவர்ட்டும், தந்தை இன்ட்ராவர்ட்டும் ஆவார்கள். ஆனால் இன்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்த கா எக்ஸ்ட்ராவர்ட் வகையைச் சேர்ந்த தன் தாயை நிறம், உடலமைப்பு முதலியவைகளில் ஒத்திருந்தான்; எக்ஸ்ட்ராவர்ட் வகையைச் சார்ந்த ப இன்ட்ராவர்ட் வகையைச் சார்ந்த தன் தந்தையை ஒத்திருந்தான். இந்த உண்மை முன்னே கண்ட கிரஷ்மியர் முறையான உடலமைப்பைக் கொண்டு தன்மை இயல்புகளை நிர்மாணிப்பது என்பது தவறு என்று நிரூபிக்கிறது.

இனி, கா ப சகோதரர்களின் இயல்புகளையும் போக்கையும் ஆராய்வோம்:

ப என்பவன் மக்களிடத்துச் சுலபமாகப் பழகும் இயல்புடையவன்; புதிய மனிதர்களோடும் எளிதில் நட்புக் கொள்ளும் தன்மை வாய்ந்தவன்; பெருத்த கூட்டங்களில் கலந்து கொள்வதில் பயமோ, பீதியோ, வெட்கமோ அடைவதில்லை. கா ஆனவன் அதிகம் வெட்கமுடையவன். புது மனிதர்களைக் காண்பதோ அல்லது பொது இடங்களுக்குச் செல்வதோ என்றால் விருப்பமின்றித் தயங்கித் தயங்கியே செல்வான். பள்ளியி லிருக்கும்போது ஒரு முறை, பலர் தூண்டுதலுக்கு இணங்கி நாடகத்தில் கலந்துகொள்ளப் பயிற்சியும் எடுத்துக்கொண்டான். ஆனால், நாடகத்திலே அவன் நடிக்க வேண்டிய கட்டம் வந்ததும், அவன் இருக்கும் இடம் தெரியவில்லை. அவ்விடத்தை விட்டு ஓடி மறைந்து கொண்டான். பவிற்குச் சுத்தமானதும் பகட்டானதுமான உடை உடுப்பதில் தனிப் பிரியம் ஆனால் கா விற்கோ தான் உடுக்கும் உடைமேல் நாட்டம் கிடையாது. ப விற்குச் சித்திரம், சங்கீதம், சுவையான பண்டங்கள், அழகிய காட்சிகள் முதலியவைகளில் ஆர்வம் அதிகம். கா விற்குத் தன் சகோதரன் இது போன்றவைகளில் ஆர்வம் காண்பிப்பது 'பைத்தியக்காரத்தனம்' என்று ஏளனம் செய்வதும் உண்டு. கா ஆழ்ந்த கருத்துக்களை உடைய காவியங்களிலும், இலக்கியங்களிலும், தத்துவங்களிலும் பிரியம் உடையவன். ப பிற்கால வாழ்கையைப் பற்றிக் கவலையின்றிப் பட்டாம் பூச்சி வாழ்க்கை நடத்த, கா ஒவ்வொரு நாளும் தனது பிற்காலத்தைப் பற்றியே நினைத்து அதற்குத் தகத் தனது நடத்தையை மேற்கொள்ளுவான். சிற்சில சமயங்களில் உலகத்தின் விசித்திர அமைப்புப் பற்றி ஆராய்வான்; சுலபமாக எதையும் நம்பாது தர்க்க முறையைக் கொண்டு முடிவு அறிவான். வானத்தை நோக்கிப் பூமியைவிடப் பல்லாயிரம் மடங்கு பெரிதான கோள்களையும், விண்மீன்களையும் பற்றிச் சிந்திப்பான். அவைகளுக்கு முன் தன்னுடைய எளிய நிலைமையைக் கண்டு கவலையுறுவான். இத்தகைய கா வின் நடத்தை ப விற்கு விநோதமாக இருக்கும்; எள்ளி நகையாடுவான். ப உள்ளத்தில் எதையும் அடக்கிவைப்பதில்லை; தனக்குத்தோன்றியவைகளையெல்லாம் வெளியிட்டுவிடுவான். ஆனால், கா வோ சுலபமாக வெளியிடமாட்டான் ப விற்குக் கடவுள் பக்தி உண்டு; சகுனங்கள் முதலியவைகளில்

நம்பிக்கை உண்டு. கா விற்கு இவை களில் நம்பிக்கை கிடையாது. இவை கா விற்கும் ப வுக்கும் உள்ள பல வேறுபாடுகள்.

மேற்கூறிய இரு சகோதரர்களிடம் காணப்படும் தன்மை இயல்புகளே, பொதுவாக எல்லா எக்ஸ்ட்ராவர்ட் வகையினரிடமும், இன்ட்ராவர்ட் வகையினரிடையும் காணப்படும். இவைகளோடுகூட ஜேம்ஸின் (James) வகைப்பாடான, கடின மனமுடைய வகை (Tough minded), இளகிய மன முடைய வகை (Tender minded) என்பவைகளும் தங்களை உயர்ந்தவரா கக் கருதும் உளப்பான்மை யுடைய மக் கள் (Ascendance), தாழ்மையாகக் கருதும் உளப்பான்மை யுடைய மக் கள் (Submissive) என்ற வகைப் பாடுகளும் உளநூலறிஞர்களிடம் உபயோகப்பட்டு வருகின்றன. இவைக ளெல்லாம் இன்னும் ஆராய்ச்சி நிலை யில் இருப்பதால் திட்டமான முடிவு கூறுவதற் கியலாமல் இருக்கிறது.

இதுகாறும் ஆராய்ந்த பல்வேறு வகைப்பாடுகளில் யூங்கின் வகைப் பாடே பெரும்பாலான அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. யூங் இன்ட்ராவர்ட் எக்ட்ஸ்ராவர்ட் வகை களோடு இன்னொரு வகையும் நிர் மாணித்தார். அந்த வகையினரை ஆம்பிவர்ட் (Ambivert) என்று அழைத்தனர். இதற்குக் காரணம், பெரும்பாலான மக்கள் இன்ட்ராவர்ட் இயல்புகள் சிலவற்றையும், எக்ஸ்ட் ராவர்ட் இயல்புகள் சிலவற்றையும் உடையவர்களா யிருந்தார்கள். இந்த எக்ஸ்ட்ராவர்ட்—இன்ட்ராவர்ட் முறை நடைமுறையிலும் உபயோகிக்கப் பட்டு வருகிறது. பல்வேறு உத்தி யோகங்களுக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டு மானால், அந் தந்த உத்தியோகங்களது நிலைமைக்குத் தக, எக்ஸ்ட்ராவர்ட் மனிதரையோ இன்ட்ராவர்ட் மனிதரையோ தேர்ந்தெடுப்பார்கள். ராணுவத்தில் ஒரு அதிகாரிப் பதவிக்கு ஆள் தேர்ந் தெடுக்க வேண்டுமானால் உயரம், உடற்கட்டு, நுண்ணறிவு முதலியவை களோடு அவனிடம் எக்ஸ்ட்ராவர்ட் டின் தன்மை இயல்புகள் இருக்கின் றனவாஎன்று நோக்குவார்கள். அதே போன்று ஆராய்ச்சித் துறையில் வேலைசெய்ய ஆள் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் நுண்ணறிவு முதலி யவைகளோடு, அவனிடம் இன்ட்ரா வர்ட்டின் இயல்புகள் இருக்கின்றனவா என்று நோக்குவார்கள். பொதுவாக மக்களுடைய எக்ஸ்ட்ராவர்ட்டின் இயல்புகள் எல்லாம் உடைய மனி தனையோ அல்லது இன்ட்ராவர்ட்டின் இயல்புகள் யாவையும் உடையவனையோ காண்பது எளிது. எக்ஸ்ட்ராவர்ட்டின் இயல்புகள் இன்ட்ராவர்ட்டின் இயல்பு களைவிட அதிகம் ஒருவன் உடை யவனாக இருந்தால் அவனையே எக்ஸ்ட் ராவர்ட் என்று கூறுவார்கள். இன்ட் ராவர்ட்டுக்கும் இந்த முறை அடுக்கும். அப்படித் தவறி ஒருவர் ஒருவகைக் குரிய எல்லாக் குறிகளையும் உடையவரா யிருந்தால் அவரைப் பிறழ்வானவன் (abnormal) என்றே கூறலாம்.

யூங்கின் முறையை அறிஞர் பின் பற்றுவதால் அது சிறந்த முறை என்று சொல்ல முடியாது. மனிதவாழ்க்கை மிகவும் சிக்கலானது. அதை இது போன்ற அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்துவது எளிதன்று. ஏனெனில் மிருகங்களுக்கும் மற்றப் பொருள்களுக்கும், நாம் விரும்பும் சூழ்நிலையை உற்பத்திசெய்து, அதன் பயனாக ஏற்படும் விளைவுகளைத் தெளி வாக ஆராயலாம். ஆனால், மனிதனி டத்து அதுபோன்ற சோதனைகளை நடத்துவது என்பது இயலாத காரியம். விஞ்ஞானம் முன்னேற முன்னேற, ஒருவேளை இந்தக் குறையும் தீர்ந்து மனிதனது தன்மையைத் தெளிவுற அறிந்து, அதன்படி சமூகத்தை அமைத்து, மனிதன் உயர்ந்த சமூகத் தில் சிறக்க வாழலாம்.

சாவா இலக்கியம்

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A.

இந்த உலகில் தோன்றிய எந்தப் பொருளும் கால தேவனின் கையில் சிக்கி அழியாமல் இருப்ப தில்லை. நிலையாமையே பொருள் களின் அடிப்படையாய் அமைந் துள்ளது இப் பரந்த உலகில். இத் தகைய உலகிலும் தாம் நிலைப்ப தற்குரிய வழியை, ஆதி மனிதன் முதல் யாவரும் நாடியே வந்தனர். இந் நாட்டத்தில் ஓரளவு வெற்றி யும் பெற்றனர். தம் பூத வுட லோடு நிலைத்து வாழ வழி இன்மு யினும், புகழையாவது நிலைநிறுத்தி விட்டுச் சாவ விரும்பினர், மனித ருள் சிலர். இதனாலேயே போலும் 'மன்னு உலகத்து மன்னுதல் குறித் தோர் தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனர்' என்ற புறப்பாடல் தோன்றிற்று. தன் புகழை நிறுத்திவிட்டு இறந்த மனிதன் ஒருவாறு சாவை, காலதேவனை, வென்றவனே ஆவான். சாவை வெல்லும் புகழைத் தேட மனிதன் கைக் கொண்ட வழிகள் பல. அவற்றுள் ஒன்று சிறந்த இலக்கி யத்தைப் படைத்து உலவ விட்டமை யாகும். படைத்த மனிதன் இறந்து பன்னெடு நாட் கள் கழித்தும் அவ் விலக்கியம் நின்று நிலவலாயிற்று.

எதிர் பாராதவைகள் நிகழ்தலே இவ் வுலகின் இயல்பு. தனக்குப் பின் நிலைக்கும் என்ற கருத்துடன் மனிதன் விட்டுச் சென்ற இலக்கி யங்களிற் சிலவற்றைக் கூடக் கால தேவனின் வலை பற்றி இழுக்க லாயிற்று. உலகிடைத் தோன்றிய நூல்கள், இலக்கியங்கள் என்ற அனைத்தும் நிலைபெற வில்லை. ஒரே காலத்தில் தோன்றிய அனைத் துங் கூட நிற்க வில்லை. ஒரே மனிதன் தோற்றுவித்த நூல்கள் அனைத்தும் நின்றன என்று கூடக் கூறுதற் கில்லை. இத்தன்மை ஓர் உண்மையை அறிவுறுத்துகிறது.

உலகத்தில் தோன்றி, வாழ்ந்த பல்வேறு உயிரினங்களுங் கூட நிலை பெற்று வாழ வில்லை. பல இனங் கள் அழிந்தன; பல மாறின; பல புதிய வடிவுடன் நிலை பெற்றன. இத்தகைய இயல்பி லிருந்து உயிர் நூலார் ஒரு சட்டம் வகுத்தனர். அதனை இயற்கையின் மாற்ற முடி யாத சட்டங்களில் ஒன்று என்றுங் கூறினர். அதுவே 'நிலையேற்றுச் சட்டம்' எனப்படும். 'உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் தன் நிலைபேற்றிற்கு ஓயாது போரிடுத லும், அப் போரில் வலிமை மிகுந் தவை எஞ்சுதலும் இயற்கை' என் பதே அம் முடிபு ஆகும். சட்டம் உயிர்கட்கு மட்டுமல்லாமல் இலக் கியங்கட்கும் கூட ஓரளவு பொருந் தும்.

இது வரை ஒவ்வொரு மொழியி லும் ஆயிரக்கணக்கான நூல்கள் தோன்றியுள்ளன. நம் தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் எத்தனை இலக்கியங்கள் இன்று நிலைத்துள்ளன? கிறிஸ்து தோன்று வதற்கு முன்னர்த் தோன்றிய பல பாடல்கள் இன்னும் வாழுகின்றன.

ஆனல் இவற்றின் பின்னர்ப் பல காலங் கழித்துத் தோன்றிய அநேக நூல்கள் இருந்த சுவடுந் தெரியாமல் மறைந்து விட்டன. பழம் பாடல்கள் இன்னும் வாழக் காரணம் என்ன? இவை தோன்றிய நாள்தொட்டு இன்று வரை எத்தனை வேற்று நாகரிகங்கள், காற்றுக்கள், தமிழ் நாட்டில் புகுந்தன? எத்தனை சமயக் கோட்பாடுகள் புகுந்தன? என்ருலும் என்ன? இவ் விலக்கியங்களின் நிலையேற்றை அவ் வேற்று நாகரிகங்கள் ஒன்றுஞ் செய்ய இயல வில்லை. முன்னர்த் தோன்றிய இவை வாழப் பின்னர்த் தோன்றிய நூல்கள் அழியக் காரணம் என்ன? தமிழரின் கவனக் குறைவால் ஓரளவு அழிந்தமை உண்மைதான். ஆனல் பல இலக்கியங்கள் நிலையேற்றுக் குரிய பண்பாட்டைப் பெற்றிருக்க வில்லை; அதனுலேயே மறையலாயின. இரண்டாம் நூற்ருண்டில் தோன்றிய சிலப்பதிகாரமும் பத்தாம் நூற்ருண்டில் தோன்றிய சிந்தாமணியும் வாழ இவற்றின் பின்னர்த் தோன்றிய வளையாபதி முதலியவை அழிவானேன்? நிலையேற்றுப் போராட்டத்தில் சிலப்பதிகாரம் போன்றவையே வெற்றி பெற்றன போலும்!

உயிரினங்களில் நிலையேற்றுக் குரிய பண்பாடுகளாக எவை உள்ளன என்று காண்பது இன்றியமையாத தாகிறது. கால தேச, வர்த்தமானங்கட் கேற்ப மாறுபட்டு உதவக் கூடிய 'தழுவல் இயல்பே' (Adaptability) நிலையேற்றுக்கு மூல காரணம். இனி, இலக்கியங்களிலும் இத்தகைய இயல்பு உண்டோ என்று காண்டல் வேண்டும். ஒரு வகையில் நோக்குமிடத்து இவ் வியல்பு நிலைத்த நூல்களிடம் இருக்கத்தான் செய்கிறது. ஆனல் உயிர்களிடம் காணப் பெறும் இவ் வியல்புக்கும் நூல்களில் காணும் இவ் வியல்புக்கும் ஒரு சிறு வேறுபாடு உண்டு. புதிதாக ஓர் இலக்கியம் ஒரு காலத்துத் தோன்றுவதாக வைத்துக் கொள்வோம். எந்தக் காலத்தில் அது தோன்றுகிறதோ அந்தக் காலத்திற்கு ஏற்ற பல கருத்துக்களைக் கொண்டே அது இருக்கும் என்று கூறத் தேவை இல்லை. எத்தகைய மக்கள் இனத்திற்காக அது தோற்றுவிக்கப் படுகிறதோ அக் கூட்டத்தாரிடை அதன் செல்வாக்கு உயர்ந்து காணப்படும். சிற்சில சமயங்களிற் ருேன்றும் சில நூல்கள் எல்லையற்ற செல்வாக்குப் பெற்று மிளிர்தலையுங் காணலாம். அந் நூல் தோன்றுங் காலத்தில் மக்கள் சமுதாயத்தை என்ன எண்ணம் பிடித்து ஆட்டுகிறதோ, அவ் வெண்ணத்தை அடிப்படையில் கொண்டு தோன்றும் ஒரு நூல் செல்வாக்குப் பெறுதலில் வியப்பு ஒன்று மில்லை. இங்ஙனம் அதிகச் செல்வாக்கை, ஒரு நூல் ஒரு காலத்தில் பெற்று விளங்குவதால் அந் நூல் சிறந்தது என்று கூறுவதற் கில்லை. உண்மையில் அது மிகச் சாதாரணமான ஒன்ருகக் கூட இருக்கலாம். புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் தமிழ் நாட்டில் இன்னுஞ் சில ஆயிரம் பிரதிகட்கு மேல் செலவாக வில்லை. ஆனல் கதைப் புத்தகங்களும், கதைகளையே கொண்டு வெளிவரும் திங்கள் தாள்களும் பல ஆயிரக் கணக்கில் செலவாகின்றன. இதனுல் இவை சிலப்பதிகாரத்தை விடச் சிறந்தவை என்று யாருங் கூற முன்வருவ தில்லை யல்லவா? இத் திங்கள் தாள்களைப் போலவே சில நூல்களும் தோன்றுகின்றன. இத்தகைய நூல்கட்கு இன்றையத் தமிழ் நாட்டில் பஞ்சமே இல்லை. புற்றீசல்கள் போலத் தோன்றும்.

இந் நூல்கள் அவ் வீசல்கள் போலவே மறைந்தும் விடும். சில ஆண்டுகள், அல்லது ஒரு தலை முறை கழிந்த பின்னர் ஒருவரும் இத்தகைய நூல்களைக் கண்ணெ டுத்துப் பாரார்; அதோடு மட்டு மின்று, இதனை விரும்பிக் கற்ற தங்கள் முதல் தலைமுறையார்க ளின் மதியைக் கண்டு வியப்பும் அடைவர்?

இதிலிருந்து அறியப்படும் உண்மை ஒன்றுண்டு. நூல் மட்டு மன்று; எந்த ஒரு கலையும் தான் தோன்றுங் காலத்து வாழும் மக் கள் இனத்தின் மனப்பான்மைக்கு இரை யோடுவதாயின் அக்கலை நீண்ட நாட்கள் வாழ முடியாது. மக்கட் கூட்டத்திற்குப் பொது வான சில அடிப்படைப் பண்புகள் உண்டு. இவற்றையல்லாமல் சில உணர்ச்சிகள் காட்டாற்று வெள் ளம் போல் வந்து சில சமயங்களில் மக்களைப் பிடித்தாட்டுவ துண்டு. வெள்ளம் வருகிற வேகமும் அது அடங்குகிற வேகமும் கற்பனைக் கடங்காத விரைவில் முடிந்து விடும். அத்தகைய உணர்ச்சிப் பெருக்கில் தோன்றும் நூல்களும் அவ்வுணர்ச்சி அடங்கியவுடன் பய னற்றுப் போய் விடும். இத்த கைய நூல்களை ஆக்குபவர் கலை ஞருமல்லர்; இவர் ஆக்கும் நூல் கள் கலைகளும் அல்ல. இயந்திர சாலையில் மக்கள் உபயோகத்திற் காகச் சில பொருள்கள் தயாரிக் கப் படுகின்றன. அவற்றிக்கு நிலைத்த தன்மை ஒன்றும் இல்லை. வாங்குபவர் விருப்பம் போல் தாயாரிக்கப்படும் பொருள்களின் தன்மை மாறுபடும். இத்தகைய உற்பத்திப் பொருளின் வகையைச் சேர்ந்தவையே ஆகும் முற் கூறிய நூல்கள். இத்தயை நூல் கள் தாம் தோன்றுங் காலத்தில் சமுதாயத்திற்கு ஏதாவது நன்மை விளைவிக்குமா என்பது ஐயத்திற் கிடமானது. ஆனால் தம் காலத் தின் பின்னர் இவை வாழுமாயின் சமுதாயத்திற்குத் தீங்கையே விளைக்கும்.

இனி யொருவகை நூல்கள் உண்டு. இவையும் மக்கட் பண்பை அடிப்படையில் கொண்டே தோன்றுகின்றன. இவற்றால் தீமை ஒன்றும் இல்லை. இவற்றைக் கற்பதால் கற்பவர் காலம் வீணாகக் கழியுமே தவிர வேறு தீமை ஒன்றுமில்லை. இவற்றை மேனாட்டுப் பெரியா ரான 'ரஸ்கின்' காலம் போக்கும் நூல்கள்' என்று குறித்தார்.

இவை இரண்டினும் வேறு பட்ட ஒரு வகை நூல்கள் உண்டு. இவையே என்றும் நிலைத்தி ருக்கும் 'இலக்கியங்கள்' எனப் பெறும். இவை சாவா இயல்பு வாய்ந்தவை. இத்தகைய இலக்கி யங்களின் அடிப்படை முன்னர்க் கூறியவற்றோடு முற்றும் முரண் பாடானது. இவை யாரையும் திருப்திப் படுத்தத் தோன்றியவை அல்ல. ஆசிரியனுடைய வறுமை முதலியவற்றைப் போக்கக் கூட இவை பயன் படுவதில்லை.

இன்று விலை மதிக்க முடியாத பல இலக்கியங்கள் அவை தோன் றிய காலத்து நினைக்கவும் முடி யாத குறைந்த விலைக்கு விற்கப் பட்டன. இன்னும் கூறப் போ னால் சில இலக்கியங்கள் அவற் றைத் தோற்றுவித்தவர் இடர்ப் படவும் காரணமாயின. கண்ண கியின் வரலாற்றைச் சாத்தனார் மூலம் கேட்டார் இளங்கோவ டிகள். கேட்கும் பொழுதே அதில் ஈடு பட்டு 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று கூறினார். ஆனால் அவ் வரலாறு முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரியது. அங்ஙன

மிருக்கச் சேரர் குலத் தோன்ற லாகிய அவர், ஏனைய சோழ, பாண்டியரைப் புகழ்வது உலகிய லுக்கும், சேரர் குடிக்கும் பொருத்த மில்லை என்பதைச் சாத்தனுர் உணர்ந்தார். உடனே, இளங்கோவைப் பார்த்து 'முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரியது அடிகள் நீரே அருளுக?' என்று வினவுகிருர். இதனுல் விளையும் பொருத்த மின்மை அறிந்தும் இளங்கோ தம் கலைக் கோயிலைக் கட்டி முடித்தார் என்ருல் இவ்விலக்கியங்களின் பெருமையை என்னென்று புகழ்வது!

இவ்வாறு தோன்றிய இவ்விலக்கியங்கள் இத்தனை காலங் கழித்தும் உயிருடன் நின்று நிலவுகின்றன. அம்மட்டோ? தோன்றிய காலத்தில் மக்கட் சமுதாயத்தில் என்ன வரவேற்பைப் பெற்றனவோ அதே வரவேற்பை இன்றும் பெறுகின்றன. அன்றும் இன்றும் அது நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரமே யாகும். ஆனுல் அன்று இவ்விலக்கியங்களை வரவேற்ற மக்கள் வேறு; இன்று வரவேற்கும் மக்கள் வேறு. ஏணி வைத்தாலும் எட்டாத அளவு வளர்ந்து, முற்றிலும் புதுமையில் வந்த இன்றைய மனிதர்களிடமும் இவ்விலக்கியங்கள் பழைய வரவேற்பைப் பெறுகின்றன வெனின் அதன் காரணம் என்னை? நாளுக்கு நாள் நம் மனம் மாறுபாடு அடைவதைக் கண்டு கொண்டுதான் இருக்கிருேம். பத்தாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய ஒன்றை இன்று உலகம் பழைமை என்று தள்ளி விடுகிறது; வெறுக்கவும் முற்படுகிறது. காலையில் வடித்த சோற்றை மாலையில் உண்ண வெறுக்கிற இந்த உலகில், சில இலக்கியங்களை மட்டும் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கழித்தும், மக்கள் படித்துப் போற்றுவதன் கருத் தென்னை? ஒருவேளை இம் மக்கள் மன மாறுபாட்டிற்கேற்ப இவ்விலக்கியங்களும் புதுப் புதுக் கோலங்கள் புனைந்து மகிழ்விக்கின்றனவா? அவ்வாறு மில்லையே! அன்று இளங்கோ நாட்டிய கலைக் கோவிலும் கம்பன் கண்ட இலக்கியப் பூங்காவும் இன்றும் பழைய வடிவுடன் தாமே யுள்ளன. பின்னர் என்ன காரணத்தால் இவை நின்று நிலவுகின்றன? இவை தோன்றிய நாளிலிருந்து எத்தனை வகையான மன மாறுபாட்டுடன் இவற்றைக் கற்றிருப்பர். அவர்கள் அனைவரும் தங்கள் கருத்து வேறுபாட்டிற்கும் மேலாக இவற்றில் ஏதாவது மகிழ்ச்சி ஊட்டும் இயல்புகளைக் கண்டு தாமே இருப்பர்? இத்துணைப்பேரில், பெரும்பாலானவர் இவ்விலக்கியங்களைப் பயனற்றவை என்று கண்டிருந்தால், சமுதாயத்திற்குத் தீங்கிழைப்பவை என்று நினைந்திருந்தால் இவற்றை ஒதுக்கித்தள்ளி இரார்களா? நூற்றுக் கணக்கான தலை முறைகளில் மாறிக்கொண்டும், வளர்ந்து கொண்டும் வந்த அவர்கள் அனைவருடைய மனப் பண்புகட்கும் இவை தக்க மகிழ்ச்சி அளித்து வந்தமையாற்ருனே இன்றும் நின்று நிலவுகின்றன? இவர்கள் அனைவருடைய 'திறனுய்வு' என்கிற உலையிற் பெய்தும் கூட இவை தப்பி வெளிவந்துள்ளன. திருக்குறள் போன்ற இலக்கியங்கள், தமிழ் நாட்டாரேயன்றி வேற்று நாட்டாரும் ஆய்ந்து சுவைத்து, சுவைத்து இன்புற்றவை அன்ருே? அவர்களுடைய வேருன நாகரிகம், மனப்பண்பு என்ற சோதனைக்குழாய்களிலும் பெய்யப்பட்ட இவ்வரிய நூல்கள் தாம் சாவா இலக்கியம் (classics) என்னும் பெயரைத் தாங்கி நிற்பவை. முன் ஒரு காலத்தில் திருக்

குறளை வரவேற்ற ஒருவர் 'சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய வந்த இருவினைக்கும் மாமருந்து' என்று கூறி மகிழ்ந்தார். அச் சொற்கள் இன்றும் உண்மையாகத்தாமே உள்ளன. இலக்கியத்தின் இத்தன்மையைத்தான் 'ஹ்யூம்' என்ற பெரியார் பாராட்டுகிறார். 'காலாந்தரத்தில், பல்வேறு வகைப்பட்ட மக்கட்கும் இன்பம் ஊட்டி அவர்களுடைய குறுகியவும், பரந்தவுமான மனநிலைகளுக் கெல்லாம் அழியாமல் நின்று, அவர்களுடைய அறியாமை, பொறாமை முதலியவற்றிலும் அழியாமை நிற்கின்ற இலக்கியங்களின் பெருமை என்னே?' என்று அவர் விளக்குகின்றார்.

இத்தகைய இலக்கியங்கள் காலதேவனை வெற்றி கொள்வதின் ரகசியம் என்ன? வளர்ந்து கொண்டு செல்லும் மக்கட் பண்பிற்கு ஏற்பப் புதிய கருத்துக்களை உள்ளடக்கி நிற்கும் இயல்பு இவற்றில் ஓரளவு உண்டு. அவ்வக் கால மக்கட்கும் ஓர் அருங் கருத்தை அளிக்கும் இயல்பும் இவற்றிற்கும் உண்டு. எல்லாக் காலத்தும் வாழும் மக்கள் இனத்திற்கு வேண்டிய சில நல்ல பயன்களும் கருத்துக்களும் இவற்றில் இருக்கின்றன. உதாரணமாகச் சிலப்பதிகாரம் மூன்று பெருங் கருத்துக்களைப் புகட்டத் தோன்றிற்று. இன்னும் அந்நூல் கூறிய கருத்துக்கள் உண்மையாகவே உள்ளன. இங்ஙனம் தனிப்பட்ட கருத்துக்களை உட்கொண்டு தோன்று இலக்கியங்களும் உண்டு. பட்டினப்பாலை என்ற தொரு இலக்கியம் உண்டு. கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற கலைஞர் கரிகாற் பெருவளத்தான் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தை வருணித்துள்ளார் இந்நூலில். அவர் கூறிய அப்பட்டினம் இன்று இல்லை; கரிகாலன் இலன்; அதில் குறிக்கப்பெற்ற மக்களும் இல்லை. என்றாலும் பட்டினப்பாலை இருந்து இன்பமூட்டித்தான் வருகிறது. இதன் காரணத்தை ஆயும் பொழுது முன்னர்க் கூறிய உயிர் நூல் தத்துவம் சிறிது மாறுபடுகிறது. அத் தத்துவத்தின் படி உயிர்கள் 'தழுவல் இயல்பு' பெற்றதால் நிலைபெறுகின்றன என்று கூறினோம். பட்டினப்பாலையின் நிலையேற்றுக்குக் காரணம் இவ்வியல்பில்லை. உருத்திரங் கண்ணனார் கண்ட பட்டினமே நூலில் கூறப் பெற்றிருப்பினும் கூறும் முறையில் அது என்றும் நிலை பெறத் தக்க சிறப்பை அடைகிறது. உருத்திரங்கண்ணனார் தமக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பின்னர் வாழப்போகும் மக்கள் என்ற இரு சாராரையும் பிடித்து ஆட்டும் இயல்பு, உணர்ச்சி, பண்பு, போராட்டம், மகிழ்ச்சி, துக்கம் என்ற பொதுத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு தம் கவிதையை ஆக்கியிருக்கிறார் ஆகலின் அது இன்றும் நிலைக்கிறது; நாளையும் நிற்கும். மனித சமுதாயம் எவ்வளவு வளர்ந்தாலும், மாறினாலும் இவ்வடிப்படைத் தன்மைகள் மாறப்போவதில்லை. மக்கள் மக்களாக மாறுகிற வரை இவ் விலக்கியம் சுவை யுடையதாகவே இருக்கும். காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த வலைஞர்களைப்பற்றியே உருத்திரங்கண்ணனார் பாடினும், மேற்கூறிய பொதுத் தன்மை காரணமாக நாம் இன்றும் அதனை அனுபவிக்க இயலுகிறது. காலதேவன் மக்கள் இனத்தையே அழித்தால் ஒழிய இப்பொதுத் தன்மையை அழிக்க இயலாது. எனவே இத் தன்மையாகிய அடிவாரத்தில்

முகிழ்த்த இலக்கியங்களையும் ஒன்றும் செய்ய முடியாது. கம்பனுடைய பேரிலக்கியத்திலும், சேக்கிழாருடைய அருங்காப்பியத்திலும் நாட்டு வருணனை முதலிய பகுதிகளைக் காண்கிறோம். ஆழ்ந்து நோக்கினால் அவை தனிப்பட்ட நாட்டை அல்லாமல் என்றும் காணப்படும், நாட்டின், அழியா இயல்புகளையே பாடிச் செல்வதைக் காணலாம்.

இது வரைக் கூறியவற்றிலிருந்து ஒரு நூல் சிறந்த இலக்கியமா என்று காண்பதற்குக் காலமே சிறந்த கருவி போலும் என்று நினைக்கத் தோன்றும். இது ஓரளவு உண்மைதான். நம் காலத்தில் தோன்றிய ஓர் இலக்கியத்தை விருப்பு, வெறுப்பு நீக்கி ஆய்தல் கடினம். இத்தகைய இக்கட்டான நிலையில் நவீன இலக்கியங்களைக் கற்பவர் ஒவ்வொருவரும் அவரவர் திறனாய்வுச் சக்தியையே பயன்படுத்தல் வேண்டும். அந்நாள் தோன்றின எவையும் பழைமை பற்றிச் சிறந்தவை என்றும், இந்நாள் தோன்றிய எவையும் புதுமை பற்றிச் சிறப்பில்லன என்றுங் கூறுதல் தவறு. நிலைத்து விட்ட காரணமே சிறப்புக்கு அறிகுறி என்றால் 'பழமொழி' 'ஆச்சாரக் கோவை' போன்ற நூல்களும் இலக்கியம் என்ற பெயருக்குப் பங்கு போட வந்து விடும். எனவே சிறந்த இலக்கியங்களை ஆய்ந்த அறிவின் துணை கொண்டு நவீன நூல்களை ஆய்ந்து பயன் துய்த்தல் வேண்டும். ஆனால் அவை சாவா இலக்கியமா என்ற வினாவை முடிவு செய்யக் காலம் ஒன்றாலேயே முடியும்.

ஒற்றுமை

"உம்ம பாடு பரவாயில்லையே, ஐயா! நீரும் உம் மனைவியும் மிக ஒற்றுமையாக இருக்கிறீர்களே! அது எப்படி? உமக்கும் அவளுக்கும் கருத்து வேறுபாடே கிடையாதோ?"

"என் கிடையாது? ஏராளமாக உண்டு."

"பின்னே எப்படி ஒற்றுமையாக இருக்கிறீர்கள்?"

"அங்கேதான் ரகசியம் இருக்கிறது. என் கருத்து வித்தியாசத்தை அவளிடம் காட்டிக்கொள்வதே இல்லை."

— தேன் அடை

சோழர் வரலாற்றிலே மிகச் சிக்கலான ஒரு பகுதியைக் கல்வெட்டுகளின் ஆதாரங்கொண்டு சற்று விரிவாக ஆராய்கிறார், இக்கட்டுரையாளர். முதலாம் பராந்தக சோழனுக்குப் பின்னர்ச் சோழ மண்டலம் பிளவு பட்டதும், அப்பிளவு ஏற்படுதற்கு இருந்த சூழ்நிலை ஆதாரமும் பிறவும் இதிலே காணலாம்.

கன்னரதேவனும் :: கண்டராதித்தனும்

திரு. தி. நா. சுப்பிரமணியன்

தமிழ் நாட்டு மன்னர்களிலே கடல் கடந்த பிரதேசங்களிலும் பெரும் புகழும் பரவிப் பெருமையுடன் வாழ்ந்தவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னர்களும் தஞ்சாவூரிலிருந்து அரசுபுரிந்த சோழ சக்கரவர்த்திகளுமே ஆவர். தஞ்சையில் சோழர் அரசு கி. பி. 9ம் நூற்றாண்டின் மத்தியில் நிறுவப் பெற்று நானூறு ஆண்டுகளுக்குமேல் நிலைத்திருந்தது. அதிலே முதல் நூறு ஆண்டுகள் அந்த அரசுக்கே ஒரு சோதனைக் காலம் என்று சொல்லலாம். அப்போதுதான் அது பல எதிர்ப்புகளையும் தாங்கி நிலை நின்று உருப்பெற்றது. கி. பி. 985ல் சிங்காதனம் ஏறிய முதலாம் ராஜராஜ சோழன் காலத்திலிருந்து அதன் புகழ் எண்டிசையும் பரவ ஆரம்பித்து விட்டது. அதற்கு முற்பட்ட காலத்தின் சரித்திரம்தான் இன்னும் தெளிவாக நிர்ணயிக்கப்பட வில்லை.

தஞ்சாவூரில் சோழர் அரசை ஏற்படுத்தியவன் விசயாலயன் என்று சோழர் சரித்திரங்களும் சாசனங்களும் ஒரு முகமாகக் கூறுகின்றன. அவன் மகன் ஆதித்தியன் காலத்திலேதான் தொண்டை நாடும் சோழர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டது. அவன் மகனான முதற் பராந்தக சோழனே பழைய சோழர்களில் பிரசித்தி பெற்றவன். சாசனங்களிலே அவன் 'மதுரை கொண்டவன்' என்றும் 'மதுரையும் ஈழமும் கொண்டவன்' என்றும் குறிக்கப்படுகிறான். வீர சோழன் என்றும் புகழ் பெற்றவன்.

அவன் கி. பி. 907-ல் சிங்காதனம் ஏறினான்; நாற்பத்தெட்டு ஆண்டுகள் அரசு செலுத்தியிருக்கிறான். இது சித்தூர் ஜில்லா, புங்கனூர் ஜமீனைச் சேர்ந்த வனமலதின்னே என்னும் இடத்தில் கிடைத்துள்ள கன்னடக் கல்வெட்டில் காணப்படும், 'மதுர கொண்ட கோபரகேசரி நால்வத்தெண்டாகே' என்னும் பகுதியால் நன்கு விளங்குகிறது (1931-32-ஆம் ஆண்டு 200 நெ. சாசனம்). இதனால் அவன் கி. பி. 954-5 வரையில் அரசு செய்திருக்கிறான் என்பது தெளிவாகும்.

அவனுக்குப் பிறகு, ராஜாதித்தியன், கண்டராதித்தியன், அரிஞ்சயன், பராந்தகசுந்தரசோழன், ஆதித்தியகரிகாலன், மதுராந்தக உத்தமசோழன், முதலாம்

ராஜராஜசோழன் ஆகியவர்கள் முறையே அரசு செலுத்தினார்கள் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள், லீடன் பட்டயம் முதலியன தெரிவிக்கின்றன. அவற்றினின்றும் பிற 16 சோழ சாசனங்களினின்றும், கிடைக்கும் சோழ மன்னர்களின் வமிசாவளி பின் வருமாறு:

பரகேசரி பராந்தகன் (பட்டம் கி. பி. 907—954)
- ராஜாதித்தியன் (949-ல் தக்கோலம் சண்டையில் இறந்தான்.)
- கண்டராதித்தியன்
  - மதுராந்தக உத்தம சோழன் பரகேசரி, (969-பட்டம்)
- அரிஞ்சயன்
  - பராந்தக சுந்தர சோழன் ராஜகேசரி
    - ஆதித்திய கரிகாலன் பரகேசரி
    - முதலாம் ராஜராஜசோழன் ராஜகேசரி (985-பட்டம்)

மதுராந்தக உத்தம சோழன் கி. பி. 969–70ல் சிங்காதனம் ஏறிப் பதினாறு ஆண்டுகள் அரசு செலுத்தியிருக்கிறான். அவனுக்குப் பிறகு, 985ன் மத்தியிலே முதலாம் ராஜராஜசோழன் முடிசூட்டப் பெற்றான். இவ்விருவரையும் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் தெரிவிப்பது:

"தேவலோகத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையால் ஆதித்தியன் அஸ்தமித்து விட்டான். (மறைந்து விட்டான்). கலியினால் நேரிட்ட கார் இருளை நீக்கவேண்டுமென்று அவனுடைய குடிமக்கள் அருண்மொழி வர்மனை வேண்டிக்கொண்டும் க்ஷத்திரிய தர்மத்தை நன்றாக அறிந்த அவன், தன் சிற்றப்பனுக்கு நாட்டின் மீது ஆசையிருக்கும் வரையில் உள்ளூறக்கூடத் தான் அந்த ஆசையைக் கொள்ளவில்லை."

இதனால் பராந்தகனுக்குப் பின்னர் அரசாண்டவர்களாகக் கருதப்படும் ராஜாதித்தியன், கண்டராதித்தியன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்தியன் ஆகியவர்கள், மதுராந்தகன் சிங்காதனம் ஏறிய கி. பி. 969–70-ஆம் ஆண்டுக்கு முற்பட்டவர்களாகவே இருத்தல்வேண்டும்.

இவர்களுள் ராஜாத்தியன், தன் தந்தையான பராந்தகன் காலத்திலேயே இறந்துவிட்டான். பராந்தகன் ஆட்சியின் கடைசிக் காலத்தில், ராஷ்டிரகூட மன்னனான கன்னரதேவன் எனப்படும் மூன்றாம் கிருஷ்ணன் சோழ நாட்டின்மீது படையெடுத்து வந்தான். கி. பி. 949-ல் தக்கோலத்தில் கன்னரதேவனுடன் நடத்திய போரில் ராஜாதித்தியன் இறந்து போனான். அதற்குப் பிறகு, பராந்தகன் ஐந்தாறு வருஷகாலம் உயிருடன் இருந்திருக்கிறான்.

ஆகவே, ராஜாதித்தியனுக்குப் பிறகு, சோழ சிங்காதனம் ஏறியவர்களான கண்டராதித்யன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்தியன் ஆகிய, நால்வரும், 949-க்கும் 969-க்கும் இடைப்பட்ட இருபது வருஷ காலத்துக்குள்ளாகவே அரசு செலுத்தியிருத்தல் வேண்டுமென்பதாகிறது.

தஞ்சைச் சோழமன்னர்களின் சரித்திரத்திலேயே மிகவும் சிக்கலான காலம் இதுதான். இந்தக் காலப் பகுதியின் சரித்திரம் இன்னும் தெளிவாக எழுதப்படவில்லை. எழுதியுள்ள ஆசிரியர்களும் ஒருவர் சொன்னபடி மற்றவர் சொல்லவில்லை.

இந்தக் காலத்தின் சரித்திரத்தை ஒருவாறு தெளிவதற்குக் கல்வெட்டுகளே முக்கிய ஆதாரங்களாக உள்ளன. சோழ சாசனங்

களிலே அரசர்களுடைய பெயர் குறிக்கப்படுவதில்லை. காலத்தைச் சுலபமாக நிர்ணயிக்கக்கூடிய விதமாகச் சகவருஷம் முதலியனவும் காணப்படுவதில்லை. சோழமன்னர்கள் ராஜகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்களை மாறி மாறித் தரித்து வந்திருக்கிறார்கள். இதனால் இந்தக் காலத்துச் சாசனங்கள், பொதுவாக, ராஜகேசரி அல்லது பரகேசரி வர்மனுடைய ஆட்சியின் இத்தனையாவது ஆண்டு என்றே குறித்துச் செல்லும். ஆகவே இந்தக் கல்வெட்டுகள் யார் யார் காலத்தவை என்று நிர்ணயிப்பது கஷ்டம்.

பெரும்பாலான கல்வெட்டுகள் இவ்விதம் இருந்தாலும், அரசன் பெயரோடு அடைமொழிகளைச் சேர்த்து வேறு விதமாகக் குறிக்கும் கல்வெட்டுகள் சிலவும் உண்டு. இன்னும் சோழ மன்னர்களல்லாத வேறு சிலருடைய கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன. இப்படிப்பட்டவைகளை மட்டுமே கவனிக்க வேண்டும்.

முதல் முதலாக, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு ஜில்லாக்களிலும், தென் ஆர்க்காடு ஜில்லாவின் வட பகுதியிலும், கன்னரதேவன் என்பவனின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவன் பெயர், 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று சிலவற்றிலும், 'கன்னரதேவன், என்று மட்டுமே வேறு சிலவற்றிலும் குறிக்கப்படுகிறது. அவன் ராஷ்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணன் ஆவான். அவன் கி. பி. 939-ஆம் ஆண்டின் கடைசியில் ராஷ்டிரகூடச் சிங்காதனம் ஏறி, இருபத்தெட்டு ஆண்டுகள் அரசு செலுத்தியிருக்கிறான். இவ்விடம் கிடைக்கும் கல்வெட்டுகள் அவனுடைய ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டிலிருந்து இருபத்தெட்டாம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக உள்ளன. அவன் ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டு கி. பி. 954 ஆகும். அதிலிருந்து 967-வரையில் அவன் சாசனங்கள் கிடைக்கின்றன.

கன்னரதேவனுக்கும் தொண்டை நாட்டுக்கும் உள்ள தொடர்பு அதற்கும் முன்னதாகவே காணப்படுகிறது. கி. பி. 949-ல் அவன் தக்கோலத்தில் நடத்திய சண்டையில் ராஜாதித்தியனைக் கொன்றிருக்கிறான். இது சோழபுரம், ஆதகூர் முதலிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுகளால் தெளிவாகிறது. அன்றி, கன்னரதேவனுடைய ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, தென் ஆர்க்காடு ஜில்லா சித்தலிங்க மடத்தில் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டின் காலம், தக்கோலம் சண்டைக்கு முற்பட்டதாகும். அதனால் இதில் ஏதோ தவறு இருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்களுள் சிலர் கருதுவர். அவ்விதம் கருதுவதற்கு முக்கிய காரணம், அது பிற்காலத்தில் பெயர்த்து எழுதப்பட்ட பிரதி என்பதே. அது பொறிக்கப்பட்டுள்ள வியாக்கிரபாதேசுவரர் ஆலயம், முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டபோது, பழைய சாசனங்களைப் பெயர்த்து எழுதினார்கள். அவ்விதம் எழுதியவற்றுள் இதுவும் ஒன்று. அப்போது ஏதோ தவறு நேர்ந்திருக்க வேண்டுமென்று சந்தேகிக்கிறார்கள். அது அநாவசியமே. ஏனெனில், கன்னர தேவனுடைய ஏழாம் ஆண்டுச் சாசனம் ஒன்றும் சமீபத்தில் தென் ஆர்க்காடு ஜில்லாவிலேயே கிடைத்திருக்கிறது. இவற்றால், 944-ஆம் ஆண்டிலிருந்தே கன்னரதேவன் தொண்டைநாட்டைக் கைப்பற்றியிருக்கிறான் என்பதும், 954-முதல் அவன் ஆட்சிக்காலம் முடிய அந்தப் பிரதேசம் அவனுடைய ஆட்சியில் அடங்கியிருந்தது நிச்சயம் என்பதும் தெளிவாகும்.

இவ்விதம் கன்னர தேவனுடைய ஆட்சிக்குள் அடங்கிய பிரதேசத்தில் அக்காலத்தனவாகக் கிடைக்கக் கூடிய சாசனங்களை அளித்தவர்கள் அவனுக்கு அடங்கியவர்களாகவோ தோழர்களாகவோ இருத்தல் வேண்டும். அவனுடைய கர்ஹாட்

செப்பேடுகளும் (எபிகிராபியா இந்திகா, வால்யூம் 4) இதையே தெரிவிக்கின்றன. அந்தத் தானம் கி. பி. 959-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 9-ம் தேதி அளிக்கப்பட்டது. அப்போது அவன் சித்தூர் ஜில்லாவில் உள்ள மேல்பாடியில் தங்கியிருந்தான். 'தென்மாகாணங்களில் தன்னைச் சேர்ந்தவர்களை நிறுவுவதற்கும், காலப் பிரியர், கண்டமார்த்தாண்டர், கிருஷ்ணேச்வார் முதலியவர்களுக்குக் கோயில்களை எழுப்புவதற்கும்' தங்கியிருந்தான் என்று அது கூறுகிறது.

இதே பிரதேசத்தில் இந்தக் காலத்தைச் சேர்ந்தவனுகப் பார்த்திவேந்திரவர்மன் என்பவனுடைய சாசனங்களும் கிடைக்கின்றன. அவை அவனுடைய ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலிருந்து பதினைந்தாம் ஆண்டுவரையில் உள்ளன.

இன்னும் 'மதுரை கொண்ட ராஜகேசரி' என்பவன் சாசனங்களும் உள்ளன. இது வரையில் மொத்தம் பத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவை ஐந்து முதல் பதினேழாம் ஆண்டு வரையில் உள்ளன. அவற்றுள் 14-ஆம் ஆண்டுச் சாசனம் ஒன்றும் 17-ஆம் ஆண்டுச் சாசனம் இரண்டும் தவிர மற்றவை தொண்டை நாட்டுப் பகுதியிலேயே இருக்கின்றன.

இவற்றைத் தவிர, சுந்தர சோழனுடைய சாசனங்கள் நான்கு உள்ளன. அவை அரசன் பெயரை மதுராந்தக சுந்தர சோழன் என்னும், 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீ சுந்தர சோழ தேவன்' என்றும் குறிக்கின்றன. அவை தஞ்சாவூர் ஜில்லாவிலே திருவிசலூர், திருக்களித்திட்டை ஆகிய இடங்களிலும் புதுக்கோட்டையைச் சேர்ந்த கொடும்பாளுரிலும் கிடைக்கின்றன. அவற்றுள் இரண்டு சாசனங்களின் காலம் காணவில்லை. மற்ற இரண்டும் ஐந்தாம் ஆண்டையும் ஏழாம் ஆண்டையும் குறிக்கின்றன. இம் மன்னனுடைய நாலாம் ஆண்டில் கொடுக்கப்பட்ட அன்பில் செப்பேடுகள் வேறு உள்ளன.

'பாண்டியன் தலைகொண்ட' 'வீரபாண்டியன் தலை கொண்ட' என்ற புகழ்பெற்ற பரகேசரி ஒருவனுடைய கல்வெட்டுக்களும் இருக்கின்றன. அவை இரண்டாம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு வரையில் உள்ளன.

மும்முடி சோழ கண்டராதித்தியன் கல்வெட்டு ஒன்றும் கிடைத்திருக்கிறது. அது அவன் ஆட்சியின் இரண்டாம் வருஷத்தைக் கொடுப்பது.

இவர்களைத் தவிர வேறு சிலரும் இருந்திருக்கவேண்டும். இங்ஙனமாக அவர்களில் ஒவ்வொருவரும் எத்தனை வருஷங்கள் அரசு செலுத்தினர்கள் என்பதும் நிச்சயமாகத் தெரியவில்லை. கிடைக்கும் கல்வெட்டுகளில் காணப்பெறும் ஆண்டுகளுக்கு மேலாகவும் சிலர் இருந்திருக்கவேண்டும். உதாரணமாகத் தென்னர்க்காடு ஜில்லாவில் உள்ள உடையார்குடியில் கிடைக்கும் இரண்டு சாசனங்களால், சுந்தர சோழன் பன்னிரண்டு ஆண்டுகளாவது அரசு புரிந்திருத்தல் வேண்டுமென்பது தெரிகிறது. (1920-ஆம் வருஷத்து 572, 587 நெ. சாசனங்கள்)

கிடைக்கும் ஆதாரங்களை மட்டும் கொண்டு, நிச்சயமாகப் பெயர் தெரியக் கூடிய மன்னர்களின் சாசனங்களிலே காணப்படும் ஆண்டுகளைக் கணக்கிட்டாலே அவற்றின் கூட்டுத் தொகை இந்த இருபது ஆண்டுகளுக்கு மேலே போய்விடும். அப்படியானல் இம் மன்னர்கள் ஆட்சியை எப்படி நிர்ணயிப்பது?

இந்தச் சிக்கலுக்கும், இவ் விடைக் காலத்திலே ராஷ்டிரகூடர்களுடைய ஆளுகையில் இருந்த தொண்டை நாட்டுப் பிரதேசத்தில காணும் சாசனங்களே விடையளிப்பனவாக உள்ளன. 'மதுரை கொண்ட ராஜகேசரி'யின் சாசனங்களைப் பற்றி நாம் மேலே குறிப்பிட்டுள்ளோம்.

இம் மதுரை கொண்ட ராஜ சேகரியும் மதுராந்தக சுந்தர சோழனும் ஒருவனே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். அவர்கள் அவ்விதம் கருதுவதற்கு இருவரும் மதுரையின்மீது வெற்றிகொண் டிருக்கிறார்கள் என்பதும் இருவரும் ராஜசேகரி என்பதுமே முக்கியமான காரணங்க ளாகும்.

ஆயினும் அவர்களுடைய கல்வெட்டுக்கள் கிடைக்கும் பிரதேசங்களேயும் அந்தப் பிரதேசங்களின் வரலாற்றையும் கவனிக்கும்போது, இவ் விருவரையும் ஒருவனுகவே கருதுவது சரிதானு என்ற ஐயம் உண்டாகிறது. மதுரை கொண்ட ராஜகேசரியின் சாசனங்கள் பெரும்பாலும் தொண்டை நாட்டுப் பகுதியிலேதான் கிடைக்கின்றன. அவனுடைய பத்துச் சாசனங்களும் கிடைக்கும் இடங்கள் பின் வருமாறு:—

ஆண்டு 5	கரிக்கல்	வட ஆர்க்காடு ஜில்லா
,, ,,	திருவொற்றியூர்	செங்கற்பட்டு ஜில்லா
,, ,,	வேளச் சேரி	,,
ஆண்டு 7	,,	,,
ஆண்டு 12	மதுராந்தகம்	,,
ஆண்டு 14	திருப்புறம்பியம்	தஞ்சாவூர் ஜில்லா
ஆண்டு 17	அல்லூர்	திருச்சிராப்பள்ளி ஜில்லா
,, ,,	திருமழபாடி	,,
,, ,,	திருமால்புரம்	வடஆர்க்காடு ஜில்லா
,, ,,	,,	,,

அதே காலத்தில் சோழ நாட்டுப் பகுதியிலே கிடைக்கும் சுந்தரசோழன் சாசனங்களில் அவன் 'மதுராந்தகன்' என்னும 'பாண்டியனேச் சுரம் இறக்கியவன்' என்றும வேறுவிதமாகக் குறிக்கப்பெறுகிறுன். சுந்தரசோழன் என்ற பெயரைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் தொண்டை நாட்டுப் பகுதியிலே காணவில்லே. அதேபோல் 'மதுரை கொண்ட ராஜ கேசரி'யின் கல்வெட்டுக்கள் சோழநாட்டுப் பகுதியில் காண வில்லே. இவற்ருல் இவ்விருவரும் வேறு வேருனவர்கள் என்றே எண்ணவேண்டியிருக்கிறது.

அப்படியானல் மதுரை கொண்ட ராஜ கேசரி யார்?

அவன் யாராக இருந்தாலும், ஒன்று மட்டும் நிச்சயம். அவன் ராஷ்டிரகூட மன்னன் கன்னர தேவனை மூன்ரும் கிருஷ்ணனேச் சேர்ந்தவனுகவே இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால், இவனுடைய கல்வெட்டுக்கள் கன்னர தேவனுடைய ஆட்சியிலிருந்த பிரதேசத்தில் அதே காலத்தில் கிடைக்க முடியாது.

கன்னரதேவனுடைய கர்ஹாட் செப்பேடுகளி லிருந்து அவன் தொண்டை நாட்டிலே காலப்பிரியர், கண்டமார்த் தாண்டர், கிருஷ்ணேச்வார் ஆகியவர்களுக்குக் கோயில்களே எழுப்பினுன் என்பது விளங்குகிறது. காவேரிப் பாக்கத்தில் கிடைக்கும் கல்வெட்டு ஒன்று அதை உறுதிப்படுத்துகிறது. ராஜகேசரிவர்மனுடைய ஆரும் ஆண்டுக் கல்வெட்டான அது, கீர்த்திமார்த்தாண்ட-காலப்பிரியர் கோயிலில் ஒரு விளக்கு எரிக்க 90-ஆடுகள் விட்ட செய்தியைக் குறிக்கிறது. (1905-ஆம் வருஷத்து 382-ெ. சாசனம்).

காலப்பிரியர் என்பது வடக்கே யமுனே நதிக்கரையிலே காலப்பிரிய க்ஷேத்திரத்தில் உள்ள பெருமானேக் குறிப்பதாகும். சைவர்களுக்குப் புனிதமான அந்த இடம் இப்போது

சால்பி என்று குறிக்கப்பெறுகிறது. அந்த இடத்தைக் கன்னரதேவனுடைய பெரியப்பனை மூன்றும் இந்திரன் கைப்பற்றி வெற்றிகொண்டிருக்கிறான். கன்னரதேவனும் அதே போரில் ஈடுபட்டு வெற்றிகொண்டு, அதன் ஞாபகார்த்தமாகவே தமிழ்நாட்டிலும் காலப்பிரியருக்குக் கோயில் எழுப்பினன் போலும். அந்தக் காலத்திலே ராஷ்டிரகூடர்களுக்குத் தென்பிரதேசத்துத் தலைநகராக இருந்த மேல்பாடியில் காளாமுக பாசுபத சைவத்தைச் சேர்ந்த முனிவர்களுக்கு ஒரு மடம் இருந்து வந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத் தக்கது.

காவேரிப்பாக்கம் கோயிலுக்கு இட்ட பெயரான 'கீர்த்திமார்த்தாண்ட காலப்பிரியர்' என்பது, சோழர் ராஷ்டிரகூடர் ஆகிய இருவர் பெயரும் கலந்தே உருவாகியதுபோலும். தென்ஆர்க்காடு ஜில்லா திருக்கோவலூர்த் தாலுகாவிலே மணக்குப்பம் என்னும் ஊரில் கிடைக்கும் ராஜகேசரி வர்மனுடைய 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று விளிநல்லூர் (மணக்குப்பம்) கோயிலுக்கு விளக்கு எரிக்க, கீர்த்திமார்த்தாண்டப் பேரரையன் நிபந்தம் அளித்த செய்தியைக் குறிக்கிறது. (1936-37 ஆம் வருஷத்து 269-நெ. சாசனம்). இதனால் கீர்த்திமார்த்தாண்டன் என்பது அந்த ராஜகேசரிவர்மனுடைய விருது என்பதும் அவனிடமிருந்த அதிகாரி அந்தப் பெயரைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் நன்கு விளங்கும்.

கர்ஹாட் செப்பேடுகளினின்றும் கன்னரதேவன் தென்னாட்டிலே கண்டமார்த்தாண்டருக்குக் கோயில் எழுப்பினன் என்று தெரிகிறது. கண்டமார்த்தாண்டர் என்பது கண்டராதித்தியர் என்பதன் வேறுவடிவமே. ஒன்றில் வரும் மார்த்தாண்டன் என்ற சொல், மற்றொன்றில் அதே பொருளைக் கொடுக்கும் ஆதித்தியன் எனக் காணப்படுகிறது. அன்றி, அந்தப் பெயரில் முதலில் உள்ள 'கண்ட' என்னும் சொல்லும் தமிழ் அல்ல, கன்னட வடிவம். வீரனையும் வீரத்தையும் குறிப்பது. இவற்றைக் கவனிக்கும் போது கீர்த்திமார்த்தாண்டர் என்ற பெயர் இதே பொருளில்தான் இம்மாதிரியே ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் தோன்றுகிறது.

அப்படியானால் 'மதுரை கொண்ட ராஜகேசரி' என்பவன் சோழ மன்னனை கண்டராதித்தியனையே குறிக்குமா?

திருக்கோவலூர்த் தாலுகாவிலே சோழவாண்டிபுரத்துக்குப் பக்கத்திலே ஆண்டிமலையென்று குறிக்கப்பெறும் பாறைகளில் ஜைன விக்கிரகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மகாவீரர் உருவம் ஓர் இடத்தில் காணப்படுகிறது. சிறிது தூரத்திலே இரண்டு பாறைகள் ஒன்றோடு ஒன்று சேரும் இடத்தில் நடுவிலே பத்மாவதியின் உருவமும், பக்கத்திலே பாறைக்கு ஒன்றாகக் கொம்மடேசுவரர் உருவமும் பார்சுவநாதர் உருவமும் எதிரும் புதிருமாக வெட்டப்பட்டுள்ளன. கொம்மடர் உருவத்துக்குப் பக்கத்திலே வேளி கொங்கரையர் புத்தடிகள் என்பவர் அந்தத் தேவாரத்தை நிறுவியதாகக் கூறும் சாசனம் ஒன்று பொறிக்கப்பட்டிருக்கிறது. (1936-37 ஆம் வருஷத்து 251-நெ. சாசனம்).

இந்தப் புத்தடிகள் சக வருஷம் 875-ல் (கி. பி. 953) தொண்டை நாட்டுப் பகுதியிலே சிற்றரசனாக இருந்த கன்னரதேவ பிரிதிவி கங்கரையினிடம் அதிகாரியாக இருந்தான் என்பது சோழபுரத்திலே கிடைக்கும் ஒரு கல்வெட்டால் தெரிகிறது. "ஸ்ரீ அத்தி மல்லராகிய கன்னரதேவ ப்ரிதிவி கங்கராயன் கல்லெடுப்பூர் மஜ்ஜாதி ஆளாவிருக்க இவர் அதிகாரி புத்தடிகளாகிய அழிவின களகண்டப் பிரிதிவி கங்கரையனேன்" என்று வரும் அதன் பகுதி இதைத் தெரிவிக்கிறது. (எபிகிராபியா இந்

திகா, வால்யூம் 7). வேளி கொங்கரை யன் என்று குறிக்கப்பெறுபவன் கன்னரதேவ பிரிதிவி கங்கரையனே போலும். இவ்வேளி கொங்கரையர் உத்திரமேரூரிலும் கோயில் எழுப்பியிருக்கிறன். பார்த்திவேந்திரனுடைய பன்னிரண்டாம் ஆண்டில், தம்பிராட்டியள் திரிபுவன மாதேவியர்' ஸ்ரீ வேளி விஷ்ணு கிருஹத்துக்கு நிவந்தம் விட்ட செய்தியைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று அங்கே கிடைக்கிறது. அதே இடத்தில் கிடைக்கும் அவனுடைய பதின்மூன்றும் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கெங்கரையர் ஸ்ரீ கோயில் பெருமானடிகளுக்கு விளக்கு எடுக்க, 'பெருமானடிகள் நம்பிராட்டியள் திரிபுவன மஹாதேவி, நிவந்தம் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. இவற்ருல் புத்தடிகள் ஜைன விக்கிரகங்களை நிறுவிய காலத்தை நாம் ஓர் அளவு சுமாராகக் கூறமுடியும்.

மேலே நாம் குறிப்பிட்ட ஆண்டி மலையின் மற்றெரு பக்கத்தில் மும்முடி சோழ கண்டராதித்தருடைய இரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் பொறிக்கப்பட்டிருக்கின்றது. (1936-37 ஆம் வருஷத்து 252 நெ. சாசனம்) அது செய்யுள் வடிவத்தில் உள்ளது. சித்த வடவன் என்பவன் புகழைப் பாடுவது. கடையெழு வள்ளல்களில் ஒருவனை பறம்பு நாட்டு மன்னன் பாரியின் மகளை மணந்து கொண்ட சேதி நாட்டு ஒரியின் வழிவந்தவன் என்றும், கோவல் அதிபன் என்றும், தமிழ மக்களைக் காப்பவன் என்றும் வீர சோழ புரத்தில் நடந்த சண்டையில் எதிரிகள் பலர் கூடிவந்த போதும் அவர்களை முறியடித்தவன் என்றும் அவன் புகழப்படுகிறன். மலய குலோத்பவன், ரணபீமன் என்ற விருதுகளும் காணப்படுகின்றன.

இதே அரசன் ராஷ்டிரகூட மன்னனை கன்னரதேவனுடைய பதினேழாம் (கி. பி. 956) ஆண்டுக் கல்வெட்டு ஒன்றிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன். திருநாமநல்லூரில் உள்ள அந்தக் கல்வெட்டில் அவன் பெயர் "சக்ரான்வய உதயாசல ஆதித்ய-சக்திராத—சிம்ஹத்வஜ—சிகிமகர லாஞ்சன—மலய குலோத்பவ—மலையகுலசூளாமணி—ஸ்ரீமங் நரஸிம்ஹவர்ம்மா—மிலாடுடைய நாட்டான் சித்த வடவன் ஆகிய நரஸிம்ம வர்மன்" என்று காணப்படுகிறது. இவன் உத்தம சோழனுடைய கல் வெட்டு ஒன்றிலும் காணப்படுகிறன்.

ஆண்டிமலையில் காணும் கல்வெட்டு அவ்விடமுள்ள பிண்டிக்கடவுள் (ஜைனதீர்த்தங்கரர்) பூஜைக்கும் மாதவர் ஜீவனத்திற்குமாகப் பரப்பாடி என்னும் கிராமத்தைச் சித்வடவன் தானம் செய்த செய்தியைக் கூறுகிறது.

அந்தப் பிண்டிக்கடவுளின் உருவங்கள் புத்தடிகளால் நிறுவப்பட்டவை. அதற்குப் பிறகே இந்தத் தானம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனல் தொண்டைநாட்டுப் பகுதியைக் கன்னரதேவன் கைக்கொண்டிருந்த காலத்திலேதான் கண்டராதித்தியன் அந்தப் பகுதியில் இருந்துவந்தான் என்பது விளங்கும். ஆகவே மதுரை கொண்ட ராஜகேசரி அவனுகவே இருத்தல் வேண்டும்.

இதைத் திருவொற்றியூரில் கிடைக்கும் அவனுடைய ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று வலியுறுத்தும். உடையார் உத்தம சோழ தேவருடன் சென்ற காலேசிப் பெருந்தரத்தைச் சேர்ந்த ஒருவர் திருவொற்றியூரில் மகாதேவருக்கு விளக்கு எரிக்க ஆடு அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது அந்தச் சாசனம். அதிலே உத்தம சோழன் 'பிள்ளையன்' என்று குறிக்கப் பெருமல் 'உடையார்' என்ற ராஜவிருதுகளுடன் குறிக்கப்பெறுகிறன்.

இது எவ்விதம் முடியும்? சுந்தர சோழனே மதுரை கொண்ட ராஜகே

சரியாகக் கருதுவதற்கு இந்தக் கல்வெட்டு இடையூருக இருக்கிறது. உத்தம சோழன் இளவரசனுக நியமிக்கப்பட்டிருந்தபடியால், அவன் அவ்விதம் அரச விருதுகளுடன் குறிக்கப்படுவதாகக் கொள்ளலாம். அப்படியானுல் அது அவன் தந்தையின் காலத்தில்தானே நடக்கக்கூடும்? அவ்விதம் இல்லாமல், சுந்தரசோழன் ஆட்சிக் காலத்தில் உத்தமசோழன் பட்டத்துவாரிசாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால் பின்னுல் அது ஏன் மாறியது? சுந்தர சோழனுடைய மகனை ஆதித்தியன் எப்படி வாரிசாக மாறிஞன்? ஏனெனில், திருவொற்றியூர்க் கல்வெட்டு எழுந்த காலத்திலிருந்து ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளாகவே ஆதித்திய கரிகாலன், பரகேசரி என்ற பட்டத்துடன் முடிசூட்டப்பட்டிருக்கிருன். அப்போது உத்தம சோழன் நிலை என்னவாயிற்று?

ஆதித்திய சோழன் முடிவைப்பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுவதை நாம் முன்னரே எடுத்துக் காட்டியிருக்கிருேம். அதன்படி, ஆதித்தியன் இறந்த பிறகு அவன் தம்பி ராஜராஜன் சிங்காதனம் ஏருமல், சிற்றப்பனை உத்தம சோழனுக்கு அரசுரிமை கொடுத்துவிட்டானும். அது எவ்விதம் நேர்ந்தது என்பதைச் சிதம்பரம் தாலுகா உடையார்குடியில் கிடைக்கும் ராஜராஜனுடைய இரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு விளக்கிக் கூறுகிறது. ''வடகரை பிரம்மதேயம் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம்: பாண்டியனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று துரோகிகளான'' சிலருடைய நிலங்களையும் அவருடைய சுற்றத்தாருடைய நிலங்களையும் பறிமுதல் செய்து விநியோகம் செய்த விஷயத்தை எடுத்துக் கூறுகிறது அந்தக் கல்வெட்டு.

இதனுல் ஆதித்திய சோழன் ராஜத் துரோகிகள் சிலரால் கொலை செய்யப்பட்டான் என்பதும், அத்தகைய பாதகம் செய்தவர்களைப் பழிவாங்குவதற்கு உத்தமசோழன் ஆட்சிக் காலத்தில் ராஜராஜனுல் முடியவில்லை யென்பதும், ஆகவே ராஜராஜன் தான் சிங்காதனம் ஏறின உடனே முதல் காரியமாக அதைச் செய்து முடித்தான் என்பதும் விளங்கும். இதைக் கவனித்தால், அந்தச் சூழ்ச்சியிலே உத்தம சோழனுக்கும் சம்பந்தம் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லலாம். அதனுல்தானே அவன் அரசனுக இருந்தவரையில் ராஜத் துரோகிகள்மீது பழிவாங்க முடியவில்லை.

இன்னும் ஆதித்தியனைக் கொன்றவுடன் உத்தம சோழன் சிங்காதனம் ஏறிவிட்டான். ராஜராஜனும் அதை எதிர்க்கமுடியாமல் அதற்குப் பணிந்து போய்விட்டான். இவ்விதம் நடந்திருக்கவேண்டுமானுல், உத்தம சோழனுக்குத் தகுந்த பக்கபலம் இருந்திருக்க வேண்டும். உள்நாட்டு உதவிமட்டும் போதாது. வெளியுதவியும் இருந்திருக்கவேண்டும். ராஷ்டிரகூடர்களுடைய உதவியாலேயே அவனுக்கு அவ்விதம் வெற்றி கிட்டியது போலும். மதுராந்தக உத்தம சோழனுடைய மூத்தரம் பிராட்டியாரின் பெயர் சோரப்பையள் என்ற கன்னடப் பெயராக இருப்பதும் இதனை வலியுறுத்தும்.

உத்தம சோழனேயன்றி, அவன் தந்தையான கண்டராதித்தியனுக்கும் ராஷ்டிரகூடர்களுடன் நெருங்கிய உறவு இருந்துவந்தது என்பது வேறு ஆதாரங்களாலும் விளங்குகிறது. கண்டராதித்தனுக்கு 'மேற்கெழுந்தருளின தேவர்' என்ற ஒரு பெயரும் இருந்திருக்கிறது. இது உடையார்குடியில் கிடைக்கும் ஒரு கல்வெட்டால் தெரிகிறது. (1920-ஆம் வருஷத்து 540 நெ. சாசனம்) வீரநாராயண சதுர்வேதி மங்கலத்துத் திருவனந்தேச்வரத்தாழ்வாருக்கு விளக்கு எரிக்க உத்தம சோழன் தாயான செம்பியன் மாதேவி அளித்த நிவந்தத்தைக் கூறு

கிறது. அதிலே அவள் மேற்கெழுந்தருளின தேவரான கண்டராதித்தியருடைய தேவி என்றும், மழவரையர் மகள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறாள்.

மன்னர்கள் காலகதியடைந்த பிறகு அவர்களுக்கு இவ்விதம் திருநாமம் சூட்டும் பழக்கம் சோழர்களிடையே இருந்திருக்கிறது. முதலாம் ஆதித்திய சோழன் 'தொண்டைமான் ஆற்றூர்த் துஞ்சின தேவர்' என்றும். ராஜாதித்தன் 'ஆனைமேல் துஞ்சின தேவர்' என்றும், அரிஞ்சயன் 'ஆற்றூர்த் துஞ்சின தேவர்' என்றும், சுந்தர சோழன் 'பொன்மாளிகைத் துஞ்சின தேவர்' என்றும் குறிக்கப்படுகிறார்கள். கண்டராதித்தியனே அவ்விதம் இல்லாமல், 'மேற்கு எழுந்தருளிய தேவர்' என்றே அழைக்கப்படுகிறான். இதனால் அவன் இறப்பதற்கு முன்னதாகவே மேற்கே சென்றுவிட்டான் என்று கொள்ளலாம். அவன் கன்னடர்களுடன் சேர்ந்துகொண்டதையே அவ்விதம் பிற்காலத்தில் சாசனங்களில் வழங்கினார்கள் போலும்.

இன்னும் அவன் கன்னர தேவனுடைய மகளை மணந்துகொண்டிருந்தான் என்றும் தெரிகிறது. தில்லைஸ்தானத்திலே (திருநெய்த்தானம்) கிடைக்கும் ராஜகேசரிவர்மனுடைய எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, "சோழப் பெருமானடிகள் மகனார் ஆதித்தன் கன்னர தேவன்" கொடுத்த பொன்னைப்பற்றிக் குறித்துச் செல்கிறது. 'சோழப் பெருமானடிகள்' என்ற பெயரை முதல் முதலாகப் பராந்தகனே தரித்து வந்தான். அதனால் ஆதித்தன் கன்னர தேவன் அவன் காலத்துக்குப் பின்னரே இருந்திருக்கவேண்டும். கண்டராதித்தனுக்கும் ஆதித்தன் என்றே இயற்பெயர் போலும். இது தஞ்சாவூர் ஜில்லா கோனேரி ராஜபுரத்தில் கிடைக்கும் இரு கல்வெட்டுக்களால் தெரிகிறது.

திருநல்லம் உடைய மகாதேவருக்கு உத்தம சோழன் தாயான செம்பியன் மாதேவி மகன் அரசு செலுத்திய காலத்தில், தம் உடையாரான கண்டராதித்தர் பேரில் கற்றளி எடுப்பித்தாள். அந்தக் கோயிலில் எழுந்தருளிய சிவ பெருமானுக்கு 'ஆதித்தேச்வரமுடைய மகாதேவர்' என்று பெயர். இதனால் கண்டராதித்தியனே, கன்னர தேவனான மூன்றும் கிருஷ்ணன் மகளை மணந்து அவளுக்குப் பிறந்த பிள்ளைக்குத் தாய்வழிப் பாட்டன் பெயரான கன்னர தேவன் என்பதையே இட்டிருந்தான் என்பதும் தெரியவரும்.

இதுகாறும் கூறியவற்றால் முதற் பராந்தக சோழனுடைய ஆட்சியின் இறுதியிலே சோழ நாடு பிளவுண்டது என்பதும் வட பகுதிக்குக் கண்டராதித்தன் அரசனாகவும் தென்பகுதிக்குச் சுந்தர சோழன் அரசனாகவும் அமர்ந்தனர் என்பதும் தெரியவரும். பராந்தகன் பரகேசரியானதாலேயே இருவரும் தங்களை ராஜகேசரி என்று கூறிக்கொண்டார்கள். இருவரும் தான்தானே பட்டத்துக்குச் சரியான வாரிசு என்று கருதி மற்றவனை அங்கீகரிக்காமல் நடந்துகொண்டனர். அதனாலேயே இருவரும் தங்கள் குமாரர்களைத் தங்களுக்குப் பின் பட்டத்துக்கு உரியவர்களாக நியமித்தனர். சுந்தர சோழன் தன் மகனான ஆதித்திய கரிகாலனையும், கண்டராதித்தன் தன் மகனான உத்தம சோழனையும் அவ்விதம் பரகேசரிகளாக முடி சூட்டினர்.

ராஷ்டிரகூட கன்னரதேவன் உயிருடன் இருந்த வரையில், கண்டராதித்தியனையோ உத்தம சோழனையோ சுந்தர சோழனும் ஆதித்தியனும் வெற்றிகொள்ள முடியவில்லை. கன்னரதேவன் கி பி. 967-ல் இறந்தவுடன், ஆதித்தியன் தலைக்கிளம்பித் தொண்டை நாட்டைக் கைப்பற்ற வந்திருக்கிறான். அதனாலேயே அவனுடைய சாசனங்கள் சில தொண்டை நாட்டிலும் கிடைத்துள்ளன. எனினும் உத்தம சோழன் அதைப் பொறாது

ஆதித்தியனை வஞ்சமாகக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். ஆதித்தியன் தந்தையான சுந்தர சோழனும் அந்தச் சூழ்ச்சியாலேயே இறந்தான்போலும். அதனாலேயே அவன், 'பொன்மாளிகைத் துஞ்சினதேவர்' என்று பெயர் பெற்றிருக்கிறான். பொன் மாளிகை என்பது காஞ்சிபுரத்திலே இருந்த அரண்மனை யாகும். அவன் சாதாரணமாக இறந்திருந்தால் இவ்விதம் குறிக்கவேண்டியிருந்திராது அல்லவா?

'கொங்கு தேச ராஜாக்கள் சரித்திரம்' என்னும் பழைய நூலும் இவ்விதமே பராந்தகனுக்குப் பிறகு சோழ ராஜ்யம் பிளவுண்டது என்று கூறுகிறது. அதிலே முதற் பராந்தக சோழன், வீரசோழ ராயன் என்று குறிக்கப் பெறுகிறான். அவன் ஆட்சியின் முடிவைப் பற்றி அந் நூலில் பின்வருமாறு காணப்படுகிறது. "இந்த அரசனுக்குப் பிள்ளைகள் அநேகம் பெயர். அவர்களிலே தேசோத்திய ராயனுக்குச் சோள தேசமும், அரிஞ்சய ராசனுக்குத் திராவிட தேசமும் கொடுத்துச் சுவர்க்கத்தை யடைந்தான்."

அடுத்தபடியாகத் தேசோத்தியராயனைப் பற்றிக் கூறும் பகுதியிலே காண்பதாவது: "அவன் (வீரசோழராயன்) மகன் தேசோத்திய ராயன் தஞ்சாவூரிலே பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு, அண்ணன் அரிஞ்சய ராயனுக்குத் திராவிடதேசம் பட்டாபிஷேகம் பண்ணுவித்துக் கொங்க தேச முதலானதுக்கு அரசனாய் இராச்சிய பரிபாலனம் தர்ம நீதிப்படி பண்ணினான்."

(செந்தமிழ், பதினாறும் தொகுதி-பக்கங்கள் 394-5.)

ஆராய்ச்சியாளர்கள் பொதுவாகக் கொங்குதேச ராஜாக்கள் சரித்திரத்தை ஆதாரமாகக் கொள்ளமாட்டார்கள். அது நம்பத்தகுந்ததல்ல வென்று ஒதுக்கிவிடுவார்கள். அதன் மூலத்தை முழுதும் படிக்காமல் ஆங்கிலத்தில் வெளிவந்த கருத்தைக்கொண்டே அவ்விதம் செய்துள்ளார்கள். எனினும் மூலத்தைப் படித்தவர்கள், அதில் கூறப்பட்டிருப்பது முழுதும் வேறு ஆதாரங்களால் நிரூபணமாவதை அறிவார்கள். பராந்தக சோழன் ஆட்சியின் இறுதியில் சோழராஜ்யம் இரு கூறாகப் பிரிந்தது என்று அது கூறுவதும் சரியென்பதை நாம் மேலே காட்டியுள்ளோம்.

இந்தக் கூற்றை ஆதரித்து இன்னும் பல ஆதாரங்களையும் காட்டமுடியும். எனினும் விரிவஞ்சி இவ்வளவோடு நிறுத்திக்கொள்கிறேன்.

அனுபவம் இருக்கிறது

கணவன்: "இந்த மாதிரி போடுபோடென்று செலவழிக்கிறாயே, இது அடுக்குமா? நாளைக்குத் திடீரென்று எனக்கு என்னமாவது வந்துவிட்டால், அப்புறம் நீ பிச்சை எடுக்க வேண்டியதுதான்"

மனைவி: "அந்தக் கவலை எனக்கில்லை. இவ்வளவு நாளைய அனுபவம் இருக்கிறது, பாருங்கள்—அது எனக்குக் கைகொடுக்கும்"

● ஜவ்வரிசி உற்பத்தி தமிழகத்தின் குடிசைத் தொழில்களில் ஒன்றாகும். அத் தொழிலின் தோற்றம், இன்றைய நிலைமை, எதிர்கால ஆக்கத்துக்குரிய வழி முதலியன இக்கட்டுரையில் விளக்கப்பெறுகின்றன.

ஜவ்வரிசி

கோ. மோ. ஜனர்த்தனம் B.A., B.Com.

●

'உழவு தொழிலே வரைவு வாணிபம்
வித்தை சிற்பம் என்று இத்திறத்தன
தொழிலே

என்று தொழில் வகைகளைக் கூறு படுத்தி இலக்கணம் வகுத்தனர் பண்டைத் தமிழர். தண்டமிழ் நாட்டு மக்களின் கண் கவர் செய்வினையைப் பழந்தமிழ்ப் பாடல்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. தொழில் வளம் சிறந்து செழிப்புற்று விளங்கவே விழாக் கொண்டாடும் தமிழ் இனத்தவருக்குத் தொழிற் சிறப்பை வலியுறுத்த வேண்டுவதில்லை.

தொழிலுக்கு விழாக் கொண்டாடுவதோடு நின்றுவிடாமல், நம் தமிழகத்துத் தொழில்களின் வளத்தையும் ஆராய்வது அவசியம். இருநூறு ஆண்டு அடிமைத்தனத்தால் நம் திறன் மழுங்கினும், அறிவு மழுங்கவில்லை. நாம் புத்துணர்ச்சியுடன் புதிய இந்தியக் குடியரசின் மக்களாகப் புதுவாழ்வு ஆரம்பித்துவிட்டோம். தொழில்களைக் கண்ணின் மணிபோல் காத்து ஆவன புரிந்து ஆதரவு காட்டி வளர்க்க முடிவு கட்டியுள்ளது நம் தேசிய அரசு. அதற்கெனத் தொழில் வளர்ச்சிப் பாதுகாப்புச் சட்டம் இயற்றியாகி விட்டது. உற்பத்தி பெருக, தேசிய வருவாய் திரள, மக்கள் வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளர்ச்சிக்கு மேன்மேலும் ஊக்கமளிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

கைத்தொழில் வளர்ச்சி என்று சொன்னவுடன் பெரும் இயந்திரங்களும், சாதனங்களும், நிறைந்த மூலதனமும் படைத்த தொழிற்சாலைகளே நம் கவனத்திற்கு வருகின்றன. பெருந்தொழில்கள் தோன்றிப் பெருக வேண்டிய அவசியத்தை நாம் மறுக்க முடியாது. இருப்பினும் சிறு குடிசைத் தொழில்களும் இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெறுவதை நாம் கவனிக்கவேண்டும். பல லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கைத் தேர் ஓடுவதற்குக் குடிசைத் தொழில்கள் துணை புரிகின்றன என்பதை நாம் மறக்கமுடியாதல்லவா? மேலும், பிரம்மாண்டமான இயந்திர உற்பத்தியால் ஏற்படும் கேடுகளை அல்டோஸ் ஹக்ஸ்லி போன்ற அறிஞர்கள் உணர்ந்து வருகின்றனர். கிராமங்கள் மலிந்த நம் நாட்டில் காந்தியடிகள் சிறு குடிசைத்தொழில்களின் மேன்மையை வாழ்நாள் முழுவதும் ஓயாமல் வற்புறுத்தி வந்துள்ளார். கிராமங்கள் மலிந்த நம் நாட்டில் குடிசைத் தொழில் வளர்ச்சி எத்துணை இன்றியமையாதது என்பதை வற்புறுத்த வேண்டுவதில்லை. விவசாயத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் ஆண்டில் மூன்று மாதங்

களுக்காவது வேலையின்மையால் வாட்டமுறுதல் கண்கூடு. அவர்களுக்கு அத்தகைய காலங்களில் ஊதியத்துடன் தொழிலியற்ற வசதியளிப்பது கிராமத் தொழில்களின் முக்கியப் பொறுப்பாகின்றது, மேலும் சிறு சிறு தொழில்களுக்குப், பெரிய மூலதனமோ, பிரம்மாண்டமான கட்டிடங்களோ தேவையில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய கிராமத் தொழில்கள் பெருகுமானல் நாட்டின் பொருள் வளம் ஆக்கமுறுவது திண்ணம். கடந்த போரில் வீழ்ச்சியுற்ற ஜப்பான், ஐந்தாண்டுகளுக்குள் மறுபடியும் உற்பத்தியைப் பெருக்கி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்குச் சக்தி பெற்றுவிட்டதென்பது, அந்நாட்டின் குடிசைத் தொழில் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். ஜப்பானியர் தங்கள் இல்லங்களையே தொழிற்சாலைகளாக்கிக் கண்ணைக் கவரும் பட்டாடைகள், பளிங்குக் கண்ணாடி, தீப்பெட்டி, சோப், காகிதம், ரேடியோ கூட்டமைப்பு, சைகிள் கூட்டமைப்பு ஆகிய தொழில்களைத் திறம்பட நடத்திவருகின்றனர். சமீபத்தில்கூட இந்திய அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்ட இரு நிபுணர்கள், ஜப்பானியக் குடிசைத் தொழில் வளர்ச்சியை நேரில் பார்வையிட்டு வந்து, அத்தகைய முறையில் நம் நாட்டிலும் குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற திட்டம் தீட்டியுள்ளனர். மேலும், கிராமக் கைத்தொழில் போர்டு ஒன்றையும் அரசாங்கம் நிறுவியுள்ளது.

குடிசைத் தொழில்கள் எத்தனையோ வகைகள் உண்டு. உதாரணமாக, ஜவ்வரிசி உற்பத்தி அத்தகைய குடிசைத் தொழில்களில் ஒன்றாகும். ஜவ்வரிசி செடியிலிருந்து கிடைக்கிறதா அல்லது மரத்தில் காய்க்கிறதா என்பதே பலருக்குத் தெரியாது. அத்தொழிலைப் பற்றிய பொருளாதார நிலைமையை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

ஜவ்வரிசி உற்பத்தி குடிசைத் தொழிலின்பாற்பட்டது. அது குச்சிக் கிழங்கு என்ற ஒரு கிழங்கின் பாலிலிருந்து திரட்டப்படுகின்றது. குச்சிக் கிழங்கு சேலம் மாவட்டத்திலே ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது. அதைப் புன்செய்களில்தான் சாகுபடி செய்ய முடியும். ஆனல், தண்ணீர்ப் பாய்ச்சல் மட்டும் முதலிரண்டு மாதங்களுக்குத் தொடர்ந்து தேவைப்படும். சுமார் பத்து மாத காலத்திற்குள் கிழங்கு நன்ருகக் கொழுத்து வளரும். கறுப்புத் தோலால் மூடப்பட்டுள்ள அக்கிழங்கினைச் சேலத்திலுள்ள கிராம மக்கள் எல்லோரும் தெருக்களில் கூடத் தின்றுகொண்டே போவதைப் பார்க்கலாம். இக்கிழங்கின் கறுப்புத் தோலை உரித்தால் வெள்ளை நிறமான கிழங்கு கிடைக்கும். அக்கிழங்கினை இயந்திரத்தில் கொடுத்து அரைத்தால் பால் கிடைக்கும். அப்பாலைப் பெரிய சிமெண்டுத் தொட்டிகளில் வடித்துவிட வேண்டும். அதன் பின்னர் வெள்ளை வெளேரென்ற மாவுப்பசை கிடைக்கும். அந்தப் பசையைச் சிறு சிறு உருண்டைகளாகத் திரட்டினல் ஜவ்வரிசி கிடைக்கிறது. பிறகு பொன் வறுவலாக வறுத்த பின் ஜவ்வரிசி விற்பனைக்குத் தயாராகிறது. இதைத் தான் நாம் விருந்தினருக்குப் பாயாசமாகவும் நோயாளிகளுக்குக் கஞ்சியாகவும் பயன்படுத்துகிறோம்.

குச்சிக்கிழங்கி லிருந்து ஜவ்வரிசி மட்டும் உற்பத்தி செய்வதோடு அமைவதில்லை. இன்னும் பலவிதமான பொருள்களையும் செய்யலாம். வாழையின் வேர்முதல் பூவரை பயன்படுவதுபோல், குச்சிக்கிழங்கின் ஒவ்வொரு பகுதியும் பயன்படும். குச்சிக்கிழங்கின் பாலிலிருந்து சமோலின ரவை, பினேக்ஸ், ஓட்ஸ், ஐஸிங் கிளாஸ் போன்ற விலையுயர்ந்த பொருள்களையும் தயாரிக்கலாம். சமோலின ரவையை ஏற்கெனவே சேலத்தில் உற்பத்தி செய்துவருகின்றனர்.

மற்றப் பொருள்களையும் தயார் செய்ய முயற்சி நடந்து வருகின்றது. குச்சிக் கிழங்குத் திப்பி, அழுக்கு மாவு ஆகியவையும் ஜவ்வரிசித் தொழிலில் கிடைக்கும் உப-பொருள்களே. இன்னும் குச்சி மாவுப் பசையை ஆலைகளில் நெய்யப்படும் துணிக்குக் கஞ்சிபோடப் பயன்படுத்தலாம். பாவுப்பசைத் தண்ணீரைக்கூடக் கைத்தொழில்களில் உபயோகப்படுத்தலாம். இம் முயற்சி இன்னும் நடைபெறவில்லை.

இவ்வளவு எளிதாக உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசியைப் பற்றிய தொழில் நுணுக்கங்கள், 1942வது ஆண்டு வரை ஒருவருக்குமே தெரியாது என்றால் வியப்பாக இருக்கின்றதல்லவா? உண்மை என்னவென்றால், பினங், சிங்கப்பூர் என்ற வெளிநாடுகளில் இருந்து கடந்த உலகப் போருக்கு முன் ஜவ்வரிசி ஏராளமாக இறக்குமதியாகிவந்தது. மேலும் குச்சிக்கிழங்கிலிருந்து ஜவ்வரிசி உற்பத்தி செய்யமுடியும் என்பதே மக்களுக்குத் தெரியாமல் இருந்தது! இன்றுங்கூட, சேலம் ஜில்லாவைத்தவிர வேறெங்கும் இந்தியாவிலேயே ஜவ்வரிசி செய்யப்படவில்லை. சென்ற யுத்தம் எத்தனையோ தீமைகளை விளைவித்தது என்றாலும், அதனால் சில நன்மைகளும் ஏற்படாமல் போகவில்லை. அவற்றுள் ஒன்றுதான் ஜவ்வரிசி உற்பத்தித் தொழில். யுத்தத்தின்போது பினங், சிங்கப்பூரிலிருந்து வரும் சரக்கு இறக்குமதியாகாமல் தடைப்பட்டு விட்டது. அப்பொழுதுதான் சேலத்தில் இத்தொழில் ஆரம்பமாயிற்று. சேலத்திலும், அதன் சுற்றுப்புறமுள்ள கிராமங்களிலும் குச்சிக் கிழங்கு ஏராளமாகப் பயிரிடப்பட்டுவந்தது. 1942-43 ஆம் ஆண்டில் குச்சி கிழங்கு 25 ராத்தல் கொண்ட மணங்கு ஒன்றுக்கு 0—6—0 விலைக்குக் கிடைத்தது. மிகவும் மலிவாகக் கிடைத்த இக்கிழங்கினை வாங்கி, பால் வடித்து ஜவ்வரிசி கிரட்டினர் ஒரு சில தொழில் விற்பன்னர்கள். அப்பொழுது வெளிநாட்டுச் சரக்கு விலைக்குக் கிடைக்காததால், சேலம் ஜவ்வரிசி, 25-ராத்தல் கொண்ட மணங்கொன்றுக்கு ரூ 17-0-0 வீதம் விற்கலாயிற்று. தொழிலில் ஆரம்பத்திலேயே எதிர்பாராத விதமாக இலாபம் கிடைக்கவே சேலத்தில் உள்ள பல வியாபாரிகள் இத்தொழிலில் ஈடுபடலாயினர். வேலையில்லாது மூடப்பட்டுக் கிடந்த நெல் ஆலைகள் எல்லாம் ஜவ்வரிசி உற்பத்தி செய்ய ஆரம்பித்தன. 1944 முதல் 1947க்குள் — மூன்றே ஆண்டுக்குள்—சுமார் 30 பெரிய தொழிற்சாலைகளும், எண்பதுக்கு மேற்பட்ட குடிசைத்தொழில் நிலையங்களும் ஜவ்வரிசி உற்பத்திசெயய ஆரம்பித்துவிட்டன!

ஜவ்வரிசித் தொழிலின் ஆரம்பக் கதையை அறிந்தோம். அது வளர்ந்த வரலாற்றையும் கவனிப்போம். ஜவ்வரிசித் தொழில் பெரும்பாலும் குடிசைத் தொழிலின் இயல்புகளுடனேயே அமைந்துள்ளது. சுமார் 40க்கு மேற்பட்ட உற்பத்தி நிலையங்களில் மின்சார சக்தி பயன்பட்டு வருகின்றது. இத்தகைய நிலையங்கள், பெரும்பாலும் தனிப்பட்ட முதலாளியின் நிர்வாகத்திலோ அல்லது கூட்டு வாணிப முறையிலோ தான் நடைபெற்று வருகின்றன. லிமிடெட் கம்பெனி முறையில் ஒரு தொழிற்சாலைகூட நடைபெறவில்லை என்பது கவனிக்கத் தக்கது. இத் தொழிற்சாலைகள் முறையே ரூபாய் பத்தாயிரம் முதல் அறுபதினாயிரம் வரை மூலதனம் படைத்தவை. இத்தகைய தொழிற்சாலைகளில் மொத்தம் ஐந்து முதல் ஆறு லட்சம் ரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவை மட்டுமல்லாமல், சுமார் எண்பது குடிசைத் தொழில் நிலையங்கள் களும் ஜவ்வரிசி உற்பத்தியில் முனைந்துள்ளன. இவைகளில் சுமார் 50000 ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாகச் சொல்

லப்போனால் இத்தொழில், சிறு கைத்தொழில் வகையைச் சார்ந்தது என்றே சொல்லவேண்டும்.

இத்தொழிலுக்கே உரிய தனிச் சிறப்பு என்னவென்றால், மிகக் குறைந்த முதலீடு செய்யப்பட்ட இத்தொழிலில் மக்களின் உழைப்புச் சக்திக்குப் போதிய வாய்ப்புள்ளமையே ஆகும். குச்சிக் கிழங்கு பயிரிடும் வகையில் சேலம் ஜில்லாவில் சுமார் 10000 முதல் 20000 ஏக்கர் நிலம் வரை ஒதுக்கப்பட்டுள்ளது. குச்சிக் கிழங்கு சாகுபடி செய்வதில் சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் ஈடுபடுகின்றனர். மேலும் குச்சிக்கிழங்குத் தூக்கல், வியாபாரம் ஆகிய துறைகளில் வேறு பல ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபடுகின்றனர். அதுமட்டுமன்றி, குச்சிக் கிழங்கின் தோல் உரிப்பு ஒரு முக்கிய வேலையாகும். அது கிராமப் பெண்களுக்கே உரிய தனி அலுவல். அத் தொழிலில் சுமார் 10000 முதல் 30000 பெண்கள் வேலை செய்ய வசதியுண்டு. உரிப்புக் கூலி 25 ராத்தல் கொண்ட மணங்கொன்றுக்கு ஓரணுவாகும். இவைமட்டுமல்லாமல் ஜவ்வரிசிப் பால் வடித்தல், ஜவ்வரிசி உருண்டை திரட்டல், உலரவைத்தல் வறுத்தல் ஆகிய பல்வேறு தொழிற் பிரிவுகளில் ஐயாயிரம் முதல் பத்தாயிரம் மக்கள் வரையில் பிழைக்க வழி ஏற்படுகின்றது. சுருங்கச் சொன்னால், சிறு முதலினைத் துணையாகக்கொண்டு ஒரு லட்சம் மக்களின் வாழ்வுக்கு அடிப்படையாக அமைகிறது இத்தொழில் என்றால், இதன் சிறப்பை அதிகம் கூறுவானேன்!

ஒரு தொழிலின் வளர்ச்சியைக் கவனிக்க வேண்டுமானால், அதைப் பொருளாதாரக் கண் கொண்டு ஆராய வேண்டும். தொழிலின் வாழ்வும் தாழ்வும் அதன் உற்பத்திச் செலவைப் பொறுத்தே அமையும். ஆனமுதலில் அதிகம் செலவானால், போன முதல் திரும்பி வாராது. ஆனால், ஜவ்வரிசி உற்பத்தி அத்தகைய தொழில் அன்று. சேலத்தில் விளையும் குச்சிக் கிழங்கு பால் சத்து நிரம்பியது. 25 ராத்தல் கொண்ட ஐந்து மணங்குக் கிழங்கிலிருந்து, ஒரு மணு ஜவ்வரிசியும், 8 ராத்தல் ஜவ்வரிசித் திப்பியும் திரட்டலாம். கீழே காட்டியுள்ள பட்டியல் படி உற்பத்திச் செலவாகிறது.

25 ராத்தல்கொண்ட ஒரு மணங்கு
ஜவ்வரிசி செய்ய ஆகும்
உற்பத்திச் செலவு

(1949-வது வருஷ நிலைமைப்படி)

	ரூ அ பை
5 மணங்கு (25 ராத்தல்) குச்சிக் கிழங்கு, மணங்கு ஒன்றுக்கு ரூ. 1—8—0 வீதம் கொள்முதல் விலை ...	7—8—0
அக் கிழங்கு, தூக்கல், உரிப்பு, தயாரிப்பு ஆகிய கூலி வகையில் ...	1—0—0
சாக்குப் பை	0—4—0
வண்டிச் சத்தம் ...	0—6—0
விற்பனைக் கமிஷன் ...	0—6—0
இதர செலவுகளுக்காக ...	0—8—0
	10—0—0

5மணங்குக்கிழங்குக்கு 5ராத்தல் திப்பி உபபொருளாகக் கிடைக்கச். அதன் கிரயம் 0—8—0 ஆகிறது. எனவே 25 ராத்தல் கொண்ட ஒரு மணங்கு ஜவ்வரிசி ரூபாய் 11—0—0க்கு விற்றால்தான், அடக்கவிலை தேறும். அதோடு சிறு லாபமும் கிடைக்க வேண்டுமானால் மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 12—0—0 வீதமாவது விற்றால்தான், தொழிலில் சிறிது ஊதியமும் கிடைக்கும்.

1942வது ஆண்டில் துவக்கப்பட்ட இந்தத் தொழில் 1943—47வது ஆண்டுக்குள் மின்னல் வேகத்தில்

வளரலாயிற்று. வெளி நாட்டுச் சரக்கு வராததால் உள்நாட்டுச் சரக்கு, 1947 வது ஆண்டு ஜுலை மாதத்தில் 25 ராத்தல் கொண்ட மணங்கொன்றுக்கு ரூபாய் 17—4—0 வரைக்கும்கூட விற்றது. அந்த ஆண்டில் கொழுத்த லாபம் கிட்டியது. தொழிலும் அந்த ஆண்டிலே மிக விமரிசையாக நடந்தது. ஆனால், ஒரே நிலைமையில் நிதானமாக எந்தத் தொழிலும் நடைபெற முடியாதல்லவா? அந்த நியதியை ஒட்டி, கால தேவன் தொழிலுக்குச் சோதனை நடத்த ஆரம்பித்து விட்டான். ஆரம்பித்த இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்குள் வெளிநாட்டுச் சரக்கின் போட்டி என்ற புயற்காற்றிற்கு ஜவ்வரிசித் தொழில் என்ற இளம்பயிர் இரையாகிவிடுமோ என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. 1947வது ஆண்டு இறுதியில் இந்திய சர்க்காரின் இறக்குமதிக் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டது. அதன் விளைவாகச் சுமார் 5000 மூட்டை ஜவ்வரிசி வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகி விட்டது. வெளிநாட்டுச் சரக்கு மணங் கொன்றுக்கு ரூபாய் 10—0—0 முதல் 11—0—0 வரை விற்கலாயிற்று. பினாங், சிங்கப்பூர் ஆகிய இடங்களிலுள்ள மலைகளில் இயற்கையாகவும், இலவசமாகவும் கிடைத்த கிழங்குகளிலிருந்து, வெளிநாட்டு ஜவ்வரிசி தயாரிக்கப்படுகிறது. அதனால் அந்த ஜவ்வரிசியின் உற்பத்திச் செலவு மணங்கொன்றுக்கு ரூ. 5-0-0 முதல் ரூ. 8-0-0க்குள் அடங்கும். எனவே, வெளிநாட்டுச் சரக்கு, நம் நாட்டில் மணங்கொன்றுக்கு ரூ. 10-0-0 முதல் ரூ. 11-0-0க்குள் விற்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் வெளிநாட்டுச் சரக்கின் தரம் மிகவும் குறைவானது. இருப்பினும், வெளி நாட்டுச் சரக்கின் விலை மலிவானதால், சேலம் ஜவ்வரிசித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. வெளி நாட்டுச் சரக்குடன் போட்டியிட முடியாமல் சேலம் ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் நிலைகுலைந்து போயின. சுமார் பத்துத் தொழிற்சாலைகள் மட்டுமே, நஷ்டத்திற்கும் ஈடுகொடுத்துத் தொடர்ந்து இயங்கி வந்தன. மிகவும் செழிப்புடன் ஓங்கி வளர்ந்து, பல்லாயிர மக்களின் வாழ்வுக்குப் பால்வார்த்த சேலம் ஜவ்வரிசித் தொழில் பாழ்பட்டுப்போய்விடுமோ என்ற அச்சம் பிறந்துவிட்டது. ஆனால், நல்ல வேளையாக, இந்திய அரசாங்கத்தார் பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதிக் கொள்கையைக் கடந்த மே மாதம் மாற்றினர். வெளிநாட்டு நாணயச்செலாவணியை மிச்சப்படுத்துவதின் நிமித்தம் ஜவ்வரிசியும், அதன் உப-பொருள்களும் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யக்கூடாதெனத் தற்காலிகத் தடை யுத்தரவு பிறப்பித்தனர். இத்தடை யுத்தரவு சேலம் ஜவ்வரிசித் தொழிலுக்கு மறு பிறப்பை அளித்தது. மீண்டும் தொழில் புத்துயிர் பெற்றது. சேலம் ஜவ்வரிசி மணங்கு ரூ. 13-0-0 முதல் ரூ. 15-0-0 வரை விற்று முதலாயிற்று. மறுபடியும் ஜவ்வரிசித் தொழில், ஆக்கமும், ஊதியமும் அளித்தது; தொழிலும் செழித்தது. 1949 ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை வெளி நாட்டுச் சரக்கின் பயமின்றி, தொழில் தளிர்விட்டு வளர்ந்தது.

மீண்டும் ஓர் அபாய அறிவிப்பு! மறுபடியும் கனத்த கோரப் புயல்!! இம்முறை வெளி நாட்டுச் சரக்கு இறக்குமதியான அளவு குறைவே ஆயினும், அல்லலும் ஆபத்தும் அதிகமாயின. வெளிநாட்டுச் சரக்கின் போட்டி மார்க்கெட்டில் பரவி, உள்நாட்டுச் சரக்கை-வெட்டுக்கிளி பசும்பயிரை அண்டியிருந்தே அரிப்பதுபோல்—விலையைக் குறைத்துக் குறைத்தே தொழிலை நசிக்க ஆரம்பித்துவிட்டது. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது ஒரு சோதனைக் காலமே!

இதற்கிடையில் ஜவ்வரிசி வர்த்தகத்தாரின் முறையீடு காரணமாக, இந்திய

அரசாங்கத்தார், இத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்கும் யோசனையைப் பரிசிலனை செய்து வருகின்றனர். அதனை ஆராயச் சுங்கவரி போர்டுக்கும் சிபாரிசு செய்துள்ளனர். சுங்கவரி போர்டும் தொழில் பற்றிய விவரங்களை அறிய உற்பத்தியாளருக்குக் கேள்வி நமூனாவை அனுப்பியுள்ளது. கூடிய சீக்கிரத்தில் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடும் என்பதற்கும் நம்பிக்கையிருக்கிறது. அங்ஙனம் பாதுகாப்பளிக்க வேண்டியது அவசரமும், அவசியமுமான காரியம் ஆகும்.

வெளிநாட்டுச் சரக்கினால் போட்டி நிறுத்தப்பட வேண்டுமானால், அதற்கு இறக்குமதி வரி விதிக்கப்படவேண்டும். உள்நாட்டுச் சரக்கின் உற்பத்திச் செலவு, இலாப விகிதம் ஆகியவைகளை ஆராய்ந்தே இறக்குமதி விகிதத்தை நிர்ணயம் செய்வார்கள். அதற்கு முன்னால், வெளிநாட்டுச் சரக்குக்குத் தடை விதிப்பதனால் உள் நாட்டுத் தேவை எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்தினால் அல்லாது, சுங்கவரி போர்டு பாதுகாப்பளிக்க முன்வராது. அதன்படி பார்த்தாலும்கூட, சேலத்தில், நாளொன்றுக்கு 6000 மணங்கு உற்பத்தி செய்யமுடியும். உள்நாட்டுத் தேவைக்கு அதிகமாகக் கூட உற்பத்தி செய்ய முடியும் என்பதைப் புள்ளி விவரத்துடன் ருசுப்படுத்தலாம்.

இந்த வெளிநாட்டுப் போட்டி என்ற விஷப் பரீட்சை, ஜவ்வரிசித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பல புதிய பாடங்களைப் புகட்டியுள்ளது. தனித்தனியாகத் தொழில் நடத்துவது இனி இயலாது; தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆலோசிக்கவும், அதற்குத் தக்க திட்டங்களை நடத்தவும் கூட்டுறவு உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகிவிட்டது. மேலும், உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதில், கமிஷன், வண்டிச்சத்தம் போன்ற செலவுகள் மணங்கொன்றுக்கு ரூ. 1-0-0 செலவாகிறது. இந்தச் செலவினைக் கூட்டுறவு வியாபாரச் சங்கங்கள் மூலம் குறைக்க முடியும். சென்னை அரசாங்கத்தின் கூட்டுறவ இலாகா இத்துறையில் உதவி புரியக்கூடும். ஜப்பானியக் குடிசைத் தொழில்கள், உலக வர்த்தகத்தில் சிறப்பான இடம் வகிப்பதற்குக் காரணம் அங்குள்ள கூட்டுறவு இயக்கமே ஆகும். குச்சிக் கிழங்கு உற்பத்தியில்கூடச் சிக்கனம் செய்யமுடியும். கூட்டுப் பண்ணைகள்கூடக் கூட்டுறவு நிலையத்தின் மூலம் நடத்தப்படலாம். மேலே குறிப்பிட்ட யோசனைகள் எல்லாம், ஜவ்வரிசித் தொழில் எதிர்காலத்திலும் ஊதியம் தரும் வகையில் நடத்துவதற்கான உபாயங்களே யாகும்.

இருதலைக் கொள்ளி

ஒருவர்: "ஐயையோ! பாட்டா இது! காதுகொடுத்துக் கேட்கச் சகிக்கவில்லையே!"

மற்றவர்: "பாடுவது என் மனைவிதானப்பா!"

அவர்: "அப்படியா! பாடுவது நன்றாக—அருமையாய்த்தான்—இருக்கிறது. நான் சொல்லுவது, அந்தப் பாட்டை எழுதினான் பார், அந்த மடையனைப் பற்றி......... வடி கட்டின முட்டாள்......... இப்படியா பாட்டை.........

இவர்: "அட சரிதான்! வாயை மூடடா! நானே எழுதின பாட்டுத்தான் அது."

— கோயில் பிள்ளை

கவிதைக் காதல்

திரு. எஸ். கே. சாமி

கவிதை ஒரு அபூர்வமான— அருமையான கலை. கவிதைக்கு முக்கியமாக வேண்டுவது கற்பனை. இன்னும் கவிதைக்கு மிக முக்கியமாக வேண்டுவது அதன் கட்டுக்கோப்பு. இப்படி நான் சொல்லி விட்டதனால், கவிதையைப் பற்றிப் பூராவும் சொல்லி விட்டேன் என்பது பொருளாகாது.

சிலர் கவிதையில் உண்மை இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையை மட்டும் சொன்னால் அது கவிதையாகாது. உண்மையுடன் கற்பனையும் கலந்திருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் உண்மை கூட அவ்வளவு தேவை இல்லை. உண்மையைக் கற்பிக்கின்ற ஒரு உருவமே அவசியமென்று அறிஞர்கள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர். இம்மாதிரியான கவிதையொன்றைப் பார்ப்போம்:—

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற செந்தமிழ் நாட்டுப் பழமொழிக் கேற்ப, பல ஆண்டுகட்கு முன்பு, ஒரு தலைவன், தனது காதல் மனைவியிடம் விடை பெற்றுக்கொண்டு பொருளீட்ட வெளிக் கிளம்புகின்றான். பாலைவனத்தின் வழியே அவன் நடந்து போகின்றான். அவனது உள்ளத்தில், பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல், காதல் மனைவியின் எண்ணக் குவியல்கள் வந்து தேங்குகின்றன. என்றாலும் ஆண் மகன் அல்லவா? சற்று ஆசையை ஒதுக்கி வைத்துவிட்டு, அப்பால் போகின்றான்.

பொருள் தேடும் பொருட்டுச் சென்ற தலைவன் நீண்ட காலமாகத் திரும்பவில்லை. செய்தி ஒன்றும் தலைவிக்கு அனுப்பவும் இல்லை.

வீட்டில் தலைவி, தலைவனை நினைந்து நினைந்து உருகுகின்றாள். வழிமேல் விழிவைத்துத் தலைவனது வரவை, எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறாள். தேன் சுவையும், தித்திக்கும் கனிச்சுவையும், அவளுக்குத் திகட்டுகின்றன. கரும்பும் அவளுக்குக் கசக்கிறது. உணவு செல்லவில்லை. அவளுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. துரும்பாக இளைத்துப் போய்விட்டாள்.

உற்ற துணையான உயிர்த்தோழியிடம் தன் துயரத்தைக் கொட்டுகிறாள். தோழி ஆறுதல் கூறுகிறாள்.

"அம்மா! வருந்தாதீர்கள். அவர் உங்களை ஒரு நாளும் மறக்கமாட்டார். விரைவில் வந்துவிடுவார்"

"என்னடி? இப்படித்தான் எத்தனையோ நாள் எண்ணி, எண்ணி ஏமாந்துவிட்டேன். அவர் என்னை மறந்துவிட்டார். செய்திகூட

அனுப்பவில்லையே!...... ஆமாம்...... என்னை மறந்தே விட்டார். இனி நான் இருந்து பயனில்லை" என்று தலைவி வருத்தத்துடன் சொல்லி விட்டு, "கோ" வென அழுகிருள். இதைக் கண்ட தோழியின் மனம் துன்புறுகிறது. தலைவியை எப்படிச் சமாதானம் செய்யலாம் என்று சிந்திக்கிருள். தலைவியிடம் அளவிலா அன்பு கொண்ட தோழிக்கு, ஒரு அருமையான யோசனை பிறக்கிறது. உடனே "கடகட" வெனச் சிரிக்கிருள். தலைவி, "ஏனடி? எனக்குப் பிராண வேதனை – உனக்குச் சிரிப்பா" – என்று குத்தலாகக் கேட்டதும், தோழி மீண்டும் சிரித்துக் கொண்டே, "அம்மா! உங்கள் காதலர் வந்துகொண்டே இருக்கிருர். அதனுல்தான் சிரிக்கிறேன்" என்று சொன்னுள்.

தலைவி: ஏதடி? விளையாடுகிருய்?

தோழி: விளையாட்டல்ல, அம்மா! உங்கள் தலைவர் ஒரு பாலைவனத்தின் வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது அங்கே ஒரு சிறு சுனையைக் கண்டார். அதில் சொற்பத் தண்ணீர் தான் இருந்தது. அந்தப் பக்கமாக இரு மான்கள் வந்தன.

தலைவி: போதுமடி, உன் கதை! என் காதலர் வருவதாகச் சொன்னுயே!

தோழி: ஆமாம். அதைத்தானே சொல்லுகிறேன். அந்த மான்களுக்கு மிகுந்த தாகம் ஏற்பட்டது. சுனையைக் கண்டன; அதன் பக்கம் சென்றன. இரண்டு மான்களுக்கும் அருந்தப் போதுமான நீர் அதில் இல்லை. இதைக் கண்ட ஆண் மான், பெண் மானைப் பார்த்து அந்த நீரைப் பருகச் சொன்னது. ஆனுல் பெண் மானே, தனது காதலன் குடிக்காமல், தான் குடிக்க மாட்டேன் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டது. ஆண் மான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், பெண் மான் கேட்கவில்லை. ஆண் மான் தானும் குடிக்கிறேன் என்று ஒப்புக்கொண்டு, இரண்டு மான்களும் சுனைத் தண்ணீரைப் பருக ஆரம்பித்தன. பெண் மானுக்குப் பூராத் தாகமும் அடங்கியது. சுனைத் தண்ணீரும் காலியானது.

தலைவி: என்னடி? ஒரு மானுக்குப் போதுமான தண்ணீர்தான் சுனையில் இருந்தது என்று சொன்னுய். இப்போது இரண்டு மான்களும் வயிருரக் குடித்து விட்டதாகச் சொல்லுகிருயே! அதெப்படி?

தோழி: அதுவா? அதனுல்தான் வருவார் என்று சொன்னேன்.

தலைவி: என்னடி? புதிர் போடுகிருய். என் கேள்விக்குப் பதில் சொல்லு!

தோழி: சொல்லுகிறேனம்மா!

சுனையின் சொற்ப நீர் தனக்கும் தனது பெண் மானுக்கும் காணுது என்று எண்ணிய ஆண் மான்தான், குடிப்பது போன்று "ஊச்சு, ஊச்சு" என்ற தொனியை மட்டும் எழுப்பியது. இப்படியாக தன து அருமைப் பிணையைப் பருகச் செய்தது.

நீண்ட பெருமூச்சுடன், "ஆஹா காதலின் பெருமையே பெருமை" என்று தலைவி சொன்னுள்.

தோழி: இதை உங்கள் கணவர் பார்த்தார்.

தலைவி: பார்த்தாரா?

தோழி: அதனுல்தான் சொல்லுகிறேன். அவர் நிச்சயமாக உங்களை மறக்க முடியாது. மறக்க மாட்டார்—வந்துவிடுவார் வருந்த வேண்டாம்.

இப்படியாகத் தலைவிக்கு ஆறுதல் அளித்த தோழி, அவளை ஒரு கிள்ளு, கிள்ளிவிட்டுச் சிரித்தாள்.

இது உண்மைதானா? நடந்திருக்குமா? என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்கக் கூடாது. இதுதான் காதலின் பெருமையை எடுத்துக் காட்டும் அருமையான கவிதைச் சித்திரம்; மனோபாவத்தை எடுத்துக் காட்டும் அற்புதக் கண்ணாடி. இனி, பாட்டைப் பாருங்கள். பாட்டு, பழம் பாட்டுத்தான் என்றாலும் கற்பனையின் சிகரத்தை எட்டிப் பிடிக்கிறது:

'சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றுன்னிப்
பிணைமான் பேரி(து) உண்ண வேண்டிக்—கலைமான் தன்
கள்ளத்தால் ஊச்சும் சுரம் என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி''

இது கவிதையில் வரும் காதல் தான். ஆனாலும் உள்ளத்தை உருக்கும் தன்மை பெற்றிருக்கிறதல்லவா?

காதலில் ஈடுபட்ட ஒருவனுக்கு அவனது காதலியின் மீது ஆசை எல்லையற்றதாக இருந்தது என்று சொல்லுகின்ற அதே உண்மையை, இப்படிக் கற்பனையோடு கலக்கப் பட்டதும், அசாதாரணமான ஒரு பாவம், ஒரு வேகம், ஒரு உணர்ச்சி



எல்லாம் தோன்றிவிடுகின்ற தல்லவா?

ஆகவே, உண்மையைச் சொல்லும்போதும், அந்த உண்மை கவிதை வடிவத்தில் வரும்போதும், கற்பனை நயத்தோடு வரவேண்டும்—அதில்தான் சக்தி இருக்கும்! கவிதையின் குறிக்கோள் வெறும் உண்மையை மட்டும் சொல்லுவதன்று; ஞான மார்க்கத்தைக் காட்டுவதும் அன்று. பின் எப்படி இருக்க வேண்டும்? உண்மைக்கு அழகைக் கொடுப்பதாகவும், ஞானத்திற்கு ஒளியைக் கொடுப்பதாகவும் இருக்கவேண்டும். இதை ஆங்கில அறிஞர் ஒருவர், "The object of poetry is not truth or edification; but beauty" என்று சொல்லுகிறார். இன்னொருவர், "Song is not truth nor wisdom; but the rose upon truth's lips, and the light in wisdom's eyes" என்றும் சொல்லி இருக்கிறார்.

இதைக் கருத்தில் வைத்துக் கொண்டே இன்னுமொரு முறை பழந்தமிழ்ப் பாட்டைப் படித்துப் பாருங்கள்!

ஸ்ரீனிவாச ராமானுஜம்

திரு. ஆர். அனுமந்த ராவ், M. A.

கணித உலகிற்கே புரட்சியையும், புதுமையையும் தந்து வான் புகழ் பெற்று இளம் வயதிலேயே விண்ணுலகை எய்தினர் திரு. சினிவாச ராமானுஜம். இவருடைய அரும் பெரும் கணித ஆராய்ச்சியையும், கணித முற்போக்கிற்கு இவர் தந்தருளிய புதுமை முறைகளையும் கண்டு களித்துத் திகைத்து நிற்காதோர் இவ்வுலகில் இலர் என்பது மிகையாகாது. இந்தியாவில் மட்டுமல்ல! மேலைநாடுகளில் உலகம் போற்றுதற்குரிய கணித ஆராய்ச்சியாளர் கண்டறியாத புதுமைத் தத்துவங்களை இவர் உலகிற்குப் புகட்டினர். இந்தியரின் ஆராய்ச்சித் தன்மையையும் அவர் புகழ்வாய்ந்த புத்திக் கூர்மையையும் ஒவ்வொரு இந்தியனும் இறுமாப்புடன் பேச வாய்ப்புத் தந்த இப்பேரறிஞர் யார் என்று உணர்வோம்.

சினிவாச ராமானுஜம் தமிழ் நாட்டில் கோவை ஜில்லாவைச் சார்ந்த ஈரோடு தாலுக்காவில் கி. பி. 1887 டிசம்பர் 22 தேதி தோன்றினர். இவருடைய குலம் முதலியவைகளை ஆராய்ந்தால் போற்றுதற்குரியன சிறிதும் இல்லை எனலாம்! இவருடைய தந்தையார் மிகவும் ஏழை. அவர் கும்பகோணத்தில் ஓர் ஆடைக் கடைக் கணக்கராகத் தொழிலியற்றி வந்தார். அன்னையும் ஓர் ஏழைக் குடும்பத்தையே சார்ந்தவர். ஆகவே இந்த ஏழைக் குடும்பத்தில் தோன்றிய ராமானுஜம் இளமைப் பருவம் முதல் வறுமையால் வாடி வளர்ந்தார். ராமானுஜம் பிறக்கும் முன் இவருடைய அன்னை குழந்தையில்லாமையினால் நாமக்கல் கடவுளாகிய ஸ்ரீ நாமகிரி அம்மனைத் துதித்தும் சேவை செய்தும் அவர் அருளைப் பெற்று இம் மகனை ஈன்றார்.

இவருடைய ஐந்தாவது வயதில் இவரை ஒரு திண்ணைப் பள்ளியில் பெற்றோர்கள் சேர்த்தார்கள். இருவருடங்களுக்குப் பின்னர்க் கும்பகோணம் உயர்தரப்பள்ளியில் இவருக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டுத் தம் பள்ளி வாழ்க்கையை முற்றிலும் முடித்தார். இவர் இப்பள்ளியில் கற்கும் பொழுது எப்பொழுதும் ஏதோ தீவிர யோசனையிலேயே ஆழ்ந்திருப்பார்; நட்சத்திரக் கூட்டங்களின் தோற்றத்தைப் பற்றியும், அவைகளின் தூரத்தைப் பற்றியும், உலக அமைப்பைப் பற்றியும், அவர் வயதுள்ள மற்ற மாணவர்களுக்குத் தோன்றாத கேள்விகளைப் பற்றியும் விசாரித்துக்கொண்டே இருப்பார். இவர் இரண்டாவது பாரம் படிக்குங்கால் இவருடைய ஆசிரியர் ஓர் எண்ணை அதே எண்ணால் வகுத்தால் விடை ஒன்று என்று கூறியதற்கு இவர் மிகவும் தாழ்மையான வணக்கத்துடன் பூஜ்யத்தைப் பூஜ்யத்தால் வகுத்தால் விடை ஒன்றா என்று கேள்வி விடுத்தார். (பூஜ்யத்தைப் பூஜ்யத்தால் வகுத்தால் விடை என்ன என்பதைக் கணித ஆராய்ச்சியாளர்கள் இன்னும் கண்டறியவில்லை). வகுப்பு மாணவர்களையும் ஆசிரியர்களையும் திகைக்க வைத்த பல நிகழ்ச்சிகளில் இது ஒன்று ஆகும்.

இவர் உயர்நிலைப் பள்ளி வகுப்புக்களில் படிக்கும்பொழுதே இண்டர்

மீடியட், பி. ஏ. பட்டங்களுக்குப் படிக்கும் மாணவர்களுக்குப் புகட்டக்கூடிய "மூன்று ப்ரொக்ரஷன்ஸ்," "ஹையர் டிரிக்னாமெட்ரி" முதலியவற்றை நன்கு பயின்றார். தாம் பயின்றது மன்றி அண்டை வீட்டு பி. ஏ. மாணவனுக்குக் கடினமான கணக்குகளை எளிதில் போடும் முறைகளை எடுத்துரைத்தார். கி. பி. 1903-ல் இவர் ஆறாவது பாரம் படிக்கும் பொழுதே, எம். ஏ. வகுப்புகளுக்குப் புகட்டும் "ப்யூர் மேதமாடிக்ஸ்" என்ற கணிதப் பொருளைத் தாம் படித்தது மன்றி ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுப் பல வகைத் தேற்றங்களையும் கண்டு பிடித்தார். இதர ஆராய்ச்சிக்குரிய கணிதப் பேருரைகள் இவருக்குக் கிட்டவில்லை. தமது தோழர் ஒருவர் மூலம் 'கார்ஸ் ஸினப்ஸில் ஆப் ப்யூர் மேதமாடிக்ஸ்' என்ற புத்தகத்தைக் கடன் வாங்கி அங்குள்ள வினாக்களுக்கு இப் பள்ளி வயதிலேயே எளிதில் விடை கண்டார். வேறு புத்தகத்தின் உதவியின்றி விடை காணப்பட்டதால் ஒவ்வொன்றும் அவருக்குப் புதிது புதிதாகவும் உற்சாகத்தை ஊட்டுவதாகவும் இருந்தது. இப்புத்தகத்திலிருந்து தாமாகவே சுமார் 6000 தேற்றங்களின் நுட்பத்தை உணர்ந்தார். இவரைப்பற்றி ந்யூமன் என்பவர் சொல்வதாவது: "திரு. ராமானுஜம் தற்போதைய காலத்திலிருக்கும் கணித ஆராச்சியை விட அதிகமானதுடனே தான் இங்கிலாந்திற்கு வந்தார். அவர் ஒரே முயற்சியில், பிறர் உதவியில்லாது, ஐரோப்பாவில் 50 வருடங்களில் கண்டறிந்த நுட்பத்தைக் கண்டறிந்தார். நினைவு உலகில்கூட இந்த மாதிரி நிகழ்ச்சி ஒன்று இருக்கக் கூடுமா என்று நம் மனத்திற்கு ஐயம் எழுகிறது."

உயர்நிலைப்பள்ளித் தேர்தலில் கி. பி. 1903 டிசம்பரில் தேறிக் கும்பகோண அரசாங்கக் கல்லூரியில் முதல் வகுப்பில் (இண்டர் மீடியட்)சேர்ந்தார். இவருக்குக் கணிதப் பொருள்களின் ஆராய்ச்சி மனப்பான்மை அதிகரித்ததனால் மற்றப் பாடங்களில் கவனம் குன்றியது. எல்லா வகுப்புக்களிலும் கணித ஆராய்ச்சியே செய்யத் தொடங்கினார். ஆகவே, முதல் வகுப்புத் தேர்வில் தேறமுடியாமல் போயிற்று. இதனால் அவருக்கு வழங்கி வரப்பெற்ற உதவிப் பணத்தையும் இழந்தார். பிறகு கும்பகோணத்தை நீங்கிச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். பின்பு அதையும் விட்டு, தனிமையாகப் படித்து கி. பி. 1907ல் நடைபெற்ற தேர்வில் கலந்து கொண்டார். ஆனால், அத்தேர்விலும் தோற்றார். எனினும் கணித ஆராய்ச்சியை விடாமல் நடத்தி வந்தார்.

கி. பி. 1909ல் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. ஆனால், இவர் வாழ்க்கை திடப்பட வில்லை. பிழைக்கும் வழியைத் தேடிப் பல இடங்களுக்கு அலைந்தார். இந்தியக் கணித ஆராய்ச்சி அலுவலக அமைப்பாளர் இவருடைய கணித ஆராய்ச்சிப் புத்தகத்தைப் பார்வையுற்றுக் களிப்புடன் இவருக்குச் சென்னை மாகாண வரவு செலவுக் கணக்கெடுப்பு அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்தினார். சிறிது காலத்திற்குப் பிறகு இவர் இதையும் துறந்து மறுமுறையாகச் சென்னை "கடற் போக்குவரத்து" அலுவலகத்தில் மாதம் ரூ 30 சம்பளத்தில் கணக்காராகச் சேர்ந்தார். முதன்மையாக 1911ல், இந்தியக்கணித ஆராய்ச்சிக் கதிரில் இவருடைய "பெர்னெலி எண்களின் சில நுட்பங்கள்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரை வெளிவந்தது. 1912ல் இன்னுமிரண்டு ஆராய்ச்சிகளும் வெளிவந்தன. அப்போது அங்கிருந்த கணிதப் பற்றுடைய நெல்லூர் கலெக்டர் ராமச்சந்திர ராவ், சென்னை இஞ்சினீரியங் கல்லூரியைச் சேர்ந்த திரு. கிரிப்த், திரு. சேஷுஐயர் அவர்கள் உதவியால் இவர் மேலைநாட்டுக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகக் கணித ஆராய்ச்சியாளர் ஹார்டி என்பவருடன் கடிதப்போக்குவரத்துத் தொடங்கினார் ராமானுஜம். அவருடைய கடிதத்தை உற்று நோக்குங்கால் வறுமையால் வாடி வாழ்க்கையை நடத்தி நாட்டிற்குத் தொண்டு புரிந்த பாரதியார் போன்ற பலருடைய நினைவு நமக்கு வருகிறது. அவர் எழுதுகிறார்: "என் மூளையைப் பாதுகாக்க எனக்கு முக்கியமாக உணவு தேவை. இதுதான் என்னுடைய முதல் நோக்கம்". ஹார்டி இவருடைய ஆராய்ச்சித் திறமையைப் பார்த்துத் திகைத்து இவரைத் தம்மிடம் வரவழைக்க முயன்றார். மேலும் இதுகாறும் இவர் மீது கவனம் செலுத்தாத சென்னைப் பல்கலைக் கழகத்தினர் ஹார்டியின் ஆதரவு பொருந்திய கடிதம் கிடைத்தவுடன் இவருக்கு இரண்டு வருடங்களுக்கு மாதம் ரூபாய் 75 உபகாரச் சம்பளம் வழங்கினார்கள். நாட்டின் கலைச்செல்வத்தை வளர்க்க முயன்றார்களே அன்றி, கலைவாணருக்குச் சிறிது உதவி புரிவதற்குக்கூட அக்காலத்திய பல்கலைக் கழக நிர்வாகிகளுக்குத் தோன்றவில்லை போலும்.

இவரை மேலைநாட்டிற்கு அனுப்ப உதவி புரிய முன்வருவாரில்லை. ஹார்டியின் ஆதரவாலும் சென்னைப் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்குக் கணித ஆராய்ச்சியை எடுத்துரைக்க இங்கிலாந்திலிருந்து அழைக்கப்பட்ட "நெவிலி" என்றவருடைய விண்ணப்பத்தாலும் சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகிகள் இவரை இங்கிலாந்திற்கு அனுப்ப 250 பவுன் உதவிச் சம்பளம் கொடுத்தார்கள். நெவிலி எழுதுவதாவது: "கணித உலகிலேயே சென்னையைச் சேர்ந்த ராமானுஜத்தின் அறிவின் நுட்பத்தைக் கண்டறிந்தது மிக உணர்ச்சியுற்றதாக இருக்கிறது. அவர் பெயர் கணித ஆராய்ச்சி வரலாற்றிலேயே மிகப் பெரியதாகத் திகழும். அவரை இருள் கவியும் சூழ்நிலையிலிருந்து மேனிலைக்கு வர உதவி புரிந்த சென்னைப் பல்கலை கழகத்தாரும், சென்னை மக்களும் இறுமாப்புடன் இருக்க உரிமை பெற்றவர்கள் ஆவர்." இவர் தமக்கு உதவியாக அளித்த சம்பளத்தில் ரூ. 60 கும்பகோணத்தில் வறுமையில் வாடும் தாய் தந்தையர்களுக்குக் கொடுக்கும்படியாகச் செய்துவிட்டு 1914-ம் வருடம் மார்ச்சு மாதம் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார். இங்கிலாந்தில் ஹார்டி போன்ற பல ஆராய்ச்சியாளர்களுடன் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டார். 1915-ல் இவரைப் பற்றி ஹார்டி சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகிகளுக்கு எழுதியவதாவது: "தற்போதைக்கு அவர் மிகப் பெரிய இந்தியக் கணித ஆராய்ச்சியாளர் என்பதில் ஐயமில்லை. அவர் அறிவின் நுட்பத்தைப்

பற்றி ஐயமிருக்க முடியாது. சில விஷயங்களில் எனக்குத் தெரிந்தவரை அவரே மிகப் பெரிய கணித ஆராய்ச்சியாளர்.''

1918 பிப்ரவரியில் இவர் அரசாங்க ஆராய்ச்சியாளர் குழுவின் ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதுவே முதன்மையாக ஆங்கிலேயர் தங்கள் குழுக்களில் ஒரு இந்தியரைச் சேர்த்துக்கொண்ட நிகழ்ச்சி. இதைக் கண்ட சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகிகள் மீண்டும் வருடம் 250 பவுன் வீதம் 5 வருடங்களுக்குப் பரிசு வழங்கினார்கள். அதே வருடம் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக உதவி ஆராய்ச்சியாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று வருடம் 250 பவுன் வீதம் 6 வருடங்களுக்குப் பரிசு வழங்கப்பெற்றார். ஆனால், இவர் உடல் நிலையை யொட்டி இங்கிலாந்தை விட்டுப் புறப்பட நேரிட்டது. 1919-ம் வருடம் அவர் இந்தியா திரும்பிவிட்டார். சிறந்த வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை பெற்றும் இவர் 1920-ம் வருடம் ஏப்ரல் மாதம் விண்ணுலகை எய்தினார். ராமானுஜத்தின் திறமையைப் பற்றிக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் ஹார்டி அவருடைய பலவகைத் திறமைகளையும் நன்கு எடுத்துக்காட்டி ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறார். ஹார்டி ராமானுஜத்தைப் பார்ப்பதற்காகப் பட்னி ஆஸ்பத்திரிக்கு 1729 இலக்கமிட்ட காரில் சென்றார். ராமானுஜமிடம் இந்த இலக்கம் ஆராய்ச்சியாளருக்கு மகிழ்ச்சியை தரக்கூடியதல்ல என்று சொன்னதற்குத் திடீரென்று ராமானுஜம் ''இந்த இலக்கமானது இருமுறைகளில் எண்களின் கனபரிமாணத்தைக் கூட்டிய சிறிய எண் ஆகும்'' என்றார். இம்முறையில் எண்களைப் பற்றிய வரையில் கண்டறியாத முறையிலும், அளவிலும் இவர் தேர்ச்சி பெற்றவர் என்று ஹார்டி குறிக்கிறார்.

திரு. ராமானுஜம் வைதீக முறையைப் பின்பற்றிய பொழுதும், ஹார்டியிடம் ''ஜாதி ஒன்றொழிய வேறில்லை'' என்று பலமுறை குறிப்பிட்டதாக ஹார்டி எழுதுகிறார். ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிரியப்பட்ட முறையில் கடவுளைத் தொழுகிறார்களே ஒழிய ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற பொன் மொழியைக் கைவிடலாகாது என்று குறிப்பிட்டதாகவும் ஹார்டி எழுதுகிறார்.

நாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டிய தன்னலமற்ற தியாகிகளுடன் இவரை, ஒப்பிடலாம். ஏனெனில் இவர் இறக்குமுன் பல்கலைக் கழக நிர்வாகிகள் வழங்கிய பரிசு பெறுமுன் ''என் செலவுகளுக்காகி, மிகுந்ததைக் கல்வி வளர்ச்சிக்காகவும், அதாவது பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கும் தாய் தந்தையர் அற்றவர்களுக்கும், புத்தகங்கள் மூலமும், சம்பள உதவி மூலமாகவும் உபயோகப் படுத்தவேண்டும்'' என்று எழுதியிருக்கிறார்.

கதிரவன் காலையில் தோன்றி உலகிற்கு வெளிச்சம் தந்து மாலையிலேயே மறைவது போலத் திரு. ராமானுஜம் உலகில் தோன்றிக் கணித முற்போக்கிற்கு அருள் புரிந்து இளம் வயதிலேயே மறைந்தார். எனினும் அவர் புகழ் மறையும் நாளும் உண்டோ?

'' சத்தியத்தின் நித்தியம் ''

''என்னைப் போன்றவர்கள் நூற்றுக் கணக்காக அழிந்தாலும் பரவாயில்லை; வாய்மைமட்டும் என்றும் நின்று நிலவட்டும். என்னைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பற்றி முடிவு செய்யவேண்டுமென்பதற்காக, வாய்மை நெறியிலிருந்து மயிரிழை அளவுகூடப் பிசகக்கூடாது.''

— காந்தியடிகள்.

திரு. பி. ரங்கநாதன்

காஞ்சிபுரத்தில் கல் கனிந்தது

(பல்லவர் சிற்பம்)



திரு. D. I. சங்கரமியரான்

பகலும் — — —



திரு. D. I. சந்தாமியசன்

— — — இரவும்



'யூசிஸ்'

எக்ஸ் – கதிர் உற்பத்தி இயந்திரம்

எவ்வளவு உயரம் என்பதைப் பக்கத்தில் நிற்கும் விஞ்ஞானியின் உயரத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். இந்த இயந்திரம் 14 லட்சம் வோல்ட்டில் (14,00,000 Volts) 25 மில்லி ஆம்பியர் (25 milli amperes) எக்ஸ் - கதிர் மின்சாரத்தை வெளியாக்கும் திறம் வாய்ந்தது. கடைசியில் உள்ள மூன்றவது எக்ஸ் - கதிர்க் குழாயின் உதவியினால் புற்று நோய் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

● "ஐயா, என் நண்பருடைய உறவினருக்கு நாளைக் காலையில் திருமணமாம். அதற்கு ஒரு வாழ்த்துப் பாட்டு எழுதிக் கொடுங்கள்" என்று ஒருவர் கேட்கிறார். உடனே செய்யுள் உருவாகிறது!..................

சடங்குச் செய்யுள்

டாக்டர் மு. வரதராசன், M.O.L., PH.D.

ஒரு கூட்டத்தில் சொல்ல வேண்டியவற்றை முன்னதாகவே ஆர அமர எண்ணி எழுதி முடித்துக் கூட்டத்தில் படித்து விடும் வழக்கம் சில இடங்களில் உள்ளது. அதையும் சொற்பொழிவு என்றே கூறுகிறார்கள். மனத்தில் தோன்றிய எண்ணங்களை அந்த நேரத்தில் அவ்வாறே கூட்டத்தினர்க்கு எடுத்துச் சொல்லும் சொற்பொழிவு முறை இருக்கும்போது, எழுதிப் படிக்கும் முறை ஏன் வந்தது?

கூட்டத்தில் போய் நின்றதும் உள்ளத்திலும் உடம்பிலும் தோன்றும் நடுக்கத்தால், சிலரால் பேச முடிவதில்லை; எண்ணக் கோவை சிதைவுபடுகிறது; அதனால் எழுதிப் படிக்கும் வழக்கத்தை மேற்கொள்ளத் தொடங்கினார்கள் என்று ஒரு காரணம் கூறலாம். இவ்வாறு சபைநடுக்கம் உடையவர்கள் எழுதிப் படிப்பதிலும் வெற்றி பெற முடியாது; ஆயினும் ஓரளவு கடமையைச் செய்ததாக ஆறுதல் கொள்ளமுடியும். (நீதிமன்றத்தில் வாய்திறக்க முடியாதவனுக்காக வழக்காடும் வழக்கறிஞனைப்போல், எண்ணும் ஆற்றல் இல்லாதவனுக்காக அந்த ஆற்றல் உள்ள அறிஞர் ஒருவர் எழுதிக் கொடுக்க அதைக் கூட்டத்தில் படித்துவிடும் வழக்கமும் உண்டு. அதைச் சொற்பொழிவு என்று கூறுவதே சொல்லின் பெருமையைக் குறைக்கும் குற்றமாகும்.) எழுதிப் படிக்கும் பழக்கம் தோன்றி வளர்ந்த உண்மைக் காரணம் வேறு. ஆங்கில நாட்டு வழக்கத்தை ஆராய்ந்தால், அல்லது, அதை நாம் பின்பற்றும் முறையை ஆராய்ந்தால், அந்தக் காரணம் விளங்கும்.

நாட்டின் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் பொறுப்பான கடமைகளைக் குறித்துக் கூடிய கூட்டங்களில் பேசும்போது, எழுதிப் படிக்கும் வழக்கத்தைக் கையாளுகிறார்கள்; பல்கலைக் கழகங்களின் பட்டமளிப்பு விழாப் பேச்சுக்கள், மாநாடுகளின் தலைமையுரைகள் முதலியவைகளும் எழுதிப் படிக்கப்படுகின்றன. இத்தகைய சொற்பொழிவாளர்களைச் சபைநடுக்கம் உடையவர்கள் என்று கூற முடியாது. உண்மையை நோக்கினால், இவர்கள்

24712

எழுதிப் படிப்பதை விட எழுதாமலே அழகாகப் பேசும் திறன் உள்ளவர்கள்; ஆயினும் பொது நன்மையைக் கருதி ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு எழுதிப் படிக்கிறார்கள் கட்டுப்பாட்டை ஒரு கலையாக வளர்த்துள்ள ஆங்கில நாட்டில் சொல்லின் செல்வராக உள்ளவர்களும் இவ்வாறு எழுதிப் படிக்கும் வழக்கத்தைப் புறக்கணிப்பதில்லை.

மனிதன் தன் உணர்ச்சியை நம்ப முடியாமல் அறிவை நம்பிச் செய்யும் ஏற்பாடுகளில் இது ஒன்று ஆகும். கூட்டத்தில் நின்று பேசுவதானல், கூட்டத்தினரின் உணர்ச்சி அவர்களுடைய முகக் குறிப்பாலும் ஆரவாரத்தாலும் வெளிப்பட்டுப் பேசுவோரிடம் செல்லும்; பேசுவோரின் உணர்ச்சியும் அவருடைய முகக் குறிப்பு, உடலசைவு முதலியவற்றால் வெளிப்பட்டுக் கூட்டத்தினரைச் சேரும். எந்த உணர்ச்சி எப்போது-எவ்வாறு தோன்றிடுமோ, அதனல் தாம் மேற்கொண்ட பொறுப்பான கடமை நிறைவேறத் தடைப்படுமோ என்று பொறுப் புணர்ந்தவர்கள் கவலை கொண்ட காரணத்தாலேயே, மிக்க உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் அறிவின் துணையால் ஒழுங்காக எழுதிப் படிக்கத் தொடங்கினர்கள். முன்னமே எண்ணி எழுதிய காரணத்தால், எழுதும்போது உணர்ச்சி குறைந்திருக்கும்; படிக்கும்போது இன்னும் குறையும்; ஆகையால் அவருடைய முகக் குறிப்பு முதலியவை கூட்டத்தினரைச் சேர்ந்து அவர்களுடைய உணர்ச்சியைத் தூண்ட வழி இல்லை; கூட்டத்தினர் ஏதேனும் உணர்ச்சி உற்ற போதிலும், அந்த உணர்ச்சி பேசுவோரின் கண்ணை ஈர்க்காது; ஒருகால் ஈர்த்தாலும், அதனல் அவர் முன்னமே எழுதி வைத்துள்ள கருத்தை மாற்ற முடியாது. ஆகையால் முன்னேற்பாடாகச் செய்துள்ளவை ஒழுங்காக நடைபெறும்; ஆரவாரமான பேச்சையும் உணர்ச்சிப் பெருக்கையும்விடப் பொறுப்பான கடமையே பெரிது எனக் கொண்ட காரணத்தால், அந்த மேடையில் அந்த நேரத்தில் அவர்களுக்குப் பெரிய மகிழ்ச்சி விளையாவிட்டாலும், பிறகு கடமையின்பம் விளையும். மற்றொரு நன்மையும் உள்ளது; எழுதிப் படிக்காவிட்டால், பேசுவோர் முன்பு எண்ணிய கருத்தையே உணர்ச்சி காரணமாகத் திரித்துக் கூற இடம் உண்டு; அவர் உள்ளவாறே பேசிய போதிலும், கேட்போர் தம் உணர்ச்சி காரணமாக அதையே திரித்து உணரவும் இடம் உண்டு; இந்த இரு வகைத் திரிபுக்கும் எழுதிப் படிக்கும் முறையில் இடம் இல்லை. இவ்வாறு உணர்ச்சியை நம்பாமல் அறிவை நம்பித் துணையாகக் கொண்டதாலேயே எழுதிப் படிக்கும் சொற்பொழிவு முறை தோன்றியது.

அறிவு அமைதி உடையது; வயல் சார்ந்த பரந்த நிலத்தில் பாயும் ஆறு போன்றது. உணர்ச்சி காட்டாறு போன்றது; எந்த நிலையில் எந்த நேரத்தில் என்ன தோன்றும் என்று முன்னதாக அளந்தறிய முடியாது. இது தான் அதன் மேல் நம்பிக்கை பிறக்காததற்குக் காரணம். இன்ன உணர்ச்சிதான் தோன்றும் என்று எதிர்பார்க்க முடியுமானல், பொறுப்புள்ளவர்கள் அதை வெல்லும் முயற்சியில் ஈடுபடத் தேவையே இல்லை. வாழ்க்கை என்னும் போராற்றிற்கு, அறிவின் வளர்ச்சிக்கு, இந்த உணர்ச்சிக் காட்டாறு இன்றியமையாதது என்

பது அவர்களுக்குத் தெரியும். ஆயினும், அதற்குரிய இடம் வேறு என்று தெளிந்து ஒதுக்கிக் கடமையைச் செய்ய முனைந்தார்கள்.

உணர்ச்சி மிகுந்த சொற்பொழிவு, ஆற்றல் மிகுந்த கலையாகும். நாட்டு மக்களை உடனடியாகத் தூண்டிவிட, நாட்டில் எதிர்பாராதவற்றை நடத்திவிட அந்தக் கலைக்கு ஆற்றல் உண்டு. ஆனால், அந்த ஆற்றல் நன்மைக்கே பயன்படும் என்று வரையறுக்க வழி இல்லை. அதனால் பொறுப்புள்ளவர்கள் அந்தக் கலையிலிருந்து உணர்ச்சிப் பகுதியைக் குறைக்க வழி தேடினார்கள்.

இதற்கு அடுத்தபடியாக ஆற்றல் வாய்ந்த கலை நாடகக் கலை. சிறந்த சொற்பொழிவைக் கேட்போர் உணர்ச்சி மயமாக விளங்க முடிவது போலவே, சிறந்த நாடகத்தைக் காண்போரும் தம்மை மறந்து அழவும் சிரிக்கவும் முடியும். ஆனால், ஓவியம் சிற்பம் முதலான கலைகளுக்கு இவ்வளவு ஆற்றல் இல்லை. கலைகள் எல்லாம் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவைகளே; ஆயினும் அவற்றுள் சிலவற்றிற்கு ஆற்றல் பெருகியிருக்க வேறு சிலவற்றிற்கு ஆற்றல் குறைந்திருக்கக் காரணம் என்ன? உணர்ச்சி புலப்படுவதற்கு வாயிலாக உள்ள கருவிகளின் சிறப்பே காரணமாகும். சொற்பொழிவிலும் நாடகத்திலும் உணர்ச்சிக் கருவிகளாக உள்ளவை சொற்களும் குரலும் முகக் குறிப்பும் கையசைவும் முதலியவை. இவை வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு உள்ளவை. ஆகையால் கேட்போரையும் காண்போரையும் உடனே சென்று சார்ந்து இயங்குகின்றன. ஆனால், ஓவியம் சிற்பம் என்னும் கலைகளில் கோடும் நிறமும் மண்ணும் கல்லும் முதலியவை கருவிகளாக உள்ளன; இவை வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு இல்லாதவை. ஆகையால் காண்போரை உடனே இயக்கும் ஆற்றல் இவற்றிற்கு இல்லை. ஆனால், மற்றொரு சிறப்பு இந்தக் கலைகளுக்கு உண்டு. உடனே பயன் விளைக்காத இந்தக் கலைகள் நெடுங்காலம் நின்று பயன் விளைக்க வல்லவைகளாக இருக்கின்றன. கேட்ட சொற்பொழிவும், கண்ட நாடகமும் அடுத்த நாளே பழங்கதையாய்க் கனவாய் மெல்ல மறைகின்றன; ஓவியமும் சிற்பமும் நெடுங்காலமாக, பல நூற்றாண்டுகளாக நின்று பயன் தருகின்றன. ஆகையால் ஒரு வகையில் குறையாக இருந்ததை மற்றொரு வகையில் நிறையாகப் பெற்று வருகின்றன.

விளைக்கும் பயனில் இவ்வளவு வேறுபாடு கலைகளுக்குள் இருந்த போதிலும், பிறக்கும் முறையில் வேறுபாடு காணோம். சிறந்த சொற்பொழிவாளன் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து கலையாக்கித் தருவது போலவே ஓவியக் கலைஞனும் தன் உணர்வைக் கலையாக்கித் தருகிறான். அவன் உணர்ச்சிப் பெருக்கில் ஊறித் திளைத்துக் கரையேறுவது போலவே இவனுடைய கலை முயற்சியும் அமைகிறது. இவை மட்டு அல்ல; சிறந்த சொற்பொழிவாளனுக்கு இன்ன உணர்ச்சி இன்ன நிலையில் இவ்வாறு பிறக்கும் என்று எதிர்பார்க்க முடியாதது போலவே சிறந்த சிற்பக் கலைஞனின் கைப்பட்ட உலோகம் இன்ன காரணத்தால் இன்னவாறு அமையும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. உணர்ச்சி வேகத்தில்

பேசும் சொற்பொழிவாளனுக்கு முன்பு கருதாத புதிய புதிய கருத்துக்கள் பிறப்பது போலவே, சிற்பக் கலைஞனுக்கும் தொடங்கும் போது இல்லாத புதிய புதிய உண்மைகள் புலனாகும். அவன் பேசத் தொடங்கும்போது எண்ணியமைத் ததற்கும் பேசி முடித்துக் கண்டதற்கும் எவ்வளவோ வேற்றுமை இருப்பது போலவே, இவன் அமைக்க எண்ணிய உருவத்திற்கும் அமைத்து முடித்த உருவத்திற்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கும். கலை முயற்சியில் இருக்கும்போது அவனும் தன்னை மறக்கிறான்; இவனும் தன்னை மறக்கிறான்; அவனையும் உணர்ச்சி இயக்குகிறது; இவனையும் உணர்ச்சி இயக்குகிறது.

பாட்டும் ஒரு கலை; உயர்ந்த கலை. அது சொற்பொழிவு முதலிய கலைகளைப் போல் கேட்டவுடனே உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்துவதும் அல்ல; ஓவியம் சிற்பம் போல் தன்னை நாடினோர் எல்லோரையும் கவர்வதும் அல்ல; மெல்ல மெல்ல, நவில்தொறும் நவில்தொறும் நயம் பயப்பது; பண்பட்ட மிகச் சிலர்க்கே பயன் தருவது. ஆயினும் இதற்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஓவியங்களும் சிற்பங்களும் பெற்றுள்ள வாழ்நாளைவிட இதன் வாழ்நாள் பலமடங்கு மிகுதியாகும். ஒரு நாட்டின் நாகரிகச் சிறப்புக்கள் எல்லாம் அழிந்த பிறகும் அழியாமல் நிற்க வல்ல தனிச் சிறப்பு இந்தப் பாட்டுக் கலைக்கு உண்டு.

விளக்கும் பயனிலும் வாழும் காலத்திலும் இவ்வாறு வேறுபாடு இருந்தபோதிலும், பிறக்கும் முறையில் இந்தப் பாட்டுக் கலை மற்றக் கலைகளைப் போன்றதே. நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து எழுந்த கலையே இதுவும். கவிஞன் பாடத் தொடங்கும் போது எவ்வாறு முடிப்போம் என்பதை அறியாமலே தொடங்குகிறான். அவன் தன்னை மறக்கிறான்; உணர்ச்சி அவனை இயக்குகிறது; பாட்டு அமைகிறது; பிறகு கவிஞனே அதைக் கண்டு வியக்கிறான். இவ்வகையில் மற்றக் கலைகளுக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை.

"தூய பாட்டு என்பது முன்னமே எண்ணித் தெளிவாக்கிக் கொண்ட பொருளைப் பற்றி அணி பெறக் கூறுவது அல்ல; தெளிவுறப் படாத கற்பனைக் கருத்து, தெளிவாகத் தோன்றி விளங்குமாறு உந்திக் கொண்டெழும் உணர்ச்சியில் பிறப்பதே பாட்டு. தான் சொல்லக் கருதியது இன்னதெனத் தெளிவாகத் தெரியுமானால் கவிஞன் ஏன் பாட்டு இயற்ற வேண்டும்? அப்படியானால், பாட்டு முன்னமே எழுதி முடிந்திருக்க வேண்டுமே! தான் பாடக் கருதியது இன்னது என்பது, பாடி முடித்த பிறகே கவிஞனுக்கும் தெரியும். தொடங்கிய போதோ, பாடிக் கொண்டிருக்கும் போதோ; அவனுக்கு அது தெரியாது; அவன் அதன் வயமாக இருக்கிறான் ...." (Pure poetry is not the decoration of a preconceived and clearly defined matter; it springs from the creative impulse of a vague imaginative mass pressing for development and definition. If the poet already knew exactly what he meant to say, why should he write the poem? The poem would in fact already be written. For only its completion can reveal, even to him, exactly what he wanted. When he began and while he was at work, he did not possess his meaning; it possessed him.) என்று A. C. பிராட்லி என்னும் அறிஞர் "பாட்டு, பாட்டிற்காகவே"

(Poetry for Poetry's Sake) என்னும் ஆராய்ச்சியுரையில் கூறியது இங்குக் கருதத் தக்கது.

உணர்ச்சியின் வயமாக இருந்து கவிஞன் பாடுவதால், பாட்டு உயர்ந்த கலையாகிறது; உலகம் அதைப் போற்றுகிறது. ஆனால், பேச்சினிடையே உணர்ச்சிக்கு ஆளாக நேருமே என்று அஞ்சுவதால், பொறுப்புள்ள அதிகாரிகள் எழுதிப் படிக்கிறார்கள்; உலகம் அவர்களுடைய அறிவைப் போற்றுகிறது. உணர்ச்சிக்கு ஓர் இடம்: அறிவுக்கு ஓர் இடம்; இரண்டையுமே உலகம் போற்றுகிறது, வேறு வேறு காரணம் பற்றி.

கலையாக இருக்க வல்ல சொற்பொழிவைச் சடங்குக்குப் பயன்படுத்த முயலும்போது எழுதிப் படிக்கிறார்கள்: பட்டமளிப்புவிழாச் சொற்பொழிவு முதலியவை சடங்குகள்தான். இத்தகைய சடங்குகள் வாழ்க்கைக்கு வேண்டியவைகளே. ஆனால், பாட்டு என்னும் விழுமிய கலையையும் சடங்குக்குப் பயன்படுத்த உலகம் முயல்வது வருந்தத் தக்கதாக இருக்கிறது. அப்படியாவது அந்தச் சடங்குக்குப் பாட்டு இன்றியமையாததாக இருந்தாலும் கவலை இல்லை. அதுவும் காணேம். கூலிக்கு அல்லது பேருக்கு எழுதும் திருமண வாழ்த்தும் பாராட்டு இதழும் கையறு நிலையும் செய்யுள் வடிவாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை; உரைநடையிலேயே அமைக்கலாம். அதிலும், எவருடைய திருமணத்தைப் பற்றியோ தொடர்பில்லாத புலவர் ஒருவர் உணர்ச்சி இல்லாமல் வாழ்த்துச் செய்யுள் பாடித் தருவதும், யாரோ இறந்ததற்காக அவரைப் பற்றி ஒன்றுமே அறியாமல் யாப்பிலக்கணம் மட்டும் அறிந்த ஒருவர் கையறு நிலை பாடித்தருவதும் சடங்கு என்று கூறவும் தகுதியற்ற செயல்கள்.

ஆகையால் எழுதிப் படிக்கும் சடங்குச் செய்யுளுக்கு உலகத்தில் இடம் இல்லை. எழுதிப் படிக்கும் பேச்சு அறிவுலகத்தில் இடம் பெற்றதுபோல், இது இடம் பெற முடியாது. இந்தச் சடங்குச் செய்யுள் அறிவுலகத்தில் அடிவைக்க முடியாது: உணர்ச்சியுலகத்திலோ, இதற்குத் தொடர்பே இல்லை.

அண்டத்தை அளக்கும் கண் (ணுடி)

பலோமர் மலைமீது உள்ள தொலைநோக்கிக் கருவியைப்பற்றி நம் வாசகர்கள் ஏற்கெனவே அறிவார்கள். அதில் உள்ள 200 அங்குலக் கண்ணுடியின் படத்தையும் கலைக்கதிர் வெளியிட்டிருக்கிறது. அந்தக் கண்ணுடியின் உதவியால் 1949-ல் விண்மீன்களைப் படம் எடுத்தார்கள். அந்தப் படங்களில் சிறு சிறு பகுதிகள் கொஞ்சம் தெளிவற்று இருந்தன. காரணம் என்னவென்று ஆராய்ந்ததில், 200 அங்குலக் கண்ணுடியின் விளிம்பு ஓரத்தில் நுரைபோன்ற ஒரே ஒரு 'குமிழி' இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். இந்தக் குமிழிதான் புகைப் படங்களில் ஏற்பட்ட குறைகளுக்கு காரணமாக இருந்தது. அந்தக் குமிழியின் உயரம் என்ன தெரியுமா? ஒரு அங்குலத்தை 20- மில்லியன் பகுதிகளாகப் பிரித்தால் எவ்வளவு உயரம் இருக்கும்! அந்தப் பகுதிகளில் ஒரு பகுதி—ஒன்றின் கீழ் 20 மில்லியன் அங்குலம்—தான் அக்குமிழியின் உயரம்! இந்த அணுக் குமிழியை இப்போது நீக்கிவிட்டார்கள். அந்தக் கண்ணுடியைக் கொண்டு 30,000,000,000,000,000,000 மைலுக்கு அப்பாலுள்ள அண்டத்தின் பகுதியைப் படம் பிடித்துப் பார்த்ததில் நல்ல பயன் கிடைத்திருக்கிறதாம்.

மார்கழி மாத இதழின் தொடர்ச்சி

அணுவின் புராணம் அறிஞர் புராணமே

திரு. ச. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.

வேதிப்புலமை வீட்டுப்புலமை

வேதி ஞானம் நம் வீட்டில் வாழும் வாழ்க்கைக்குப் பயன்படுவது கண்டும் அதனைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? சமைக்க, வெண்ணெய் அமைக்க, ஊறுகாய் போட நாம் அறிந்த அறிவெல்லாம் வேதி ஞானமேயாம். நாம் தொட்டிலில் இருந்து பாடை ஏறும் மட்டும் வேதிப் புலவராகவே நம்மையும் அறியாமலே வாழ்ந்து போகின்றோம். நம் அண்டமே வேதிச் செய்க்காட்சி நிலையம். இது அடிப்படையான ஆராய்ச்சியும் ஆகும். "நாம் வாழும் உலகம் எப்படிச் சமைந்துள்ளது? இதன் உண்மை இயல்பு என்ன?" என்று ஆராயும் ஆராய்ச்சி நம் வாழ்க்கையைப் பற்றியதன்றோ? ஆனால், அணு ஆராய்ச்சி ஒரு டாம்பீக ஆரவாரம் அன்று; உயிரையே கையிற் பிடித்துக்கொண்டு ஒரு சிலர் தம் வாழ் நாட்களையே தியாகம் செய்து, மிக மிகச் சிக்கனமாக இம்மியம் விடாமல் ஆராயும் கையிடுக்கத்தின் பெருமையாகும். இங்கு இத்தியாகிகளுக்குக் கிட்டும் ஊதியம் போல் வேறு எந்தத் துறையில் ஈடுபடும் மக்களுக்கும் கிட்டுவதில்லை. விஞ்ஞான ஆராய்ச்சி இல்லையானால் இந் நாளைய உலக வாழ்க்கை எங்கே? விஞ்ஞானப் பழக்கம் இல்லாதவர் விஞ்ஞானத்தை ஓர் எரிமலை போலப் பார்க்கின்றனர். எரிமலை எரிவதனை மட்டுமே காண்கின்றனர். "அணுக் குண்டு கண்டபின் அழிவின்றி வேறு என்ன?" என்றும் பேசுகின்றனர். எதிர் கால மேன்மையைப் பேசக் காணோம். மேல் வரும் எதிர் கால ஆக்கத்தைப் பற்றிப் பேசுவது இருக்கட்டும்.

மனிதனே பெரிய விடுகதை

இன்று நாம் மின்சாரத்தின் உதவியால் விசிறி சுழற்றி, விளக்கேற்றி, அடுப்பு அமைத்து, உணவு சமைத்து, உடைகளை வெளுத்துச் சுத்தமாகவும் சுகமாகவும் வாழ்கின்றோம் என்றால் இது யார் முயற்சியால் ஆயது? ஓய்வு நேரங்களில் பாடி ஆடிகின்றோம். திரைப் படத்தினைக் கண்டு களிக்கின்றோம். வீட்டில் இருந்துகொண்டே வானொலி வழியே பேர் இசைவாணர் பாடல்களைச் சேட்டு மகிழ்கின்றோம். இது யார் முயற்சியால் ஆயது? இன்று நம் பள்ளிகளில் ஆசிரியரின்றியே பிள்ளைகள் வானொலியோடு பாடி ஆடி உடற்பயிற்சி செய்து வருகின்றார்கள். ஆகாய விமானங்கள் மூடு பனியி

டையேமுட்டி அழியாது வானெலியாக அமைந்த கலங்கரை விளக்கங்களின் (Radio beacons acting as light house) உதவியால் நிலையம் போய்ச் சேருகின்றன. இவை எல்லாம் யார் முயற்சியால் ஆயது? அறிவுத் தினவு எடுத்ததின் பயனுக மனிதன் தன்னைச் சுற்றி இருக்கும், பொருள்களின் தன்மையை அடிப்படையான அணுக்கள் வரை துருவி ஆராய்ந்தான். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்கானது என்ற கதைக்குப் பதிலாகக் குரங்கு பிடிக்கப் போய்ப் பிள்ளையார் ஆகும் கதைகளே பல. ஏதோ ஒன்றினை ஆராயப் போனுல் புதிர் கதிர் (X Ray) எதிர்ப் பட்டது. ரேடியம் தோன்றியது. செயற்கைக் கதிர் வீச்சும் பொருள்கள் எழுந்தன. என்ன பயன்? அறிவுத் தினவு அடங்கியதா? இல்லை. மேலும் அறிவுத் தினவே எடுக்கிறது. ஆனுல், கண்டவற்றின் பயனுல் மனிதனது வாழ்நாள் நோயற்ற நாட்களாக மாறின. பல பல காலம் பல பல தியாகிகள் இத் துறையில் ஈடுபட்டுப் பல பல முடிவுகள் கண்டனர். அவற்றினை நிலை நாட்ட ஆதரவு காட்ட முடியாது தேடி உழன்றனர். முடிவு என்ன? இருண்ட காட்டில் அடிக்கொரு விளக்கேற்றி வழி அமைத்தாற் போல் ஆயிற்று. விஞ்ஞானத் துறையில் மனிதனது அறிவு அகன்று பரந்து வளர்ந்தது. உலகம் முதலில் புதிராக நின்றது. அந்த விடுகதையை மனிதன் விடுவிக்கும் திறனைப் பார்த்தால் இவனுடைய அறிவே ஒரு புதிராகி உள்ளது. இது இன்று நேற்று அல்ல. என்றுந்தான்.

ஏகாந்த தரிசனம்

ஆதலின், வேதி ஆராய்ச்சி அடுப்பங்கரையில் உப்பும் புளியும் கூட்டுவதோடு முடிய வில்லை. மருந்துக் கடையில் சரக்குகளை வாங்கி வந்து கூட்டிக் கரைத்து வாலையில் ஆவி ஆக்கி வேதிப் பொருள்கள் அமைப்பதோடு முடியவில்லை. வெடிமருந்துகள் வாணவேடிக்கையாக ஒலியும் ஒளியும் புகையுமாக மறைந்து போவதோடு முடியவில்லை. அணுக் குண்டின் அழிவு விளையாட்டோடும்கூட முடியவில்லை. இயற்கை அன்னை தனது செய்காட்சி நிலையம் ஒன்று தனக்கென அமைத்து வைத்துள்ளாள். அதுதான் இந்த பிரபஞ்சம். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இயற்கை அன்னை இந்த வேதி ஆராய்ச்சியினையே தன் செய்காட்சி நிலையத்தில் புரிந்து விளையாடி மகிழ்கிருள். அதன் பயனுக உலகத்திலேயே அற்புதக் காட்சிகள்—அழகிய காட்சிகள் தோன்றுகின்றன. இவை எல்லாம் வேதிஞான விசித்திரங்களேயாம். இந்த இயற்கை அன்னை மீதுள்ள இயற்கை அன்பினுல் அவளது பலவகை வடிவங்களிலும் ஈடுபட்டு இயற்கையோடு இயற்கையாய் விஞ்ஞானப் புலவரது உள்ளம் ஒத்துத் துடித்து நிற்கும் போது பல வகையாக விளங்கும் ஒரு தனித் திருமொழியை அந்த இயற்கைத் தாய் அந்த மக்களோடு அந்தரங்கமாகப் பேசிக் குலாவுகின்ருள். அவர்கள் உணருகிருர்கள், நமக்குக் கூறுகிருர்கள்.

பொய் அழிய மெய் நிற்கும்

இத்தகைய ஆராய்ச்சிவாணர் சிலசில போது குறுக்கு வழியிற் போய் முட்டிக் கொள்வதுண்டு. அணுக் குண்டு வெடிப்பது கண்டு அலறுவதுண்டு. வாணவேடிக்கையே முடிவு எனக் கண்டு களித்து மயங்குவது உண்டு. வேதிநூலின் தந்தையரான ராபர்ட் பாயில் (Robert Boyle) என்பார்

கூறுவது இங்கு நினைவுக்கு வருகிறது. "வேதி நூற் புலவர்கள் ஆராய்கின்றார்கள். அவர்களுடைய ஆராய்ச்சி விவிலியம் கூறும் சாலமனது (Solomon) கப்பற் படை பொன்னையும் வெள்ளியையும், தந்தத்தினோடும் கொண்டு வருவதோடு, குரங்குகளையும் மயிலையும் (தமிழ் நாட்டிலிருந்து!!) கொண்டு வருவது போலப் பொன் போன்ற உண்மைகளோடு மயிற்றோகை போன்று வெளிப் பகட்டு ஆரவாரத்தையும் அங்கே கொண்டுவரக் காண்கிறோம். இந்த வேதி ஆராய்ச்சிக் கப்பல் கொண்டு வரும் கொள்கைச் சரக்குகளில் குரங்கிடத்தில்போலச் சிறிது அறிவு விளக்கம் தோன்றினாலும் ஊன்றிப் பார்த்தால் நகைப்புக்கு இடமாம் குற்றம் குறைகளும் நிறைந்து கிடக்கும்" ஆம். "தனிப்பொருள் வேறு கலவைப் பொருள் வேறு" என்ற உண்மையை நிலைநாட்டிய இவரே "சூடும் ஒரு பொருளே" என்ற அந்நாளைய ஆரவாரப் பொய்க் கொள்கைக்கு அடிமையானார் அன்றோ? என்றாலும், உண்மையே என்றும் வெற்றி பெற்று நிற்கிறது. குற்றம் குறைகள் காலப் போக்கில் மறைகின்றன. மயில் தோகை உதிர்ந்து ஒழிகிறது. பொன்னே நிலையாக நிற்கிறது. அணுக்குண்டு மறையும்; கதிர் வீச்சு மருத்துவம் என்றும் நிற்கும்.

விலை கூறவா?

அணுவின் அமைப்பினைப் பற்றிய இந்நாளைய ஆராய்ச்சியால் நேரே பணம் சம்பாதிக்கப் போகிறவர்கள் ஒருவரும் இல்லை. எனினும், அணு ஆராய்ச்சியில் விஞ்ஞானிகளுக்குத் தோன்றும் ஈடுபாடு குறைவிலா நிறைவாக விளங்குகின்றது. காசுக்காக மட்டுமா மனிதன் வாழுகின்றான்!

அணுக் கொள்கையை நமக்குத் தந்துள்ள அறிவு விளக்கத்தினை என்னை என்பது?

நம் முன்னோர் இவ்வாறு கனவிலும் கண்டிருக்க முடியுமா? அவர்கள் கிடக்கட்டும். நாம் இளையராய் விளையாடிய பொழுது பேரும் புகழும் பெற்ற விஞ்ஞானிகளேனும் இதனைக் கருதி இருக்க முடியுமா? இவர்கள் எல்லாம் கற்பனையிலும் காணாத அறிவு விளக்கம் அணு ஆராய்ச்சி வழியே வந்துள்ளது. ஆனால், இந்த அறிவோ கலகல என ஒலிக்குமாறு எவர் பையையும் நிரப்பப் போவதில்லை. காசுக் கடையில் இதனை விலை கூற முடியாது. ஆனால், இந்த அறிவு எவ்வளவோ ஊதியங்களை அப்போதைக்கப்போது விளைவிக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. உலக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத அறிவுக் கொள்கைகளாம் அருமந்த பிள்ளைகளை நிறையப் பெற்று உதவும் தனிப்பெருந் தந்தையாக அணு ஆராய்ச்சி ஓங்கி வளரும். இவ்வாறு **பால்போர்** பெருமான் (Earl of Balfour) 1926-இல் பேசியது மெய்யாகிக்கொண்டே வருகிறது.

நாகரிகக் கடைகால்

பணம் கொண்டு விஞ்ஞான ஆராய்ச்சியை அளவிட்டு விலை பேசமுடியாது. **பாரடே** (Faraday), **எடிசன்** (Edison) இவர்களை எவ்வாறு மதிப்பிடுவது? நம் செல்வம் அனைத்தும் சேர்ந்தாலும் இவர்கள் பெருமைக்கு ஈடு செய்ய முடியுமா? நம் தொழில் முறை முன்னேற்றம் நம்முடைய வாணிகம் இவை எங்கே முளைக்கின்றன? அவர்களுடைய ஆராய்ச்

சியில் அல்லவா? பாரடே இல்லை யானால் மின்சாரம் பேரளவில் விளைவது எங்கே? மின்சாரத்தின் பயனைகப் பலபல தொழில்களில் வேலை செய்யும் பலகோடி மக்களுக்குச் சோறு போட்டு வாழ வைப்பது அந்தப் பெருமகனுரது மூளையே அன்ருே? வயிருர உண்பது ஒருபுறம் இருக்கட்டும். விலங்குகளும் உண்கின்றன. அதுவா வாழ்வு? நம் அறிவு பெருகி மக்களிடம் எல்லாம் பரவுவதே பண்பாட்டின் அடிப்படையாம். விஞ்ஞான உண்மைகளைக் கையாண்டு தம் தொழில்களை வளர்த்தால் போதுமா? வாழ்க்கைக்கு வேண்டிய செலவுத் திட்டம் புதுப் பொருள்களைக் கண்டு பிடிப்பதன் வழியாகக் குறைந்து வந்தால் மட்டும் போதுமா? நோயைத்தடுத்தால் மட்டும் போதுமா? விளைவினைப் பெருக்கிஞல் மட்டும் போதுமா? நம் எதிர்கால வாழ்க்கை இவற்ருல் மட்டும் ஓ என ஓங்கி வளருமா? இல்லை இல்லை; அறிவுக் களஞ்சியத்தை நாமும் நிரப்பவேண்டும். மக்கள் அறிவு எட்டிப்பார்க்கும் ஞான எல்லையை அகலப்படுத்த வேண்டும். இந்த அறிவு கொண்டு அன்ருட வாழ்க்கைக்குப் பொன்னுன பயன் விளைய அழகிய முறையில் திருத்தி அமைக்க வேண்டும். இவ்வளவும் செய்வது அறிவுத் தினவு எடுப்பதனை ஆற்றிக்கொள்வதற்கு மட்டுமன்று; ஆன்ம சாந்திக்கும் இது வேண்டும். ஆகையால், நம்முடைய ஜடநிலை வாழ்வையும் ஆன்ம வாழ்வையும் உயர்த்த வேண்டுமானுல் இந்த அணு ஆராய்ச்சிவாணர் கொண்ட உண்மை நாட்டத்தைச் சமுதாய அமைப்பின் தொண்டாகவே செய்து வருதல் வேண்டும்.

"மக்கட் சுட்டு"

அணு ஆராய்ச்சி வரலாறு எவ்வளவோ நன்மைகளை விளக்கி வைக்கின்றது. அவற்றில் எல்லாம் தலைசிறந்த நன்மை அணுஆராய்ச்சி செய்துவரும் மனிதனது உயர்வு விளங்குவதேயாம். அவன் செய்த புரட்சி பெரிது. பாழாய், காடாய்க் கிடந்த உலகத்தினை நாடாய் நாகரிகச் சிகரமாய் மாற்றும் பெரியதொரு புரட்சியைச் செய்கின்ருன். விலங்கொடு விலங்காய் மரத்தில் தொத்தித் திரிந்தவன் அறிவுக் கண்கொண்டு அணுவின் நுட்பத்தினையும் கண்டு, அணுவையே அடிமை யாக்கியதில் திளைத்து, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுய்த் தெய்விக வாழ்வு வாழவருகின்ற புரட்சியே கனவிலும் காணுத புரட்சியாம். அணுவினை எல்லாம் ஆராய்ந்து உண்மை காணும் இந்த வரலாற்றில் அத்தகைய விஞ்ஞானிகளின் வாழ்வின் பெருமையைக் காண்கின்ருேம். அணுவின் சுவை எல்லாம் அதனை அறியும் மக்கள் அறியும் சுவையேயாம். என்றும் மாருத அணு மெல்ல மெல்லத் தன் உண்மையை வெளியிட்டு வருவது தானே அணுவின் கதை. அவன் கதையே அன்றி அதன் கதை ஏது? அதுதான் பரமாணு புராணம் எனப் பாலுஞ் சோறுமாய் இனிப்பது; இதிகாசம் என இதந்தருவது; காவியம் எனக் களிப்பூட்டிக் கடவுள்நிலை காட்டுவது. அந்தப் புராணத்தில் இனிச் செல்லுவோம்.

அடியளந்தான்

பண்டிதர்-திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு

மடியிலா மன்னவன் எய்தும்
அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு

என்னும் தெய்வப் புலவர் முப்பால் மொழியின் நடுப்பால் மொழிக்கு ஆசிரியர் பரிமேலழகர் தன் அடி அளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும் மடியிலாத அரசன் முறையான் அன்றி ஒருங்கே எய்தும்" எனப்பதவுரையும்" அடியளந்தான் என்றது வாளா பெயராய் நின்றது" எனச்சிறப்புரையும் எழுதியுள்ளார். இங்கு "இறைவன்" என்றது திருமால். எல்லா உலகையும் அளந்த என்னும் அடை மொழியால் இறைவனுகிய திருமாலுக்குத் திருவிக்கிரமன் என்பது பொருள். விக்கிரமன் என்பதும் அடியளந்தான் என்பதும் திருமாலையே குறிக்கும் என்பதை வற்புறுத்துவதற்காக "அடியளந்தான்" என்றது வாளா பெயராய் நின்றது என்றனர். இத்தகைய உரை கூறுவதற்கு "மூவுலகும் ஈரடியால் முறைதிறம்பா வகை முடியத் தாவிய சேவடி" என்னும் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையும் பிறவும் சான்றுகலாம். ஆயின் என்! அடியளந்தான் என்பது மண்ணுலக மன்னனைக் குறிக்குமா, விண்ணுலக விக்கிரமனைக் குறிக்குமா என்பதே சண்டைக்கு வேண்டுவது.

தெய்வப்புலவர் மொழிந்த "அடியளந்தான்" என்னும் சொல் பாண்டிய மன்னனைக் குறிக்கும் என்பதற்குரிய சான்றுகள் பழைய இலக்கியங்களி லிருந்து காண்போம்.

நிலந்தரு திருவின் பாண்டியன்
(பாயிரம்)

நிலந்தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன்
(மதுரைக் 60–61)

நிலந்தரு திருவின் நெடியோன் போல்
(மதுரைக் 763)

முந்நீர் விழாவின் நெடியோன்
(புறம் 9)

தாளில் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதரம் ஆகிய உம்பல் (புறம் 18)

அடியில் தன் அளவு அரசர்க்
குணர்த்தி
(சிலப். அடைக் 17)

தென்திசையாண்ட தென்னவன்
(சிலப். அடைக் 22)

நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி
கடம்பூண்டு உருட்டும் கவுரியர் (சிலப்)

நெடியோன்

இச்சொற்றொடர்களில் வரும், நிலம் நிலந்தரு, நிலந்தந்த நெடியோன், அடி, தாள் என வரும் மொழிகளை ஆழ்ந்து நோக்கல் வேண்டும். அவற்றுள் நெடியோன் என்பதின் பொருளை முதலில் நோக்குவோம்.

இதுகாறும் நெடியோன் என்பது திருமால் என்றே கல்லாரும் எண்ணினர்; கற்றாரும் எண்ணினர். உரை எழுதினர்; சொற்பொழிவு செய்தனர்;

நூல் யாத்தனர். இவர் அனைவரையும் விடுத்து நமக்குச் சான்றாகிய பத்துப் பாட்டையும் சிலப்பதிகாரத்தையும் நோக்குவோம். பத்துப்பாட்டுப் பெரும்பாணாற்றுப் படையுள் "நீல் நிற உருவின் நெடியோன்" என்பதற்கு "நீலநிறத்தை யுடைத்தாகிய வடிவினை யுடைய திருமால்" என்றும் பின்னாப் பத்துப் பாட்டு மதுரைக் காஞ்சியில் "பொலந்தார் மார்பின் நெடியோன்" என்பதற்குப் "பொன்னால் செய்த தாரையணிந்த மார்பினையும் உடைய வடிம்பலம்ப நின்ற பாண்டியன்" என்றும் உரை எழுதியுள்ளனர்.

சிலப்பதிகாரம் வேனிற் காதையில் "நெடியோன் குன்றம்" என்பதற்கு "வேங்கடமலை" என்றும் சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில் "நீலமேனி நெடியோன் கோயில்" என்பதற்கு, "நீல மணி போலும் நிறத்தையுடைய நெடியமால் கோயில்" என்றும் சிலப்பதிகாரம் அழற்படு காதையில் "உரை சால் சிறப்பின் நெடியோன்" என்பதற்கும் சிலப்பதிகாரம் நடுகற் காதையில் "நிலந்தரு திருவின் நெடியோன்" என்பதற்கும் "பாண்டியன்" என்றும் உரை எழுதியுள்ளனர்.

இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற சிறப்பான நூல்கள் மூன்றனுள் பத்துப்பாட்டிலும் சிலப்பதிகாரத்திலும் வரும் "நெடியோன்" என்னும் மொழி விண்ணுலக விக்கிரமனையும் மண்ணுலக மன்னனையும் குறிக்கின்றது. இவை பொருந்துமா?

பத்துப்பாட்டு என்பது பத்துப் பாட்டுக்கள் உள்ள ஒரு நூல். இப் பத்துப் பாட்டுக்களும் பாடியவர் வெவ்வேறு புலவர்; வெவ்வேறு காலங்களில் இருந்தவர். பெரும்பாணாற்றுப் படையைக் கடியலூர் உருத்திரங்கண்ணனர் பாடியுள்ளார். மதுரைக் காஞ்சியை மாங்குடி மருதனர் பாடியுள்ளார். இப்பாட்டுக்களைப் பாடிய ஆசிரியர் வெவ்வேறானவர் ஆயினும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஒருவரே. நெடியோன் என்பதற்கு விக்கிரமன் என்று கூறவேண்டுமென்னும் புராணக்கொள்கையில் ஊறியுள்ள ஆசிரியர் நச்சினார்க்கினியர் வேறு வழியின்றியே "பாண்டியன்" என்றும் கூறவேண்டுவதாயிற்று.

நெடியோன் வரலாறு

இந்த நெடியோன் பழந்தமிழ் நூல்களில் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும் திருவில் பாண்டியன் எனவும் திருமாறன் எனவும் முடத்திருமாறன் எனவும் வழங்கப் படுகிறான்.

1. கல்வியறிவு:— ஒல்காப் புலமைத் தொல்காப்பியனர் தாம் இயற்றிய ஐந்திறம் என்னும் அரிய இலக்கண நூலைத் திருவில் பாண்டியனுடைய அவையில் அரங்கேற்றியதாகப் பாயிரம் கூறுகின்றது. இதனால், கல்வி கேள்வி அறிவுகளில் சிறந்து, ஐந்திறம் போன்ற நூல்களை ஆராய்ந்து முடிவு கூறும் திறமையும் பெற்றிருந்தான். மேலும் செய்யுள் இயற்றும் திறமை சாலவும் பெற்றிருந்தான் என்பதை நற்றிணையுள் 'முளிகொடி வலந்த' (105) எண்ணெனப் படுமோ, (228) எனவும் வரும் செய்யுட்களே தெளிவிக்கின்றன.

2. ஆளும் திறமை:— "எண்ணுதற்கு அரிய சிறப்புக்களினால் மன்னவர்களை வென்று அவர்கள் நாடுகளைக் கைக்கொண்டு முறையாகச் செங்கோல் செலுத்தி நாட்டில் கொடுந்தொழில்களை நீக்கி மேன் மேலும் வெற்றியைக் கொண்டு நெடிய புகழை வளர்த்து நால் நிலத்தை அரசாளும் புகழ் மிகுந்த சிறப்பினை உடைய நெடியோன் என்பதனை இளங்கோ வடிகள்

எண்ணரும் சிறப்பின் மன்னரை
ஓட்டி
மண்ணகம் கொண்டு செங்கோல்
ஓச்சிக்
கொடுங் தொழில் கடிந்து கொற்றம்
கொண்டு

21712

நெடும்புகழ் வளர்த்து நானிலம்
புரக்கும்
உரைசால் சிறப்பின் நெடியோன்
அன்ன
அரச பூதம்...............(சிலப்—
அழற்படு—56-61)

என விளங்க உரைத்தனர்,

3. நாடு வளம்படுத்தினமை:— கடலால் கொள்ளப்பட்ட பழந் தமிழ்க் குமரி நாட்டில் பஃறுளி என்னும் ஒரு யாறு இருந்தது. நெடியோன் என்னும் பாண்டியன் பஃறுளி யாறு என்பதனைப் புதிதாக உண்டாக்கினன். கடலுள் மறைந்த மலைகளிலிருந்து வேறு பக்கம் போகும் ஆற்றைத் திருப்பிக் கொணர்ந்தனனே அன்றிப் பெரிய ஆற்றினின்றும் கால்வாயை வெட்டிக் கொணர்ந்தனனே என்பது தெரியக் கூடவில்லை. ஆனல் 'பஃறுளி' என்னும் பெயரைக் கொண்டு ஆராய்ந்தால் ஓர் உண்மை புலப்படுகின்றது. என்னை? தென் குமரி நாட்டு மலைகளில் சிறு சிறு யாறுகளாகவும், கால்வாய்களாகவும், பல முகங்களில் ஓடிக்கொண்டிருந்தனவற்றை ஆங்காங்கே அணைகளைக் கட்டி, மறித்து, வாய்க்கால்கள் வழியாகக் கொணர்ந்து, ஒருமுகமாக ஒரு யாறு எனும்படி ஓடச்செய்தான். "பல துளி பெரு வெள்ளம்" என்பது போலப் பலப் பல சிறு சிறு கால்களாகச் சென்ற நீர் ஓடைகளை ஒன்றாகத் திரட்டிப் பெரு வெள்ளமாகப் பெரும் யாறு ஆகச் செய்யப் பட்டதால், அவ்யாற்றிற்குப் "பஃறுளியாறு" எனப் பெயர் வைத்திருக்கலாம். சோழன் கரிகால் பெருவளத்தான் காவிரியாற்றிற்கு இரு கரையும் கோலிக் கொணர்ந்து சோழ நாட்டைப் புனல் நாடு ஆக்கினமை போல நெடியோன் தென் குமரி நாட்டை பஃறுளியாற்றைக் கொணர்ந்து வளம் படுத்தினன்.

4. போர் வன்மை:— நெடியோன் இருவகைப் போர்களிலும் வல்லவன். ஒன்று தரைப் போர். மற்றொன்று கடற் போர். i நெடியோனது தரைப் போர் வன்மையாவது:— "சேரன் சோழன் என்னும் இரு பெரு வேந்தருடன் வேளிர்களாகிய குறு நில மன்னர்களும் இளைக்கும்படி பொருது அவரைப் போரில் வென்றும் அமையாமல், உயர்ந்து விளங்குகின்ற அருவிகளையுடைய மலையில் உள்ள குறிஞ்சி நில மன்னரை எல்லாம் வென்று பகைவர் நாட்டைப் பல வழியாகப் பிளந்த உயர்ந்த சிறப்பினலே, நாட்டினுள்ள அரசர் நிலங்களை எல்லாம் கொண்ட பெரிய உதவியையும், பொன்னல் செய்த மாலையை யணிந்த மார்பையும் உடைய வடிம்பலம்ப நின்ற பாண்டியன்'' என நெடியோனது தரைப்போர் வன்மையை

இரு பெரு வேந்தரொடு வேளிர்
சாயப்
பொருது, அவரைச் செரு வென்று
இலங்கு அருவிய வரை நீந்திச்,
சுரம்போழ்ந்த இகல் ஆற்றல்
உயர்ந்து ஓங்கிய விழுச் சிறப்பின்
நிலந் தந்த பேருதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன்—
(மதுரைக் - 55-61)

எனப் பாராட்டியிருத்தல் காண்க. ii கடற் போர் வன்மையாவது:— பொலந்தார் மார்பின் நெடியோன் "மேகம் படிந்த பெரிதாகிய மூன்று நீர்மையை யுடைய அச்சம் நிலைபெற்ற கரிய கடலிடத்துக் கடிய காற்றாலே வளைகின்ற திரையைக் குறுக்கே பிளந்தோடும்படியாய் விரிக்கப்பட்டு, இனிய ஓசையையுடைய முரசம் முழங்காநிற்கப், பொன் மிகுதற்குக் காரணமாகிய சிரிய சரக்குகளை, நாட்டினுள்ளார் நுகரும்படியாகக் கரையைச் சேர வாணிகம் வாய்த்து வந்து, இழிதலைச் செய்யும், நெடிய கொடிய பாய்மரத்தின் மேலே ஆடும் இயல்பினை உடைய பெரிய மாக்கலம், கருமேகம் சூழ்ந்த

மலை போலக் கடல் சூழ்ந்த அசைகின்ற இருப்பினையும், தெளிந்த கடலாகிய ஆழத்தையும் உடைய கிடங்கினையும் உடைய தலைமையமைந்த உயர்ந்த நெல்லின் பெயரைப் பெற்ற சாலியூரைக் கொண்ட உயர்ந்த வெற்றியையுடையவனே'' என்பதை

''வான் இயைந்த இரு முந்நீர்ப்
பேஎநிலை இய இரும் பவ்வத்துக்
கொடும்புணரி விலங்கு போழக்
கடுங்காலொடு கரைசேர
நெடிங்கொடி மிசைஇதை எடுத்து
இன்னிசைய முரசு முழங்கப்
பொன்மலிந்த விழுப் பண்டம்
நாடார நன்கு இழிதரும்
ஆடியல் பெரு நாவாய்
மழைமுற்றிய மலைபுரையத்
துறை முற்றிய துளங்கு இருக்கைத்
தெண் கடல் குண்டுஅகழிச்
சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர்கொண்ட உயர்கொற்றவ!

(மதுரைக் 75-88.)

இதனால் நெடியோன் பெரும் போர்க் கப்பல்களில் கடல்கடந்து சென்று கடலால் சூழப்பெற்ற ஒரு தீவை வென்று கைப்பற்றினான் என்றும், அத் தீவில் உள்ள ஊரின் பெயர் சாலியூர் என்றும் தெரிகின்றது. நெல்லில் ஓர் வகைச் சாதிக்குச் சாலி என்று பெயர். நிலந்தரு திருவில் பாண்டியன் நெடியோனை இறையனார் களவியல் உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும், நச்சினார்க்கினியரும் ''சயமா கீர்த்தி'' என்றே கூறுவர். சயம், யவம், என்பன ஒரு பொருளன. இன்றைய ஜாவா என்பது அன்று யவம் என வழங்கிற்று. சாலியூர் என்பது சாரியூர் என்றும் அது யவத் தீவிலுள்ள மதுரை என்னும் தலைநகரத்திற்குத் தெற்கே நான்கு மைல் தூரத்திலுள்ள கடற்கரைப் பட்டினம் என்றும் கூறுவர்.

நெடியோனே அடியளந்தான்

அடியளந்தான் என்னும் நெடியோன் யவத்தீவை வென்று அத்தீவின் கடற்கரையின்கண் உள்ள ஒரு பெரும் பாறையில் தனது பாதங்களின் அடையாளங்களைச் செதுக்கி வைத்தான் என்று ஜாவாவிலுள்ள பூர்ண வர்மன் சாசனங்களில் காணப்படுகின்றது. அவற்றுள்

''விக்ராந்த ஸ்வாநிபதே ஸ்ரீமத: பூர்ண வர்மண :

தருமா நரேந்திரஸ்ய விஷ்ணோரிவ பதத்வயம்''

என்பது ஒன்றும். இதன் பொருள் ஸ்ரீமானும் பூர்ணவர்மணனும் அவனிக்குப் பதியும் அடிவைத்தவனும் ஆகிய தர்மாநகர்த் தலைவனுடைய விஷ்ணு பாதங்களை ஒத்த இரண்டு பாதங்கள் என்பது. இங்கு தருமா நகரம்எங்குள்ளது? யவத் தீவிலா? பாண்டிய நாட்டிலா? அச்சாசன சுலோகத்தில் இதைப் பற்றிய விளக்கம் இல்லை. தருமவழியில் ஆளப்படும் நகரத்தை தருமநகரம் என்றனர். அதனை அறத்தில் காக்கும் நகரம் என்னலாம். பாண்டியனால் காக்கப்படும் கொற்கை என்னும் நகரத்தை அறத்தால் காக்கப்படும் நகரம் என மதுரைக் கணக்காயனார் என்னும் பழம் புலவர்

மறப்போர்ப் பாண்டியர் அறத்திற்
காக்கும் கொற்கை (அகம்-27)

எனப் புகல்வர்.

மதுரைக் கணக்காயனார் ஆராய்ந்து சொல்லிய அறக்கொற்கை என்பதே சாசனத்தில் தருமாநகரம் எனக் குறிககப்பெற்றது. அறக்கொற்கைத் தலைவன் பாண்டியன் ஆகவே தருமாநகர்த் தலைவனும் பாண்டியன் ஆவான்.

இப்பாண்டியன் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்து முழுவதும் விளைந்துள்ள அகன்ற தீவுகளை வென்று அத்தீவு

களில் தனது வெற்றிக்கடையாளமாகத் தனது பாதங்களைப் பொறித்துத் தமது புகழை நிலைநிறுத்திய ஒப்பற்றவராகிய உரவோர் எனப் புகழப்படுவதன்றி மேலும் யவம், மலயம் முதலிய தீவுகளுக்குச் சென்று வெற்றிகொண்ட தனது மரபினோர் புகழ்களுக்கும் காரணமாவான். இதனை உட்கொண்டே இந்நெடியோன் வழித்தோன்றிய பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் என்னும் புலவர்

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளில் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்
(புறம்-18)

எனப் பாடுவராயினர். இதில் "வியன் ஞாலம் என்பதற்குப் பரந்துகிடக்கின்ற அகன்ற உலகம்" என்றும், "தாளில் தந்து" என்பதற்குத் "தமது முயற்சியால் கொண்டு" என்றும் உரையாசிரியர் உரைக்கிருக்கின்றனர். அதற்கு யானோ "வியன் ஞாலம்" என்பதற்குப் "பரந்து கிடக்கின்ற தீவுகள்" என்றும் "தாளில் தந்து" என்பதற்கு "தமது பாதங்களைப் பொறித்து" என்றும் உரை எழுதியிருக்கின்றேன். அறிஞர் ஆராய்க.

இந்நெடியோன் வென்று கொண்ட மற்றொரு தீவிற்குத் தனது மலையின் பெயராகிய மலயம் என்பதை வைத்தனன். இன்னும் அத்தீவு "மலயம்" என வழங்கப்படுதல் காண்க. மற்றும், இந்நெடியோனும் இவன் வழித்தோன்றிய பாண்டியர்களாலும் வென்று கொள்ளப்பெற்ற தீவுகளின் பெயர்கள் இன்றைக்கும் "பாண்டியன், மதியன், புகார், பாண்டிய வாசம், மலையன்கோ, கந்தளி, செம்பூட்சேய்" என வழங்குதல் காணலாம். குறிஞ்சி, செங்கரை என்பன ஆண்டுள்ள குளங்களின் பெயர்கள்...... நெடியோன் எனப்பட்ட பாண்டியன் அக்கரையில் உள்ள ஆழி தன் பாதத்தை அலம்பும்படி நின்றவன் என உணர்தலே பொருந்திய தென்க என வித்துவான்-மா. இராசமாணிக்கம் பிள்ளை புறநானூறு வரலாற்றுச் சிறப்பில் எழுதியுள்ளார்.

இதுகாலை நாம் ஆராய்ந்து எண்ணுவதையே 1500 ஆண்டுகளுக்கு முன் இளங்கோவடிகள் ஆராய்ந்தெண்ணி

அடியில் தன் அளவு அரசர்க்கு
உணர்த்தி
தென்றிசை ஆண்ட தென்னவன்

எனச் சிறப்புறக் கூறியுள்ளனர்

இதில் "அடியில் தன் அளவு அரசர்க்கு உணர்த்தி" என்பதற்கு "முன்னொரு காலத்துத் தனது பெருமையின் அளவை அரசர்க்குக் காலான் மிதித்து உணர்த்தி" என ஆசிரியர் அடியார்க்குநல்லாரும் "கடலின் அளவை அடியினாலே இன்ன அளவினது இது என்று அரசர்க்குக் காட்டி" என அரும்பத உரைகாரரும் உரைத்துள்ளனர். இவற்றில் நல்லார் உரையினும் அரும்பத உரைகாரர் உரையே தெளிவாயிருத்தல் காண்க.

வென்ற அரசர் வெல்லப்பட்ட நாட்டில் தமது உருவத்தைச் சிலையில் செதுக்கி வைத்தலும் வேறு சின்னங்களை வைத்தலும் கொடிகளை நாட்டுதலும் அன்றும் உண்டு; இன்றும் உண்டு. இவ்வாறே சேரனும் சோழனும் இமயம் வரை சென்று வென்றதற் கடையாளமாகத் தமது கொடிகளை இமயமலையில் நட்டுவந்தனர். இவ்வரலாறு

வடபுல இமயத்து வாங்குவில்
பொறித்த
எழுவுறழ் திணிதோள் இயல் தேர்க்
குட்டுவன்

என்றும் (சிறுபாணாற்றுப்படை 48-49)

பொன்னிமயக் கோட்டுப் புலி
பொறித்து மண்ணாண்டான்
மன்னன்வளவன் மதிற்புகார் வாள்
வேந்தன்

என்றும் (சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை) முறையே சொல்லி யிருத்த லைக் கொள்ளுவோர்க்கு நெடியோன் யவத்தீவின் கரையில் தனது பாதங் களைப் பொறித்திருத்தல் வெற்றியின் அறிகுறி என்பது செவ்வனே விளங் கும். இவ்விளக்கம் கொண்டு

அடியில் தன் அளவு அரசர்க்கு
உணர்த்தி,

தாளில் தந்து தம்புகழ் நிறீஇ,

அடியளந்தான் தாஅயது

என்னும் தொடர்களை ஆராய்வோமா மாயின் இத்தொடர்கள் ஒரே பொருளைக் குறித்தல் தெரியலாம்.

(i) அடியில் = தனது பாதத்தைப் பொறித்த அடையாளத்தால்,

தன் அளவு = தனது வன்மையை,

அரசர்க்கு உணர்த்தி = மற்றைய அரசர் களுக்குத் தெரிவித்து.

(ii) தாளில் = தனது பாதம் பொறித் தலில்

தந்து = வெற்றியைத் தந்து,

தமது புகழ் நிறீஇ = தம் புகழை நிலை நிறுத்தி.

(iii) அடி = பாதம் பொறித்தலினால், அளந்தான் = வன்மையைத் தெரிவித் தவனுடைய, தாஅயது = பரந்தநிலம்.

அடியில் தன் அளவு அரசர்க்குணர்த் தித் தென் திசை ஆண்ட தென்ன வனும் தாளில் தந்து தம் புகழ் நிறுவி ஒரு தாம் ஆகிய உரவோனும் அடியளந்தான் என்பது பெறப் பட்டது. இவ் அடியாளந்தானும் நெடியோனும் ஒருவன் என்பதையும் நெடியோனைப் பற்றி அரும்புலவர் கொடுத்துள்ள அடை மொழிகளால் நன்கு விளங்கும்:

நிலந்தந்த பேருதவி நெடியோன்,

நிலந்தரு திருவின் நெடியோன்

இதில் 'நிலந்தந்த,' 'நிலந்தரு' என்னும் அடைமொழிகளே நெடியோன் ஆவதற் கும் அந்நெடியோன் அடியளந்தான் எனப்பெயர் பெறுவதற்கும் காரணங் களாகும். இக்காரணங்களால் நெடி யோனும், அடியளந்தானும், பாண்டிய னும் ஒருவனே என்பதை வலியுறுத்து வதற்காக

"நிலந்தரு திருவின் பாண்டியன்"

எனச் சொல்லப் பெற்றது.

பொருளியல்—இந்தியா

"இந்தியத் தலைவர்களின் திறமையும் ராஜதந்திரமும் காரணங்களாக இன்று இந்தியா ஒரு பெரிய நாடாக உருவாகியிருக்கிறது. உள் நாட்டில் அமைதியும் வெளிநாடுகளில் மதிப்பும் இன்று இந்தியாவுக்கு உண்டு. அரசியல் துறையில் இந்தியாவினுள் நிலவும் கட்டுக்கோப்பும் வெளிநாடுகளில் அதற்குள்ள செல்வாக்கும் நீடித்திருக்க வேண்டுமானால், பொருளாதாரத் துறையில் இந்தியாவானது உறுதியும் செல்வாக்கும் பெறுதல் வேண்டும். இந்தக் குறிக்கோளில் வெற்றி கிட்டுமா என்பது நம் நடவடிக்கைகளைப் பொறுத்ததே யாகும். அரசியல் துறையிலே நம் தலைவர்கள் மேற் கொண்ட உறுதியையும் துணிந்துணரும் நோக்கத்தையும் பொருளியல் துறையிலும் மேற்கொள்வார்களாயின் நம் நாட்டின் நல்வாழ்வைப் பற்றி யாருக்குமே ஐயம் இருக்கமுடியாது."

— ஆர். கே. சண்முகம் செட்டியார்

மாடுமனை போனாலென்ன
மக்கள் சுற்றம் போனாலென்ன
கோடி செம்பொன் போனாலென்ன—கிளியே
குறுநகை போதுமடி

என்ற கண்ணி இசை வடிவாய்க் காற்றில் மிதந்துவந்து அந்தப் பெரிய மாளிகையின் தோட்டத்தையே வேதி வித்தையால் சொர்க்கமாக்கிக்கொண்டிருந்தது. அந்த நகரின் செல்வர்களெல்லாம் வாழுகிற ஒரு பகுதியில் அமைந்திருந்த அந்தப் பெரிய மாளிகை—அரங்க விலாஸ்—ஒரு மூன்றடுக்கு மாடி வீடு. மாலை நேரத்தில் வீட்டு முதலாளி, சுந்தரசாமி நாயுடு தோட்டத்தில் ஒரு பக்கமாக அமைந்துள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்தார். எங்கேயோ தம் சிந்தையைச் செலுத்தி ஆழ நினைந்து தோய்ந்திருந்தவரை இந்த அருமையான இசைப்பாடல் எழுந்திருக்கச் செய்துவிட்டது. விருவிரென்று மாளிகைக்குள் வந்தார். வந்தவுடன், "ஏ, சரோ! இங்கே வா. உன் பாட்டும் நீயும்........." என்று இரைந்தார். இந்த முழக்கத்தின் உச்ச ஸ்தாயியைக் கேட்டவுடன் பாட்டு தானாகவே நின்றுவிட்டது. அப்பாவின் குரலையும் அந்தக் குரலில் இருந்த கோபக் கொதிப்பையும் உணர்ந்த சரோஜனி மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

அவள் வந்தபோது சுந்தரசாமி நாயுடு சோபாவில் சாய்ந்தவண்ணம் தலையைக் கைக்குச் சுமையாக ஏற்று, எடை போட்டுக்கொண்டிருந்தார். சிந்தனையின் பாரத்தைத் தலையின் எடையால் மதிப்பிட்டு அறிந்தா சமாளிக்க முடியும்! முடியாதுதான். இருந்தாலும் மனிதன் எப்போதுமே அப்படித்தானே செய்கிறான்! மூளையில் கிடந்து அலமரும் எண்ணச் சுமையைத் தாங்க முடியாதபோது

வெறும் தலையைப் போட்டு உலுக்கிக்கொள்வதுதானே அவன் வழக்கம்! சுந்தரசாமி நாயுடு அந்த வகையைச் சேர்ந்தவர்தான்.

அப்பாவின் குரல் கேட்டே நடுங்கிப் போன சரோஜனி, அவருடைய நிலையைப் பார்த்ததும் பேசக்கூட முடியாமல் ஒரு ஓரமாக ஒடுங்கி நின்றாள்.

பாட்டை நிறுத்தியதோடு அவருடைய சிந்தனை வேறு வேலை செய்யத் தொடங்கி விட்டது. என்றோ, எப்பொழுதோ நடந்த நிகழ்ச்சிகளின் விவரங்களை யெல்லாம் எடுத்தெடுத்து அவர் மனத் திரையில் வீசி எறிந்து விளையாடிக் கொண்டிருந்தது, அவருடைய சிந்தனை. மாரியம்மைக்கு விளையாட்டு; நமக்குப் புண்ணும் பொடியுமாக அல்லவா இருக்கிறது! அப்படித் தான் சிந்தனையின் எக்காளம் நாயுடுவைத் தொளைபோட்டுப் பதம் பார்த்தது.

கொஞ்ச நேரம் நின்று பார்த்த சரோஜனி, "அப்பா! என்னைக் கூப்பிட்டீர்களே, ஏன்?" என்று கேட்டாள். அணுக் குண்டை எடுத்துத் தன் தலைமேலே போடப் போகிறார் என்று எதிர்பார்த்துப் பேசுவதைப் போல் இருந்தது அவள் பேச்சு. சரோஜனியின் கேள்விதான் எந்த உலகத்திலேயோ இருந்த நாயுடுவை அரங்க விலாஸ் மாளிகைக்குக் கொண்டு வந்தது. தலைநிமிர்ந்து தம் மகளைப் பார்த்தார்.........."

"அ... என்ன சரோ!?......ஓகோ, சரிதான்...... ஒன்றுமில்லை. நீ போ'ம்மா" என்று அமைதியாகப் பேசினார்.

பழைய இடிக் குரலுக்கும் இந்தச் சாதுப் பேச்சுக்கும் ஒரு வகையான பிணைப்பையும் காணமுடியாமல் சரோஜனியின் இளம் உள்ளம் 'விழித்தது'. 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று சொல்வதுபோல இருந்தது அவள் மெல்லெனப் பூனையாய் அங்கிருந்து தன் அறையை நோக்கிப் போன போக்கு. அப்பாவுக்கு முதலில் வந்த கோபத்துக்கும் பின்னால் வந்த திடீர் அமைதிக்கும் தொடர்பு தெரியவில்லை. ஆனால், அவர் முகத்தைக் கண்டு நாயுடுவின் சிந்தனைக் 'குழம்பு' கொதித்துக் குதி கொம்மாளம் போடுகிறது என்பதைத் தெரிந்து கொண்டது அவளுடைய பெண் மனம்.

கோயிலுக்குப் போயிருந்த தன் அம்மா - அரங்க நாயகியம்மாளை எதிர்பார்த்தாள், இந்தச் சேதியைச் சொல்வதற்கு. "அப்பா என் இப்படி ஆய்விட்டார்! அண்ணன் போக்கு இவருக்குப் பிடிக்கவில்லையென்றால், 'கிடக்கிறது கழுதை' என்று ஒரு முழுக்குப் போடுவதை விட்டு இந்தப் பாடு இவருக்கு எதற்கு? இதற்காக மூளையையா குழப்பிக் கொள்வார்கள்!" என்றெல்லாம் தன் அன்னைக்குச் சொல்ல வேண்டியன என்னென்ன என்று திட்டமிடத் தொடங்கினாள். பாட்டுத்தான் பாடமுடியவில்லை. சத்தமில்லாமல் இருக்க வேண்டுமென்றால் மனம் சும்மா இருக்குமா? அது திட்டமிடு படலம் படித்தது.

2

'அரங்க விலாஸ்' மாளிகையின் பெயரைத் திடீரென்று மாற்றி விட்டார் சுந்தரசாமி நாயுடுகாரு. இப்போது அந்த மாளிகையின் பெயர் 'சீதா விலாஸ்'. இந்தப் பெயர் மாற்றம் பற்றி அவரிடம் யாரும் பேசவில்லை. நினைத்தார்; மாற்றிவிட்டார். ஏன் மாற்ற நினைத்தார்—அதுதான் தெரியாது. அரங்க நாயகி என்பது மனைவியின்

பெயர். சீதையம்மாள் என்பது அவருடைய அன்னையாரின் பெயர். மாளிகை கட்டி இப்போது பதினைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. கட்டிய காலத்திலிருந்து வழங்கிய பெயரைத் திடீரென்று இப்போது ஏன் மாற்ற வேண்டும்! அரங்கி நாயகி மட்டும் கடைசியில் துணிந்து கேட்டுவிட்டாள். "அந்தக் காலத்திலே என் பெயரை வையுங்கள் என்று ஏதாவது நான் சொன்னேனு! நீங்களாக வைத்தீர்கள். இத்தனை வருஷம் கழித்துப் பெயரை ஏன் மாற்றவேண்டும்! உங்கள் அம்மா இருந்து பார்த்தால் நன்ருகத்தான் இருக்கும். அதற்கும் வழி யில்லை. அந்தப் புண்ணியவதி போய்ச் சேர்ந்து, போன இடமும் புல் முளைச்சுப் போச்சே! ......அதென்னமோ உங்கள் போக்கு எங்களுக்கு ஒன்றுமே புரிய வில்லை! ஒவ்வொரு காரியமும் இப்படித் தான் இருக்கிறது! அன்றைக்கு நம்ம சரோ பாடின பாட்டைக் கேட்டு எரிந்து விழுந்தீர்களாம்.."

அரங்கிநாயகி யம்மாளுக்குச் சுருக்கமாய்ப் பேசுவதென்ருல் என்னவென்று தெரியாது. அந்த அம்மாவின் பரம்பரையிலே அத்தி பூத்த மாதிரியாகப் பத்தாவது வரை 'இங்கிலீஸ்' பள்ளிக் கூடத்திலே படித்தவள். 'பாப்பாரப் பொண்ணு மாதிரிப் பாட்டு வேறே தெரியும்' என்று அவளைப் பற்றிப் பெருமைப்பட்ட பாட்டிமாரும் உண்டு......... இத்தியாதி பெருமைகளோடுகூட நாயுடுகாரு வலிய வந்து சிக்கியவர். என்ருல், சுருக்கமாக எப்படிப் பேசுவாள்!

நாயுடுவுக்குப் பொறுமை இல்லை. உட்கார்ந்திருந்தவர் எழுந்து, கைகளைப் பின்னுல் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். கண் தரையை அளவிட்டுக் கொண்டிருந்தது. மனைவிக்குப் பதில் சொல்லுகிற அளவுக்கு அவருடைய செவிப் புலன் வேலை செய்யவில்லை. என்னவோ சத்தம் காதிலே விழுந்தது. அந்தச் சத்தங்களைப் பொருளுள்ள சொற்களாக 'மொழி பெயர்க்க' அவர் சிந்தை அவரை விடவில்லை. சரோஜனி..... பாட்டு...... என்று ஏதோ இரண்டு சொற்களைமட்டும் எப்படியோ அவர் மனம் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டது. இந்தச் சொற்கள் சிந்தனைக்கு அகப்பட்டவுடன், நாயுடுவை வேறு ஒரு இடத்துக்குத் திருப்பி விட்டது..... எல்லாம் மனத்துக்குள் நடக்கிற அமர்க்களம்தான். நாயுடுவின் உடல் சீதா விலாஸ் என்ற அரங்க விலாசத்திலே இருந்தது. உள்ளம் உயிரோடு கைகோத்து வேறு எங்கோ........... எந்தக் காலத்திலேயோ திரிந்தது...........

ஒரு காலத்திலே நாயுடுகாருவுக்கு 'மாடு மனை போனு லென்ன........' என்ற பாட்டைக் கேட்டால் போதும், ஒரே தலைக்கிறக்கம்தான். குளிப்பறைக்குள் நுழைந்ததிலிருந்து எண்ணெய் தடவித் தலை சீவி, சைக்கிளை எடுத்து அதன்மீது அமர்வதற்காக வலக் காலை எடுத்து அணுயாசமாக வீசுகிற வரையிலும் அந்த ஒரு கண்ணியையே அவருடைய வாய் பாடிக்கொண்டேயிருக்கும். மற்றவர்களின் உள்ளங்களுக்கு அவர் வாய்ப் பாட்டு எப்படி இருந்திருக்குமோ, தெரியாது. ஆனுல், அவருடைய உள்ளம் அப்படியே சொக்கிப் போகும் அவர் பாடுகிற அந்த வாய்ப் பாட்டின் இசையிலே.

3

அப்போது......சிந்தனை காலச் சுடுகாடுகளைக் கடந்து நாயுடுவை நிறுத்தி வைத்திருக்கிற ஒரு

பழைய காலத்து நினைவு மேடையிலே — நடக்கிறது ஒரு நாடகம்.

என்றோ நடந்த ஒரு நிகழ்ச்சியைக் காலதேவன் புதைத்து வைத்திருக்கிறான். நிகழ்ச்சியின் சட்டகம்தான் புதைக்கப்பட்டது. அந்தச் சடலத்தின் உயிர், நிகழ்ச்சித் தொடரால் காலதேவனை ஏமாற்றி இன்னும் சுந்தரசாமியின் வாழ்க்கையிலே பல நிகழ்ச்சிச் சடலங்களைப் பதம் பார்த்து வருகிறது. அந்த உயிரைத் தேடிப் பிடிக்கக் காலதேவன் முயலும்போதெல்லாம் கூடு விட்டுக் கூடு பாய்கிறது அந்த உயிர். கால அகட்டினுள் சிக்குவது வெறும் உடல்தான். இது ஒரு பக்கத்தே நிகழ்ந்துகொண்டிருக்கும் நிரந்தர நாடகம்.

உயிருக்கு ஒரு துணை உண்டு. சிந்தனையைத் தன் துணையாக வைத்து நடக்கிறது உயிர். சிந்தனை ஒரு விளையாட்டுப் பிள்ளை. காலதேவன் புதைத்து வைத்துள்ள சடலங்களை அகழ்ந்தெடுத்து உயிருக்குக் காட்டி நையாண்டி செய்வது அதனுடைய வழக்கம். உயிரைப்பிடிக்க முடியாமல் ஏமாறும் காலத்தை நையாண்டி செய்வதோடு நில்லாமல் சடலங்களின் ஏறுமாறான தன்மைகளைச் சுட்டிக்காட்டி, எடுத்து அலசி உயிரையும் ஆட்டிப் படைப்பதுதான் பாழாய்போன சிந்தனையின் வேலை. நல்ல துணை! உயிரைப் பார்த்து இரக்கப்பட வேண்டியதுதானே!

சிந்தனையின் சிக்கலிலே அகப்பட்டுக்கொண்ட நாயுடுகாருவின் உயிர் ஒரு புதைகுழியின் பக்கத்திலே நிற்கிறது. புதைகுழி மீது ஒரு பழைய நாடகம் உருவெளி காட்டுகிறது.

சீதையம்மாள் கண்ணீர் வடித்துப் பேசுகிறாள். வாலிபத்துடிப்பையெல்லாம் தசைநார்களிலே நிறுத்திவைத்துக் கல்லென நிற்கிறான் இளைஞன் சுந்தரசாமி. புழுப்போலத் துடிக்கும் விரல்கள்— பொருந்தி நிற்க முடியாமல் பிரிந்து அரற்றும் உதடுகள்—பரிதாபகரமான சொற்கள்........... இவை சீதையம்மாளின் உருவெளி; ஒலியலைகள்.

காலங்கடந்த அந்த நிகழ்ச்சியை நடந்ததைப்போலவே சித்தரிக்கப் பார்க்கிறது முதுமைப் பருவத்தை எட்டி பிடிக்கப்போகும் நாயுடுகாருவின் உயிர். உள்ளமும் துணைசெய்கிறது. ஆனால், பயனில்லை. சில சொற்களே உருவம் பெற்று வருகின்றன! "அடே, பெற்ற கும்பி கொதிக்குதடா! நான் பெற்ற மகனடா! ஆசைக்கொரு பிள்ளை நீதானப்பா! இப்பவோ, இன்னும் சிறிது கழித்தோ என்று இருக்கிற என்னை ஏனடா வதைக்கிறாய்! நான் செத்துச் சுண்ணாம்பாய்ப் போன பிறகு என்ன வேணுமானாலும் செய்து கொள்ளடா.............."

இன்னொரு புதைகுழி:

"உங்கள் அப்பாவைக் குழியிலே வைத்த குலத்திலே நுழைய உனக்கு எப்படி'டா மனம் வந்தது?............"

மற்றுமொரு உருவெளி:

சீதையம்மாள் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். கையில் ஒரே ஒரு துணிப் பை. இளம்பிள்ளை சுந்தரசாமி கதறுகிறான். பயன் இல்லை. அம்மா போய்விட்டாள்.

நாயுடுகாருவின் உயிருக்கு இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டு பொறுக்கமுடியவில்லை. போதாக்குறைக்கு அவர் சிந்தனை குரல் காட்டி நையாண்டி செய்கிறது: "அன்றைக்கு 'அவள்'

இருந்தால் போதுமென்று 'மாடு மனை பாடினையே, அப்பனே! இப்போது ஏன் அழுகிறாய்?''— பழைய நினைவுகளை எழுப்பிவிட்டது மல்லாமல் இப்படி இடித்துக் காட்டவும் செய்தால் யாருக்குத்தான் கோபம் வராது! நாயுடு காருவின் உயிர் தன் நண்பன் சிந்தனையை விட்டது ஒரு அறை! அதிர்ச்சி!

நினைவு தப்பி—மூச்சற்றுக் கீழே விழுந்துவிட்டார் நாயுடுகாரு.

4

சுந்தரசாமி நாயுடு எல்லா வளமும் நிறையப் பெற்றவர். சுந்தர் மில்ஸ் அவருக்குச் சொந்தம். கொள்ளை கொள்ளையாகப் பணம் திரண்டது. ஒரே பையன்—வேணு கோபாலசாமி – சீமையில் படிக்கிறான். ஒரே பெண் சரோஜனி; பி. ஏ. படிக்கிறாள்.

சில மாதங்களாக நாயுடுகாருவின் மனம் என்று மில்லாதபடி குழம்பத் தொடங்கிவிட்டது. அவருடைய ஓயாத உழைப்புக்கு முன் வந்து நிற்கமுடியாமல் புதைந்து கிடந்த பழைய நினைவுகளெல்லாம் தலைவிரித்துப் பேய்க் கூத்து ஆடத் தொடங்கிவிட்டன. வேணுகோபாலசாமிக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதியும் ஒரு பயனுமில்லாமல் போயிற்று. கடைசியிலே, ''வெள்ளைக்காரி என்றால் உங்களுக்கு ஆகாமல் இருக்கலாம். எனக்கு அவள்தான் வேண்டும். எத்தனை முறை நான் சொல்லியும் நீங்கள் கேட்கத் தயாராக இல்லை. இனிமேல் நான் சொல்லக் கூடியது இவ்வளவுதான் : உங்கள் பிச்சைக் காசு எனக்குத் தேவையில்லை. இவள் இச்சையே எனக்குப் பெரிது. நாங்கள் காதலர்கள் ....'' என்று இந்த வகையாக ஒரு கடிதத்தை எழுதி விட்டான்.

சுந்தரசாமி நாயுடுவுக்குத் தம் பையனிடத்திலே அளவுகடந்த பற்றுதல் உண்டு. அளவிறந்த விருப்பம் இருப்பதே எப்போதும் ஆபத்துத்தான் என்ற மனவியல் உண்மை அவருக்குத் தெரியாது. வேணுகோபாலிடம் தாம் கொண்டிருந்த எல்லையில்லாத பற்றுதல் காரணமாக அவனுடைய வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் அவரே திட்டமிட்டு வைத்திருந்தார். வாலிப மிடுக்கிலே இருந்த அந்தப் பையன் – சீமைச் சூழ்நிலையும் தக்க தூண்டுகோலாக அமைந்திருந்தபடியால்—தகப்பனார் மனக் கோட்டைகளை யெல்லாம் ஒரே எற்றாக எற்றித் தவிடுபொடியாக்கிவிட்டான்.

ஆசைக் கோட்டை தகர்ந்த பிறகு நாயுடுகாருவுக்கு ஊக்கம் குறைந்துவிட்டது. 'ஆலைக்குப் போவதும் வருவதுமாக இடைவிடாமல் உழைத்து என்ன பயன்' என்று சலிப்புத் தட்டிவிட்டது. வீட்டைவிட்டு வெளியேறுவதே கிடையாது. இரும்பு சும்மா கிடந்தால் துருப் பிடிக்காமலா இருக்கும்! வேலை யில்லாத மனத் திரையிலே சிந்தனை தன் திருவிளையாடல்களைப் பயங்கரமான படங்களாகத் தீட்டித் தீட்டி நாயுடுவை நையாண்டி செய்தது.

தம்முடைய வாலிபப் பருவத்திலே சீதையம்மாளின் பேச்சைத் தட்டிவிட்டு ஒருத்தியின் மையலிலே சிக்கியதை நினைவுக்குக் கொண்டுவந்தது அவர் சிந்தனை. அதோடு நிற்காமல், ''உன்னுடைய மறுபதிப்புத்தான் உன் மகனும்'' என்று அந்தப் பழைய படத்துக்கு உரைவிளக்கமும் கொடுத்தது அவர் அறிவு.

அந்த 'அவள்' முகத்தையே நினைவுத் திரையிலே எழுதிக் கற்

பனி உலகிலே உலாவி வந்த அந்தப் பழைய நாட்கள் மனத்திரையிலே அலை பாய்ச்சி அவரை அலைக் கழித்தன.

5

நாயுடுகாருவுக்குத் தூங்கமுடியவில்லை. கருங்கும்மென்ற காரிருள் உலகத்தையே விழுங்கிப் பாரித்து நிற்கிறது. இருட்டின் அகட்டினுள்ளே விழித்துக் கிடக்கிறார் நாயுடுகாரு. எங்கேயோ இருந்து ஒரு ஆந்தை அலறுகிறது. "ஐயோ, ஒற்றை ஆந்தை குரல் கொடுக்கிறதே!" என்று துணுக்கமுறுகிறது அவருடைய வைதீக மனம். குழம்பிய பல நிகழ்ச்சிச் சாயைகள் இருட்டிலேயே கோடு கிழித்ததுபோல அவர் விழி முன்னே உலவி உலவி அலைக்கழிக்கின்றன............

என்றோ வந்த ஒரு தந்தி நினைவில் எழுகிறது. இராமேஸ்வரம் ஆஸ்பத்திரியிலிருந்து அது வந்தது. "தாயார் மரணப் படுக்கையில் இருக்கிறார். பார்க்க விரும்புகிறார்" என்பது அதன் வாசகம்.

தந்தி வந்தபோது அவர் ஊரில் இல்லை. இரண்டு மூன்று நாள் கழித்துத்தான் போனார். அம்மாவைப் பார்க்கமுடியவில்லை. சீதையம்மாள் விட்டுப்போன ஒரு தகரப் போணியும், கந்தலான ஒரு அழுக்குப் பையுந்தான் அவரிடம் ஆஸ்பத்திரிக்காரர்கள் கொடுத்தார்கள். பைக்குள்ளே ஒரு சிறுவனின் புகைப்படம் இருந்தது. அவருடைய படந்தான் அது. சாகுந் தறுவாயில்தான் சுந்தரசாமியின் விலாசத்தைக் கொடுத்தாளாம் சீதையம்மாள். அந்தத் தாய் உள்ளத்தின் கடைசி ஆசையைக்கூட நிறைவேற்ற முடியாத பாதகத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு நாயுடுகாரு திரும்பி வந்தார். வந்து பழையபடி ஆலைக் கதிர்களின் சுழற்சியிலேயே தம்முடைய உள்ளத்தையும் உழைப்பையும் செலுத்தி, இயந்திரத்தோடு இயந்திரமாக மாறி விட்டார் நாயுடுகாரு.

இப்போதுதான் இயந்திரத்தின் வன்பிடி அவரை விட்டுவிட்டதே! மனித உறவுகளையும் உள்ளத்து உணர்ச்சிகளையும் ஒடுங்கச் செய்து விடும் இயந்திர வாழ்க்கையை விட்டு, மனிதம் என்ற பெருஞ் சாலையில் நுழைந்தவுடன் உணர்ச்சிப் புயலைச் சமாளிக்க முடியாமல் திணறினார் சுந்தரசாமி நாயுடுகாரு.

இந்தத் திணறலுக்குப் பலர் பல பல பெயர்களைக் கொடுத்தார்கள். பெயர் சூட்டு விழாவில் முடிவுரை கூறும் 'டாக்டர்'கள் "இது இரத்த அழுத்தம்" என்று தீர்ப்புச் சொன்னார்கள். "அடிக்கடி மயக்கம் வரும். மனக் கவலையைக் குறைப்பதுதான் இதற்கு ஒரே மருந்து" என்று தங்கள் கையையும் கழுவிக் கொண்டார்கள். இப்படி மற்றவர்களெல்லாம் கைவிட்ட பிறகு சிந்தனையின் கொம்மாளத்தைக் கேட்கவா வேண்டும்!

மாளிகையின் பெயரை மாற்றினார். சீதையம்மாளின் படம் பெரிதாக்கப்பட்டது. அவள் பெயரால் அறநிலையம் ஏற்படுத்தினார்......... என்ன செய்தாலும் அந்தப் பழைய நினைவுகள்............உருவெளிகள்................சிந்தனையின் சதிச் செயல்கள்..............இவையெல்லாம் அவர் மனத்தைக் கவலைக் கடலிலே மேலும் மேலும் ஆழ அமிழ்த்தி வேடிக்கை பார்த்தன......................கீழ் வானம் வெளுத்துவிட்டது.

6

வானம் வெளுத்துவிட்டது. யாரோ ஒரு பிச்சைக்காரி உள்ளே நுழைந்து வருகிருள். கையில் ஒரு தகரப் போணி. அவள் பின்னுல் ஒரு சிறு குழந்தை வருகிறது. தூக்கம் பிடிக்காமல் நாயுடுகாரு வெளி வராந்தாவிலே வந்து உட்கார்ந்திருக்கிருர். அவருடைய வெறித்த பார்வையும் பரட்டைத் தலையும் பார்த்த அந்தப் பிச்சைக்காரியின் குழந்தை என்ன எண்ணிற்ருே, தெரியவில்லை. "அம்மா!" என்று அலறிக்கொண்டு போய்த் தன் அன்னையைச் சேர்ந்து கட்டிக்கொண்டது.

நாயுடுகாரு நாற்காலியிலிருந்து மயங்கி விழுந்துவிட்டார். அதைப் பார்த்த தோட்டக்காரன் அலறிக்கொண்டு ஓடி வந்தான்.

சிந்தனையின் கண்ணிலே மண்ணை வாரிப் போட்டுவிட்டு, உயிர் காலதேவனை நண்பனுக ஏற்றுக்கொண்டுவிட்டது. இனி, சிந்தனையின் தொல்லை நாயுடுவுக்குக் கிடையாது. காலதேவன் வெற்றி பெற்றுவிட்டான்.

ஏமாந்த சிந்தனை சீமைக்குப் பறந்தது—வேணுகோபாலசாமி தன் காதலிக்கு 'மாடுமனை போனுலென்ன' என்ற பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லிக்கொண்டிருந்தான்—தந்தி வந்தது.

புட்டிப் பாலின் விளைவு

நாகரிகத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் புட்டிப் பால் கொடுப்பது எல்லோருக்கும் தெரியும். இதன் விளைவாக அந்தக் குழந்தைகளின் பிற்கால வாழ்வு அடையும் நிலை என்ன என்பது பற்றி மனித இன வரலாற்றுத் துறையினர் (Anthropologists) ஆராய்ச்சி செய்கின்றனர்.

குறிப்பிட்ட ஒரு குழந்தை, ஆண் குழந்தை என்று வைத்துக்கொள்வோம். தாய்ப் பால் ஊட்ட விரும்பாத அன்னை, அவனுக்குப் புட்டிப் பால் கொடுக்கிருள். பையன் வளருகிருன். அவனுடைய அடி மனத்திலே 'தாய் என்ருல் புட்டி, ரப்பர், கரண்டி, பால் முதலியவை கொண்டு உணவு தருகிறவள்' என்ற கருத்து உருவாகிறது. தாய்மை என்று எண்ணும்போது ஏற்படுகிற மனித உறவு—அன்பியல் நெருக்கம்—இந்த வகையால் பாதிக்கப்படுகிறது. உள்ளத்தோடு பொருந்திய நெருக்கம் புட்டிப் பால், கரண்டி முதலியவற்ருல் சீர்கேடு அடைகிறது.

இந்த நிலையில் வளர்ந்த பையன் குமரன் ஆகிருன். திருமணமும் நடக்கிறது. கணவனுகி விட்ட அந்தப் பையன் மனத்திலே மனைவி என்ற உணர்ச்சி பால் வகையிலே (Sex) அவ்வளவு நெருக்கமுடையதாக இருப்பதில்லை. உறவால் நெருக்கம் குறைகிறது. மோட்டார் கார், அழகிய துணி மணிகள் போன்ற செத்த பொருள்களை வைத்தே ஆண்—பெண் உறவினை அவன் எண்ணிப் பார்க்கிருன்.

புட்டிப் பாலினுல் ஏற்படக்கூடிய இந்த விரும்பத் தகாத விளைவை டாக்டர் மார்கரட் மீட் (Dr. Margaret Mead) என்ற ஆராய்ச்சியாளர் ஆணும் பெண்ணும் என்ற நூலில் கூறுகிருர்.

உணவினைப் பெருக்கிப் பயன்தரத்தக்க வசந்த முறை ஆராய்ச்சியைப் பற்றி மிகத் தெளிவாக விளக்குகிறர் இக்கட்டுரை ஆசிரியர்

பொங்கலும் பஞ்சமும்

திரு. நா. கி. நாகராசன், M. A.

இவ்விதழ் வாசகர்களின் கைக்கு வரும்போது அவர்களது பொங்கல் விழாக் கொண்டாட்டம் முடிந்திருக்கும்.

ஆனால், தற்போது நாடு உள்ள நிலைமையில் அறுவடை நோன்பான பொங்கலன்றுகூட நமது உணவுப் பஞ்சத்தைப் பற்றி மறக்க முடிந்திராது. உணவு உற்பத்தி பெருகினாலன்றி நம் நாட்டுக்கு உய்வில்லை என்ற அடிப்படையான உண்மையை அறிந்த நம் தலைவர்கள் இதற்கான பல வழிகளையும் ஆராய்ந்து வருகின்றனர். இவற்றுள் ஒன்று விவசாயம் என்ற விஞ்ஞானத் துறையில் புது வழிகளில் ஆராய்ச்சி தொடங்கி, 'ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரு கதிர்களை விளையச் செய்ய' வழி தேடல்.

விவசாய ஆராய்ச்சிகளில் இன்று ரஷ்யா முன்னணியில் நிற்கிறது. பல புதுவகைப் பயிரினங்களையும், சிறந்த பண்புகள் கொண்ட திருந்திய பழைய பயிர்வகைகளையும் ரஷ்ய விவசாய அறிஞர் கண்டுபிடித்து நாட்டின் உணவுப் பெருக்கத்துக்கு உதவியுள்ளனர். இவர்களுடைய ஆராய்ச்சி முறைகளில் மிக முக்கியமானது 'வசந்த முறை' (Vernalization) என்பது. இதன் உதவியால் பருவம் மாறி விளையும் பயிர்வகைகளையும், கடுங்குளிரையும் நீண்ட வறட்சியையும் தாங்கும் பயிர்களையும் கண்டுபிடிக்க முடிந்துள்ளது.

இம்முறை யாது என்பதை அறியுமுன் இதற்கு அடிப்படையானதும் ரஷ்யாவைத் தவிர மற்ற நாட்டு அறிஞரும் ஏற்பனவுமான சில உண்மைகளை அறிதல் அவசியம். மண்ணில் விதைத்த விதையொன்று சிறிது காலத்திற்குள் முளைக்கத் தொடங்குகிறது. இலைகளையும் வேரையும் விட்டு அது பல மாறுதல்களை அடைகிறது. சிறிது காலத்திற்குப்பின் அது பூத்துக் காய்த்து, விதைகளைத் தந்து தன் வாழ்க்கையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்கிறது. இம்மாற்றங்கள் அனைத்தும் செடியின் அபிவிருத்தி என்ற சொல்லில் அடங்கும். அச் செடி முளைக்கத் தொடங்கியபின் இலைகள் பெருகி, அதன் தண்டும் மற்ற உறுப்புக்களும் பெரிதாகின்றன. இம் மாற்றங்கள் செடியின் வளர்ச்சி எனப்படும். ஆகையால் தாவரத்தின் இனப் பெருக்கத்திற்கான முன்னேற்றம் 'அபிவிருத்தி' எனவும், அதன் அளவுப் பெருக்கமும், அதிலுள்ள பொருளின் பெருக்கமும் 'வளர்ச்சி' எனவும் கூறப்படும்.

வசந்த முறை பற்றிய ரஷ்ய ஆராய்ச்சிகளுக்குத் தந்தையாக விளங்குபவர் லைஸங்கோ (Lysenko) என்ற அறிஞர் ஆவார். உயிரியல் நூலில் தற்காலத்தில் மிகப் பெரிய விவாதத்திற்கும் இவர் முதற் காரணராக விளங்குகிறார். இவரது கொள்கைகளிற் பலவற்றை வெளி யுலகம் ஏற்க மறுக்கிறது எனக் குறிப்பிட்டாகவேண்டும். இவரது கருத்துப்படி அபிவிருத்தியும், வளர்ச்சியும் வெவ்வேறான விளைவுகள். தாவரத்தின் அபிவிருத்தி படிப்படி

யாகப் பல கட்டங்களில் நடைபெறு கிறது. இக் கட்டங்கள் எப்போதும் மாருத கிரமத்தில் தொடர்ந்து நிகழ் கின்றன. ஒவ்வொரு கட்டத்திற்கும் சிறப்பானதொரு சூழ்நிலை யுண்டு. அது ஏற்றவாறு இருந்தால்தான் அக் கட்டம் சரிவர நிகழும்.

இக் கருத்துக்களில் மிக முக்கிய மானது முதலாவதுதான். அதுவே வசந்த முறைக்கு அடிப்படையாக அமைகிறது. அபிவிருத்தியும், வளர்ச் சியும் வெவ்வேருனவை என்ருனபின் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி இவ்விரண் டும் வெவ்வேருன வேகங்களில் நிகழு மாறு செய்யலா மல்லவா? ஆகையால் இத்தகைய கட்டுப்பாட்டால் அபிவிருத் தியை ஏதோ ஒரு கட்டத்தில் நிறுத்தி, வளர்ச்சிமட்டும் நிகழுமாறு செய்ய லாம். அல்லது வளர்ச்சியை ஏதோ ஒரு குறிப்பிட்ட நிலையில் தடுத்து நிறுத்திக்கொண்டு அபிவிருத் தியை மட்டும் நிகழ்த்தலாம். இதனுல் தாவரத்தின் வாழ்க்கைப் போக்கையே மாற்றிவிட இயலும். இதைச் செய் யவே வசந்த முறையில் முயற்சி செய் யப்படுகிறது.

சூழ்நிலையின் தன்மை தாவரத்தின் அபிவிருத்தியையும், வளர்ச்சியையும் பெரிதும் பாதிக்கிறது என்றேன். சூழ் நிலையில் மிக முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவை தாவரத்தின் வெப்ப நிலையும், ஒளியுமாகும். ஆகையால் செயற்கை முறையால் தாவரத்தின் உயிரியற் போக்கை மாற்றுவதில் இவ் விரண்டையும் கட்டுப்படுத்தும் முறை கள் வழங்குகின்றன.

இவற்றுள் முதலில் தோன்றியது வெப்பநிலைக் கட்டுப்பாட்டு முறை. இதனுல்தான் இது வசந்தமுறை யெனப் பெயர் பெற்றது. இதன் பின்னர் வந்த ஒளிக் கட்டுப்பாட்டு முறைக்கும் இதே பெயர் வழங்கு கிறது. தாவர அபிவிருத்தியின் போக்கைச் செயற்கை முறைகளால் மாற்றிக் குளிர்காலப் பயிர் ஒன்றை வசந்தத்தில் விதைத்தாலும் அதை யடுத்து வரும் கோடையில் அது காய்க்குமாறு செய்வது வசந்த முறை என வரையறுக்கலாம். இதுவரை தாவரங்களை ஆராய்ந்து அவற்றில் நிகழும் விளைவுகளைக் கண்டறிந்து விளக்குவதோடு தாவர நூல் நின்றிருந் தது. ஆனுல், இப்போதோ அவ் விளைவுகளில் நேரே பங்கெடுத்துக் கொண்டு அவற்றை விரும்பியவாறு கட்டுப்படுத்தவும் மேற்சொன்ன வகையில் முயற்சி உருவாகின்றது. இதுவே இம்முறையின் புரட்சிகர மான தன்மையாகும்.

இது எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை விளக்க, ரஷ்யாவில் குளிர் காலக் கோதுமையைச் செயற்கையில் வசந்தத்தில் விதைப்பதற்குத் தயாரிக் கக் கையாளப்படும் முறையைச் சற்றுக் கவனிப்போம். விதைப்பதற்கு முன் நீரில் இதை ஓரளவு ஊறவைத்து, உரு கும் பனிக்கட்டியின் வெப்ப நிலையில் இதை இரண்டு மாதங்கள்வரை இருத்தி, உலர்த்தி வைத்துவிடுகின் றனர். பின்னர் இதை வசந்தத்தில் விதைத்தாலும் விரைவில் பூரண அபிவிருத்தி யடைந்து கோடை யிலேயே கதிர்களை ஈந்துவிடுகிறது. இம்முறை இப்போது ரஷ்யாவில் ஆண்டுதோறும் கையாளப்படும் விவ சாயமுறைகளில் ஒன்ருக ஆய்விட்டது

விதைக்குமுன் விதைகளை இவ்வகை யில் வினைப்படுத்துவதால் விதையினுள் நிகழும் மாற்றங்களை ரஷ்ய அறிஞர் கள் பின்வருமாறு விளக்குகின்றனர். விதையை விதைத்ததும் அதன் முளைக் கும் கட்டம் நிகழ்கிறது. இதற்கு உரு கும் பனிக்கட்டியின் வெப்பநிலை மிக வும் ஏற்ற சூழ்நிலையாகும். இதைச் செயற்கை முறையில் விதைக்கு அளித்து, அப்போது வளர்ச்சியைச் சாதாரண வேகத்தில் நடைபெருது தடை செய்துவிட்டால், வளர்ச்சி அதிக மாக நடைபெருதபோதே தாழ்ந்த வெப்பத்தில் நிகழும் அபிவிருத்திக் கட் டம் நிகழ்ந்து முடிந்துவிடுகிறது. இத ஞல் அவ்விதையை விதைத்தபின்,

அதன் வாழ்க்கைச் சக்கரம் துரிதம டைந்து, பயிரும் விரைவில் அறுவடைக்குத் தயாராகிறது. வசந்த முறைப்படி தயாரிக்கப்பட்ட குளிர்கால விதைகள் சாதாரண வசந்தகால வகைகளைவிடத் துரிதமாய் அறுவடைக்கு வருவதைப் பல சோதனைகள் காட்டின.

ரஷ்யாவுக்கு வெளியே செயர்கை முறைகளால் விதைகளை வினைப்படுத்தும் ஆராய்ச்சிகளைப் பெரிதும் செய்துள்ள நாடு இந்தியாதான். பஞ்சாபிலுள்ள லயால்பூர், காசி, டில்லி, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் இவைப்பற்றிய சோதனைகள் நடந்து வருகின்றன. நம் நாட்டு ஆராய்ச்சிகள் ஒளிக் கட்டுப்பாடு பற்றியவை. இவற்றால் பல முக்கியமான உண்மைகள் வெளியாகியுள்ளன. ஒரு நெல் வகையைப் பற்றிய சோதனையில், முளைக்கும் விதைகள் பெறும் ஒளியைச் சுருந்தவாறு குறைத்து, 133 நாட்களில் அறுவடையாகும் அப்பயிர் விரைவில் அபிவிருத்தியடைந்து நாற்பத்தேமே நாட்களில் அறுவடைக்கு வந்த அதிசயத்தைக் கண்டனர். இப்பயிர்வகை வழக்கத்திற்கு வருவதால் விவசாயி அடையும் பெருநலன் உடனே விளங்கும். மிகக் குறைந்த காலத்தில் அவன் பயிரை அறுவடை செய்வதுடன், இதனால் பருவமழை ஓயும் காலங்களில் அடிக்கடி தோன்றிப் பெருஞ்சேதம் விளைக்கும் வெள்ள அபாயத்தைத் தவிர்க்கவும் முடியும். அடுத்த பயிருக்கு வயலைத் தயார்செய்ய அவனுக்குப் போதிய அவகாசமும் இருக்கும்.

வசந்த முறையைப் பற்றிய சோதனைகளால் விவசாயத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் இப்போதே வந்துவிடவில்லை. இம்முறை 1932ல் ரஷ்யாவில் வழக்கத்திற்கு வந்தது. ஐந்தாண்டுகளுக்குள் பல லட்சம் ஏக்கர் நிலத்தில் வசந்தமுறையில் தயாரான விதைகள் விதைக்கப்பட்டன. போருக்குப் பின்னரும் இவ்வழக்கம் அங்கு இன்னும் அதிகமாகி இருக்கவேண்டும் என நம்ப இடமிருக்கிறது. ஆனால், வேறு நாடுகளில் இம்முறை இன்னும் ஆராய்ச்சி நிலையங்களை விட்டு வெளிவரவில்லை. ஆனால், இவ்வாராய்ச்சிகள் தாவர அபிவிருத்தி பற்றிய நமது அறிவை வளர்ப்பதோடு, சூழ்நிலைக்கேற்றவாறு தாவரங்கள் எவ்வாறு தம்மை அனுசரித்துக் கொள்கின்றன என்பதை அறியவும் உதவும். இதனால் இடத்திற்கும், பருவத்திற்கும் மிகவும் ஏற்ற பயிர்களை விளைக்கவும், ஒவ்வாத சூழ்நிலைகளிலும் புதுவகைப் பயிர்களைப் பயிராக்கவும் முடியலாம். தாவர அபிவிருத்தியை நமக்குத் தேவையான திசையிற் கட்டுப்படுத்திச் சோதனைகள் நடத்தலாம்.

நம் நாட்டில் வசந்த முறை ஆராய்ச்சிகள் பெரும் பயன்தர வழியுண்டு. வெப்ப நாட்டுப் பயிர்களான வேர்க்கடலை, கரும்பு, கேழ்வரகு முதலிய தானியங்கள், கடுகு முதலிய வேறு பயிர்கள் இவற்றை வசந்த முறைப்படி தயாரிக்கும் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிய சோதனைகளை மேலும் நடத்தி வசந்த முறை விதைகளை ஆங்காங்குத் தயாரித்து விவசாயிகளுக்கு அளித்துதவ அரசாங்கத்தாரே முன்வரலாம். தக்காளி போன்ற காய்கறிவகைகளை ஒளிக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தி இவை பருவம் மாறிக் காய்க்குமாறு செய்யலாம் என்பது புலனாகியுள்ளது. நகரவாசிகளுக்கு ஆண்டு முழுதும் புத்தம் புதிய காய் கறிகள் கிடைக்க இதனால் வழியேற்படலாம்.

பருவ மழையையே பெரிதும் நம்பும் நம் நாட்டு விவசாயிக்கு வெள்ளம், வறட்சி, பூச்சி இம் மூன்றும் பெரும் பகைகளாம். இவற்றை எதிர்த்து நிற்கும் திறத்திலுள்ள பயிரினங்களைத் தோற்றுவிக்க வசந்த முறை வழி காட்டுகிறது.

நம் நாடு இன்றுள்ள நிலைமையை நோக்கும்போது இவ் வசந்த முறை பற்றிய ஆராய்ச்சி இங்கே விரைவில் பயன் தரக்கூடாதா என்ற ஏக்கம் தோன்றுவது இயற்கைதான்.

சுழற் காற்று

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, B.O.L.

'நீ எப்போதுதான் வேலை பார்க்கப் போகிறாய் அப்பா. இருந்த பணமும் குறைந்து விட்டது. இன்னும் இருப்பதும் செலவாகி விட்டால் பிறகு என்ன செய்வது?'

'வேலைக்கு முயற்சி செய்யாமலா அம்மா இருக்கிறேன்? தினந்தோறும் ஒவ்வோர் இடத்திற்கு ஒவ்வொரு விண்ணப்பம் எழுதி அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறேன். வேலை கிடைத்தால்தானே!

'விண்ணப்பம் எழுதி அனுப்பி விட்டால் மட்டும் போதுமா? பெரியவர்கள் யாரையாவது போய்ப் பார்த்து அதற்கேற்ற ஏற்பாடுகள் செய்தால்தானே அப்பா வேலை கிடைக்கும்?'

'வேலைக்காக மற்றவர்களிடம் போய்க் கெஞ்சுவது என்பது எனக்குப் பிடிக்கவில்லை அம்மா. வேலைக்குரிய தகுதி எனக்கு இருக்கிறது. நான்தான் எம். ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேறியிருக்கிறேனே. வேலை கொடுப்போர் என் தகுதியை அறிந்து வேலை கொடுக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்.'

'என்னமோ அப்பா. இந்தக் காலத்தில் யாரும் தகுதியை அறிந்து வேலை கொடுப்பதாகத் தெரியவில்லை. நாலுபேரைப் போய்ப் பார்த்துக் கேட்டால்தான் வேலை கிடைக்கும். பிறகு, உன் விருப்பம்.'

'இன்றைய பத்திரிகையில்கூடப் பொருளாதார அறிஞர்கள் தேவை என்று அரசியலார் விளம்பரப்படுத்தியுள்ளார்கள். இன்று அதற்கு விண்ணப்பம் அனுப்பப் போகிறேன், அம்மா. இவ்வேலை கிடைத்தால் மிக நன்றாயிருக்கும். சம்பளம் தொடக்கத்தில் ரூ. 400/—கொடுப்பார்களாம். கிடைத்தால் நல்லதுதான். எதற்கும் ஆண்டவன் இருக்கிறார்'

இங்ஙனம் முருகனும் அவன் தாயும் பேசிக் கொண்டார்கள். முருகன் பகலுணவு அருந்திக் கொண்டிருந்தான். தாய் அவனுக்கு உணவு இட்டுக் கொண்டிருந்தாள்.

முருகனுடைய தாய் மிகவும் வயதானவள். அவளுடைய பெயர் மங்கையர்க்கரசி; தன்னுடைய கணவனுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கை நடத்தியவள். முதல் மனைவி இறந்து

விடவே அவள் கணவர் இரண்டாவது முறையாக அவளை மணந்து கொண்டார். பொதுவாக ஒரு கணவனுக்குத் தன் இரண்டாவது மனைவியிடத்தில் மிக்க அன்பு இருக்கும். அவளுடைய இளமை, அழகு முதலியவை இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. மேலும் அவள் புதியவள் அல்லவா? புதுமையில் யாருக்கும் மோகம் தோன்றுவது இயல்பே. மங்கையர்க்கரசியிடம் அவள் கணவன் கொண்டிருந்த அன்பிற்கு அளவே இல்லை எனலாம். இவ்வன்பின் பெருக்கத்திற்குக் காரணம் அவளுடைய இளமை, அழகு மட்டுமல்ல; அவளுடைய நல்லொழுக்கமும் பெருந்தகைமையும் உயர்ந்த பண்புகளும் ஆம்.

தனக்குத் திருமணமாகிப் பத்தாண்டுகளுக்குள் மங்கையர்க்கரசி தன் கணவனை இழந்தாள். கணவனை இழந்த அவள் அன்பு முழுமையும் தன் ஒரே மகன் முருகன் பால் செலுத்தி உயிரினும் மேலாக அவனைப் போற்றி வளர்த்து வந்தாள்; தான் உயிர் வாழ்வது தன் மகனுக்காகவே என்று கருதினள்.

தன் கணவன் இறந்த பொழுது அவளுக்கு நான்கு வீடுகளும் பத்து ஏக்கரா நிலங்களும் சொந்தமாக இருந்தன. இச்சொத்துக்களை முதலாகக் கொண்டு அவள் செல்வத்தை அதிகமாகப் பெருக்கியிருக்கலாம். சிறு முதலைக் கொண்டு பெரும் பொருளை உண்டாக்கிக் கொள்வது ஓர் அரிய கலை! இக்கலையை உணர்ந்தால்

உலகில் ஒரு பெரிய முதலாளியாக விளங்கலாம். இக்கலையில் தேர்ச்சி பெறுதற்கு ஒருவன் அதற்கெனத் தனிப் பண்புகள் பெற்றிருக்க வேண்டும். இக்கலையின் நுட்பங்கள் 'பாவம்' மங்கையர்க்கரசிக்குத் தெரியாது. அதற்கேற்ற பண்பும் அவளுக்கில்லை. அவ்வகையில் அவளுக்குத் துணை செய்யவும் ஒருவரும் இல்லை. அவளுடைய மகனோ சிறுவன். எனவே தன்னுடைய சொத்துக்கள் ஒவ்வொன்றையும் விற்று அப்பணத்தைக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்தி வந்தாள். தன் மகன் முருகனை எம். ஏ. வரை படிக்க வைக்க மிகுதியான பணம் செலவாயிற்று. முருகனும் செலவு செய்வதில் நிபுணன். ஆனால், தவறான வழியிலே பணத்தை வீணாக்க மாட்டான். தன் நண்பன் தனக்கு ஒரு சிறு உதவி செய்தால், பதின் மடங்காகத் தக்க சமயத்தில் திருப்பி உதவி புரிவான். தாயும் தன் மகன் கேட்டபோதெல்லாம் மறுக்காமல் பணம் கொடுத்து விடுவாள். தன் மகன் எந்த வகையிலும் துன்புறாமல் இன்பமாக வாழ வேண்டும் என்பதே மங்கையர்க்கரசியின் நோக்கம். இதனால் நாளடைவில் முருகனும் அவன் தாயும் நிலமிழந்து வீடிழந்து இறுதியில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள். அப்போது கடைசியாக வீடு விற்ற பணத்தில் ஒரு பகுதிதான் அவர்களிடம் இருந்தது. இந்தப் பணமும் செலவாகி விட்டபிறகு என்ன செய்வது என்று மங்கையர்க்கரசி அஞ்சினாள். ஆகையால் தன் மகனை விரைவில் வேலையில் அமரும்படியாக அடிக்கடி வற்புறுத்தி வந்தாள்.

பத்திரிக்கையில் விளம்பரப் படுத்தியிருந்த வேலையைத் தான் பெறவேண்டு மென்று பெரிதும் விரும்பினான் முருகன். அவ்வேலை கிடைத்தால் தன் வாழ்க்கையை இனிதே நடத்தலாம் என்பது அவன் எண்ணம். எனவே, அன்று மாலை முருகன் அவ்வேலைக்காக ஒரு விண்ணப்பம் எழுதி அதைத் தபால் பெட்டியில் போடுவதற்காக மிக விரைந்து சென்றான். அப்போது மணி ஐந்து. ஐந்து மணிக்கு மேல் தபால் எடுக்க மாட்டார்கள். ஆகையால் முருகன் மிக விரைந்து ஓடினான். பகலெல்லாம் சூரியன் தன் வெங்கதிர் வீசி, ஓய்வு பெறுவதற்காக மேற்குத் திசையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தான். கதிரவன் மறையும் நேரம் காதல் மலரும் நேரமாகும். ஆனால் முருகன் உள்ளத்திலே காதல் மலரவில்லை. இதற்கு முன் அவன் மனதில் காதல் அரும்பி யிருந்தாலல்லவோ அது மாலையில் மலரும். காதலெண்ணம் அவன் சிந்தையில் அதுவரை எழுந்ததில்லை. அவன் தபால் பெட்டியை நோக்கி விரைந்தபொழுது தான் வேலை பெற வேண்டும் என்ற எண்ணமே அவன் உள்ளம் முழுதும் குடிகொண்டிருந்தது. இங்ஙனம் முருகன் கடிதத்தைக் கையில் ஏந்திக் கொண்டு விரைந்து ஓடித் தபால் பெட்டியை நெருங்கியதும் தன் முன் பொன்னொளி வீசக் கண்டான்; மயங்கி நின்றான். பொன் மயமான பதுமை போன்று ஓர் இளம்பெண் தன் கையில் ஒரு கடிதத்தோடு அங்கு நின்றாள். அழகே உருவாக அமைந்து தோன்றினாள் அந்நங்கை. அவளும் தன் கடிதத்தைத் தபால் பெட்டியில் போட அங்கு விரைந்து வந்தாள். தன் முன்னே தன் கண்ணையும் கருத்தையும் பறிக்கும் கட்டழகன் நிற்பதைக் கண்டு

அவளும் மயங்கி நின்ருள். இருவர் கண்களும் பேசின. ஆனால் வாய் பேச வில்லே. காதலர்கள் கண் அவர்களுடைய வாயைவிட நன்ருகப் பேசும் போலும்! பிறகு அம்மங்கை புன்முறுவலோடு கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டு விட்டு மெல்ல அகன்று சென்ருள். முருகன் அவளுடைய நடையின் அழகையும் சாயலின் எழிலேயும் கண்ணிமை கொட்டாமல் பார்த்து நின்ருன். அவள் செல்லச் செல்ல முருகன் தன் உயிரே போவது போன்ற உணர்ச்சியை அடைந்தான்; பின்பு தன் கடிதத்தைத் தபால் பெட்டியில் இட்டுத் திரும்பினன்.

முன்பு வேலே பற்றிய எண்ணமே குடிகொண்டிருந்த முருகன் உள்ளத்தில் இப்போது அவ்வேல் விழியாள் புகுந்து அதனைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டாள். அவன் அவளேயே நினைந்து நினைந்து உருகினன். அவள் தபால் பெட்டியில் போட்ட கடிதம் யாருக்காக இருக்கும்? ஒருவேளே அவளுடைய காதலனுக்காக இருக்குமா? அப்படி இருந்தால் நான் அவளைக் காதலித்து என்ன பயன்?' என்று அவன் ஒரு சமயம் எண்ணுவான். மற்ருெரு சமயம், 'ஐயோ, நான் அவளே அடையாமற் போனல் என் வாழ்க்கையே பாழ்பட்டு விடும்போல் தோன்றுகிறதே! உயிரற்ற உடல்போல் அல்லவோ நான் செயலற்று இருக்க வேண்டும். அவளே மீண்டும் நான் காண்பது எப்படி?' என்று நினைப்பான். இப்படி முருகனுடைய உள்ளம் அவன் கண்ட காரிகையையே எண்ணி எண்ணி அலேபாய்ந்து கொண்டு இருந்தது.

முருகனின் உள்ளத்தைக் கவர்ந்து சென்ற கட்டழகி ஒரு கல்லூரி மாணவி; கல்லூரி இடைநிலே வகுப்பில் கல்வி பயின்று வந்தாள். அவள் கல்லூரி உணாவு விடுதியில் தங்கியிருந்தாள். அவள் பதினேழு வயதுடைய இளநங்கை. பொன்னிற மேனியும் பொலிவுடைய முகமும் சிறுத்த இடையும் கறுத்து வேல் போன்ற விழியும் இனிய சாயலும் எழில் வாய்ந்த நடையும் பெற்று, காண்பவர்கள் தம் கண்ணேப் பெயர்த்தெடுக்க முடியாத அழகுடன் திகழ்ந்தாள். அவளுடைய பெயர் விமலா. அவளுடைய கல்லூரியில் அழகால் புகழ் வாய்ந்த பெண்கள் ஒரு சிலர் இருந்தனர். அவர்களுக்கெல்லாம் முதன்மையாக விளங்கினுள் விமலா. எனவே முருகன் இவளேக் கண்டதும் தன் சிந்தையை அவள்பால் பறிகொடுத்ததில் வியப்பொன்று மில்லே.

விமலாவின் பெற்ருேர்கள் அவர்களுடைய சொந்தக் கிராமத்தில் வசித்து வந்தார்கள். விமலாவின் தந்தையார் முற்போக்கான கொள்கையுடையவர். சாதி சமய வேற்றுமைகளேப் பெரிதும் வெறுப்பவர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற கொள்கையில் உறுதியுடன் விளங்கிய உத்தமர். தம்முடைய மகள் விமலா சிரிய முறையில் உயர்தரக் கல்வி பயின்று பட்டம் பெற்று அறிவுடனும் ஒழுக்கத்துடனும் வாழ வேண்டும் என்பது அவர் விருப்பம்.

விமலாவுக்குத் தன் கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்கும் சொந்தச் செலவிற்கும் பணம் தேவையாக இருந்தது. இதற்காகவே அவள் தன் தகப்பனருக்கு மிக்க அவசரமாகக் கடிதம் எழுதி அதைத் தபால் பெட்டியில் போடு

வதற்காக விரைந்து ஓடி வந்தாள். அவள் தபால் பெட்டியைக் கிட்டியதும் அங்கே தனக்கு முன் என்றுங் காணாத ஓர் அழகு உருவைக் கண்டாள். கண்டதும் கருத்தை யிழந்தாள்; பின்பு திரும்பியபோது அவனைப் பற்றிப் பல வாறு எண்ணிக்கொண்டே நடந்து சென்றாள்: "அவர் யாரோ தெரிய வில்லையே! ஆ ஆ! எவ்வளவு உயர்ந்த தோற்றம்! அவரைக் கண்டது முதல் என் நெஞ்சம் என்னிடம் இல்லையே! அதை எவ்வளவு ஈர்த்துப் பிடித்து வைத்தாலும் என்னுடைய ஆற்றலுக்கு அடங்காமல் ஓடி அவரையே நாடுகிறதே! ஐயோ, என்ன செய்வேன்? இதுவரை இத்தகைய மனநிலை எனக்கு ஏற்பட்டதில்லை! இது எனக்கு மிகவும் புதுமையாக இருக்கிறதே!......... அவர் கையில் ஒரு கடிதத்தை ஏந்திக்கொண் டிருந்தாரே; அது யாருக்காக இருக்கும்?" இங்ஙனம் எண்ணி எண்ணி நெஞ்சம் தளர்ந்து தன் அறையை அடைந்தாள் விமலா.

முருகனுக்கும் விமலாவுக்கும் அன்றைய இரவுப்பொழுது ஆயிரக் கணக்கான வருஷங்களாகத் தோன்றியது. இருவர் கண்களும் இரவு முழுதும் இமைக்கவும் இல்லை. முருகன் விமலாவையும் விமலா முருகனையும் சுத்தம் மனக் கண்ணால் இடைவிடாது கண்டு கொண்டே அவ்விரவைக் கழித்தார்கள்.

பொழுது விடிந்தது. இருவரும் மீண்டும் சந்திக்க வேண்டும். எங்கே—எப்படிச் சந்திப்பது? இவ்வெண்ணம் இருவர் உள்ளத்தையும் வாட்டியது. அவர்கள் அந்நாள் முழுதும் இதையே எண்ணி வாடினர். அன்று மாலை மணி ஐந்து ஆயிற்று. முருகன் தன்னையும் அறியாது தபால் பெட்டிக்கு ஓடி வந்தான். ஆனால் அங்கு அவன் உள்ளம் கவர்ந்த காரிகை இல்லை. அவன் உள்ளம் உடைந்தது; மெய் மறந்து சற்று நேரம் அங்கு நின்றான். தூரத்தில் ஓர் இள நங்கை கையில் கடிதம் ஏந்திக் கொண்டு தபால் பெட்டியை நோக்கி விரைந்து வருவது முருகன் கண்ணில் பட்டது. அவன் உள்ளம் பூரித்தது. விரைந்து வருவது விமலாதான். அவள் நெருங்கியதும் அவளோடு எப்படியாவது பேசி மகிழ வேண்டும் என்று உறுதி கொண்டான் முருகன்.

விமலா சற்றுத் தூரத்தில் வரும் பொழுதே மன்னன் தன் அன்பை யெல்லாம் கொள்ளை கொண்ட அதே கட்டழகன் அங்கு இருப்பதைக் கண்டவுடன் அவள் நெஞ்சு மகிழ்ச்சியால் பறை கொட்டியது. இரவெல்லாம் அவனையே நினைந்து நினைந்து மெலிந்திருந்த அவள் உடல் அவனைக் கண்டவுடன் பருத்துத் தோன்றியது. கையில் கடிதத்தோடு விமலா தபால் பெட்டியை அணுகினாள். ஆனால் கடிதத்தைப் பெட்டியில் போடவில்லை. அங்கேயே தயங்கி நின்றாள்.

'ஏனம்மா நிற்கிறீர்கள்? தபால் நேரம் ஆகி விட்டதே. உடனே கடிதத்தைப் பெட்டியில் போடுங்கள்' என்ற சொற்கள் அவள் காதில் விழுந்தன. ஆ, ஆ! எவ்வளவு இனிமை பொருந்திய மொழிகள்! அம்மொழிகளின் ஒவ்வொரு எழுத்திலும் அன்பு நிறைந்து வழிந்தது. இச்சொற்களாகிய தேன் அவள் செவி வழியாகப் பாய்ந்து உயிர், உள்ளம், உடல் எங்கும் பரவி அவளைப் பரவசப் படுத்தியது. அவளும் பேச முயன்றாள். ஆனால்

நாணம் குறுக்கிட்டது. ஒரு நங்கையின் நெஞ்சம் நாணம், காமம் ஆகிய இவ்விரண்டையும் தாங்க முடியாது. காமம் வேண்டுமாயின் நாணத்தை விடவேண்டும்; அல்லது நாணை நிலைநிறுத்த வேண்டுமாயின் காமத்தைக் கைவிட வேண்டும். எனவே விமலாவின் உள்ளத்தில் நாணத்திற்கும் காமத்திற்கும் கடும் போர் நிகழ்ந்தது. முடிவில் காமமே வெற்றிபெற்றது. நாணம் அடியோடு அழிந்து மறைந்தது.

'என் கையில் இருப்பது கடிதம் அல்ல. வெறும் உறை தான்' என்று மெல்லச் சொல்லி முறுவல் பூத்தாள் விமலா.

'இது என்ன வியப்பாயிருக்கிறது! வெறும் உறையையும் தபால் பெட்டியில் போடும் வழக்கம் தங்களுக்கு உண்டு போலும்!' என்று முருகன் சொல்லிச் சிரித்தான்.

'நான் என்ன செய்வது? நேற்று இதே நேரத்தில் இந்த இடத்தில் ஒரு கள்வன் வந்தான். அவன் எப்படியோ எனக்குத் தெரியாமல் என் நெஞ்சில் புகுந்து ஒளிந்து கொண்டான். அவன் என் நெஞ்சில் தங்கி என்னைப் படாதபாடு படுத்துகிறான். இன்று ஐந்துமணி ஆனதும் தபால் பெட்டியிடம் போ, போ என்று என்னை வேகமாகத் தள்ளினான். தபால் பெட்டியிடம் வெறுங்கையோடு எப்படி வருவதென்று எண்ணி உறை யொன்றை எடுத்துக் கொண்டு வந்தேன்!'

இச் சொற்களைக் கேட்டதும் முருகனுக்கு இவ்வுலகம் வெறும் மண்ணுலகமாகத் தோன்றவில்லை. எல்லா இன்பங்களும் ஒருங்கே நிறைந்த பொன்னுலகமாக அவனுக்கு விளங்கியது. எங்கும் இன்பக் காட்சிகள்! இனி தன்னுடைய வாழ்க்கை முழுதும் இன்பந்தான் என்று எண்ணி எண்ணிக் களித்தான்.

'என் கண்ணே! நேற்று உன்னைக் கண்டது முதல் நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா? உன்னை மீண்டும் காண முடியுமோ என்று எண்ணி எண்ணி ஏங்கி அழிந்து கொண்டிருந்த என் உயிர்க்கு ஆக்கந் தந்த அருமருந்தே! இனி என் உயிர், உள்ளம், உடல் எல்லாம் நீயே!'

இங்ஙனம் முருகன் விமலாவைப் பலபடியாகப் பாராட்டி அன்பு மொழிகளை அவள்பால் பொழிந்தான். பிறகு இருவரும் நாள் தோறும் மாலை நேரத்தில் கடற்கரையில் குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாக முடிவு செய்தார்கள்.

இருவருடைய காதலும் நாளுக்கு நாள் மேன்மேலும் உயர்ந்தோங்கி வளர்ந்தது. இருவரும் விரைவில் திருமணம் செய்துகொள்வது நல்லது என்று கருதினார்கள். விமலாவைத் தனக்கு மனைவியாக்க அவளுடைய பெற்றோர்கள் சம்மதிப்பார்களோ என்ற ஐயம் முருகனுக்குப் பிறந்தது. விமலா, தன்னுடைய தந்தை மிகவும் முற்போக்கான கொள்கையுடையவரென்றும், தான் விரும்பும் கணவனையே தனக்குத் திருமணம் செய்துவைப்பதாக அவர் பலமுறை கூறியிருக்கிறார் என்றும் முருகனுக்கு எடுத்துரைத்தாள். விமலா அடுத்த விடுமுறை நாட்களில் அவளுடைய ஊருக்குப் போய் அங்கு இருக்கும் போது, முருகன் பெண் கேட்பதற்காகத் தன் தாயோடு அங்கு வருவதாக வாக்குறுதி தந்தான்.

(தொடரும்.)

வினாக்களும் விடைகளும்

மேகங்கள் நுண்ணிய நீர்த் துளிக ளின் கூட்டத்தாலானவை என்று கூறுகி றார்கள். என்றாலும் இவை கண்ணாடி போல ஒளி ஊடுருவிச் செல்லாதன வாய், வெண்மையாய் உள்ளன. ஏன்?

கண்ணாடியூடே மறுபுறம் இருக்கும் பொருள்களைப் பார்க்க முடிகிறது. கண்ணாடியைப் பொடி செய்தால் இத் தன்மை போய் அத் தூளுக்கு வெண்மை நிறம் வந்துவிடுகிறது. "அஸ்கா" என்னும் சர்க்கரையும் வெண்மைதான். தனிச் சர்க்கரைத் துகள் ஒன்றை எடுத்து நோக்கினால் அது வெள்ளை நிறமற்று ஒளி ஊடுருவிப் போகக் கூடியதாயிருப்பதையும் அறி வோம்.

ஒளி ஊடுருவத் தக்கதாயிருப்பினும், நுண்மையான பொடியின் தொகுதியா யிருந்தால், ஒளி அப்பொடியின் பக்கங்களில் பட்டுப் பிரதிபலித்துச் சிதறுவதால் நமக்கு வெண்மையாகக் காண்கிறது. மேகங்கள் வெண்மை யாகக் காண்பதும் இவ்வாறே.

பழங்களை மரத்திலேயே பழுக்க விடு வதால் அவற்றிற்கு நன்மையுண்டா? அல்லது பறித்தபின் பழுக்கவிடலாமா?

கனிய ஆரம்பித்தாலும், பழங்கள் பறிக்கப் படுமுன் மரத்திலிருந்து ஊட் டத்தைப் பெறுவதால் பழம் பக்குவ மடைந்தபின் பறிப்பதே நல்லது.

பொதுவாகப் பழங்கள் பக்குவ மடைந்திருக்குமானால் காம்பிலிருந்து எளிதில் பறிக்க இயலும். எளிதில் பறிக்க முடியவில்லையானால் அவற்றைப் பக்குவமற்ற காய்களென அறியலாம்.

உலோகங்களெல்லாவற்றிலும் விலை யுயர்ந்தது யாது? காலப்போக்கில் அதன் விலை குறைபடக் கூடுமா?

ரேடியம் (Radium) என்பதை விட விலையுயர்ந்த பொருள் ஒன்றும் இருப்பதாகவே எனக்குத் தெரிய வில்லை.

தங்கத்தின் விலை நிலவரங்கள் அடிக் கடி மாறுவதைக் கேட்கிறோம். யுத் தத்திற்கு முன் ஒரு விலை, யுத்தம் முடிந்த பின் ஒரு விலை, நாளைக்கு வேறொரு விலை. நம்பியவர்கள் பாடு திண்டாட்டம்.

ரேடியத்தின் விலையைக் கேட்டால் மலைத்துப்போய் விடுவோம். ஒரு கிராம் (Gramme) எடையுள்ள (ஒரு அவுன்ஸ் எடையில் 28-ல் ஒரு பங்கு என்று வைத்துக்கொள்ளுங்களேன்) ரேடியத்தின் விலை சுமார் 70,000 ரூபாயிருக்கும். வேண்டிய அளவிற்கு எல்லாருக்கும் கிடைக்கும் என்று நினைத்து விடாதீர்கள்!

இதைவிட இன்னும் விலை குறையும் என்று நான் நினைக்கவில்லை. ஏன் தெரியுமா? ரேடியத்தை அதன் தாதுப் பொருள்களிலிருந்து மிகவும் சிக்க லான முறைகளில் சிரமப்பட்டுப் பிரித் தெடுப்பதற்குத்தான் இவ்வளவு பணமும் என்று சொல்லவேண்டும். ஒரு கிராம் எடை ரேடியம் தயாரிக்கச் சுமார் 500 டன் தாதுப்பொருள் வேண்டும். பிரித்தெடுக்கும்போது இன்னும் 400 அல்லது 500 டன் ரசாயனப் பொருள்கள் செலவழியும். 1000 டன் நிலக்கரி வேறு வேண்டும். $22\frac{1}{2}$ லட்சம் காலன் சுத்தமான காய்ச்சி வடித்த (Distilled water) நீரும் வேண்டும். வருஷக் கணக்காகப் பலர் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். போதுமா?

இத்தனை சிரமமில்லாத ஒரு முறையை நீங்களோ, நானோ கண்டு பிடித்தபொழுது வேண்டுமானால் விலை குறைவதைப் பார்த்துக் கொள்ளலாம்.



குறிப்பு: நூலரங்கத்து அனுப்பும் நூல் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டு படிகள் அனுப்ப வேண்டும்.

அன்பே நம் ஆயுதம் (நாவல்)
ஆசிரியர்: திரு. கே. சினிவாசன்— கிடைக்குமிடம்: கஸ்தூரி அச்சகம், ஜெயில் ரோடு, கோவை—பக்கம்: 306—விலை ரூ. 4

மனவியலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிற புனைகதைகள் தமிழிலே மிகக் குறைவு என்று முன் ஒரு முறை இதே நூலரங்கில் குறிப்பிட்டிருக்கிறோம். அக்குறையினை நம்மைப் போலவே உணர்ந்துள்ள திரு. சினிவாசன் அவர்கள் மனோதத்துவ நாவல் ஒன்றை மிக அருமையாக எழுதியுள்ளார். 'அன்பே நம் ஆயுதம்' என்ற மகுடம் இடநினைக்கிற பொழுதே மன விகாரங்கள் பலவற்றையும் மோதவிட்டு விளையாடி, அன்புக்கு வெற்றிமாலை சூட்ட வேண்டும் என்று எண்ணித்தான் இருக்க வேண்டும்.

காந்தியடிகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து 1932ல் எழுந்த போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு நிகழ்கிறது கதை. ஆலை முதலாளி இராமச்சந்திர உடையாரின் மகன் குமார் கல்லூரி மாணவன். கிளர்ச்சியில் அவன் மனம் ஈடுபடுகிறது. சூழ்நிலைகளின் காரணமாக அவன் பெரும் பங்கு கொள்ள நேரிடுகிறது. கிளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு சிறைப்பட்டபோதுகூடத் தான் செய்வது சரிதானா என்ற ஐயம் அவன் உள்ளத்தில் எழத்தான் செய்கிறது. பெரிய குடும்பத்தினர் சிறை செல்வது குலத்துக்கே நீக்கமுடியாத அவமானம் என்று எண்ணியிருந்த காலமல்லவா அது? இந்த எண்ணம் ஒரு புறமும், அன்னையின் அன்புள்ளம் ஒரு புறமுமாக நின்று சந்தர்ப்ப வசத்தால் அரசியல் கிளர்ச்சியாளனாகிவிட்ட குமாரின் இளமை நெஞ்சத்தை வாட்டுகிறது. கிளர்ச்சி ஆர்வமும் அன்பின் வலிமையும் ஒவ்வொரு பக்கமாக நின்று மனப் போராட்டம் நடப்பதை ஆசிரியர் மிக நன்றாகச் சித்தரித்துள்ளார். நூல் நெடுகிலுமே லட்சியங்களிடையே நடக்கும் போராட்டத்தை மிகத் தெளிவாகக் காட்டிச் செல்வது இந்த நாவலின் தனிச் சிறப்பாகும். சிறைபுகுந்த குமார் அங்கேயுள்ள விளைந்த அரசியல்வாதிகளின் அறிவு நிறைந்த கருத்துக்களைக் கேட்க நேரிடுகிறது. அதன்

பிறகே அவன் மனப் போராட்டம் ஓய்ந்து, நாட்டுப் பணி செய்யவேண்டியது ஏன் என்று உணர்கிறுன். கலெக்டர் கல்லூரி மாணவர்களை மட்டும் விடுதலை செய்கிறுர். குமார் தேர்வில் கருத்தைச் செலுத்திப் படிக்கிறுன். படிக்கும்போதே இரண்டு சக்திகள் அவனைத் தத்தம் வழியில் இழுக்க வேலை செய்கின்றன. அரசியல் கிளர்ச்சியாளர்கள் அவனைப் பெறும் வாய்ப்பை எதிர்நோக்கியிருக்கிறுர்கள். பெற்றெடுத்த அன்னையோ மருமகளைத் தேடி உறுதிசெய்யும் வகையில் வேலை செய்கிறுள். குமார் சிறை சென்ற பின் அவனைப் பற்றிய திட்டத்தையும் கருத்தையும் மாற்றிக்கொண்ட தந்தையார் தம் மனைவியின் திட்டத்துக்கு உடன்படுகிறுர். தேர்வு முடிகிறது. இரண்டு சக்திகளின் தொழிற்பாடு வெளிப்படையாக வேலை செய்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் தாயின் குழந்தை மனம் நன்ருக உருவாக்கப் பெற்றுள்ளது. தாயின் திட்டத்தை— அன்புச் சிறையைத் தூளாக்கிவிட்டு, சிக்கல் நிறைந்த அரசியல் வாழ்வையே தழுவிக்கொள்கிறுன் குமார். போலி மதிப்பைக் காப்பாற்றும் தந்தையின் மனப்பான்மை சீறி எழுந்து மகனை வெளியே துரத்துகிறது.

கிளர்ச்சி வெள்ளத்தில் ஈடுபட்டு விட்ட குமாரின் இருப்பிடம் வீட்டாருக்கும் தெரியவில்லை; போலீசாருக்கும் தெரியவில்லை. அரசியல் அரங்கிலே கதைத் தலைவன் புகுந்தவுடன் அரசியல் லட்சியங்களின் முரண்பட்ட போக்குக்களைத் தெளிவுற ஓவியமாக்குகிறுர் ஆசிரியர். நிகழ்ச்சிகளின் வாயிலாக இந்த லட்சியங்களை மோதவிட்டுக் காட்டுவது அருமையாக இருக்கிறது. பலாத்காரப் புரட்சி, அஹிம்சைக் கிளர்ச்சி... போன்ற வடதுருவங்களும் தென் துருவங்களும் கதையின் நிகழ்ச்சிப் பின்னல்களிலே சிக்கிப் புலபுல திருவிளையாடல்களைப் புரிகின்றன.

மறைமுகமாக இருந்து வேலை செய்துவரும் குமார் இறுதியிலே சிறைப்படுகிறுன். சிறைப்படுமுன், அந்தக் 'குழந்தை'யையே எண்ணி யெண்ணி ஏங்கிக் கிடக்கும் அன்பின் தெய்வமாகிய அன்னையின் அல்லல்கள் உருவாக்கப்படுகின்றன — இராஜலட்சுமியம்மாள் உடல் நலம் இழக்கிறுள். சிறைப்பட்ட குமார் தண்டனையை அனுபவித்து அன்னையை நாடி வந்து சேர்கிறுன். அவன் இல்லாத குறையாலேயே நோய்வாய்ப்பட்ட அன்னையின் உடல் தெளிவடைகிறது. தாயும் சேயும் அன்பின் நெறியிலே குழந்தைகளாய் நிலவும் காட்சியைத் தந்து நாவல் முடிவடைகிறது.

இந்தக் கதையினைத் தகுந்த பல துணை நிகழ்ச்சிகளைக் கொண்டு எழுந்துள்ள 'அன்பே நம் ஆயுதம்' என்ற நாவல் நல்ல வெற்றியாகும். அரசியல் துறையாயினும் சரி, அகத்து வாழ்வாயினும் சரி — வாழ்க்கையின் எந்தத் துறைக்குமே வெற்றிக் குரிய கருவி அன்புதான் என்ற கருத்து நாவல் முழுவதிலும் ஊடுருவி நிற்கிறது.

நாவலில் வருகிற ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு வகையில் வாழ்க்கை நாடகத்தை நினைவூட்டுகிறது. அசல் முதலாளி, நாகரிக வாழ்விலே சிக்கி விட்ட கர்நாடகம், எதற்கும் அழிவும் புரட்சியும் பேசும் தீவிரவாதி, அமைதியால் உலகை வெல்ல முனையும் அன்பு............என்று இத்திற மெல்லாம் இந்த நாவலில் நன்கு காணலாம். இன்னும் போலிக் கௌரவம் தேடும் பேர்வழி, தம்பியின் நடவடிக்கையால் தன் நாகரிக வாழ்வு பறிபோகுமே என்று பரிதவிக்கும் சகோதரி—இவர்களையும் சந்திக்கலாம்............

மறுபதிப்பில் நீக்கிக்கொள்ளக் கூடிய — நீக்கவேண்டிய — அச்சுப் பிழைகள் உள்ளன என்பதைத் தவிர வேறு ஒரு குறையுமே இல்லாத அருமையான நாவல் இந்த அன்பே நம் ஆயுதம்!

பத்திரிகைகளின் தீர்ப்பு!

தினமணி
19-1-50

"ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரனை ஆசிரியராகக் கொண்டு கோவையிலிருந்து வெளியாகும் **"கலைக்கதிர்"** என்ற மாதப் பத்திரிகையின் பொங்கல் மலர் வரப்பெற்றோம். பொது அறிவை விருத்தி செய்துகொள்ள விரும்புவோருக்கெல்லாம் இப்பத்திரிகை ஒரு அரிய விருந்தென்றே சொல்லலாம். அதே தரத்தில் பொங்கல் மலரும் வெளிவந்திருப்பது தமிழர் மகிழ்ச்சிக் குரிய விஷயம். ......தமிழர் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டிய மலர்"

சுதேசமித்திரன்
6-2-50

"கலைக்கதிர் இக்காலத்திய பலவகைப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளைக் கூடியவரையில் எளிய தமிழில் விளக்கிச் சென்ற பன்னிரண்டு மாதங்களாக அரும் பணியாற்றி வருகின்றது. அதன் மலர்ச்சியை இப் பொங்கல் மலரில் காண்கின்றோம். ....இம்மலரிலுள்ள ஒவ்வொரு கட்டுரையும் நம் அறிவுக்கு ஓர் விருந்தாகும். இம்மலர் படித்து விட்டுப் போட்டு விடுவதற்குரியதன்று; கட்டிடம் கட்டி நம் புத்தக அலமாரியில் வைப்பதற்குரியதே யாகும்"

நவ இந்தியா
28-1-50

"... கலைக்கதிரைப் புறக்கணிப்பது நஷ்டம்தான். கலைக்கதிர் புதிய புதிய ஆராய்ச்சிகளையும் தாங்கி வருவதால் அது எல்லோருக்கும் பயன்படத் தக்கது ..... லாப நோக்குடன் பத்திரிகையை நடத்தவில்லை என்கிறார் ஆசிரியர். உண்மையிலேயே அவருக்கு நஷ்டமா யிருந்தாலும் மிகவும் சந்தோஷம்; லட்சக் கணக்கான தமிழர்கள் கலைக்கதிரால் அகவொளி யென்னும் லாபத்தை அடைவார்கள்"

பக்கம்
188

●

ஆர்ட்
படங்கள்
30

●

அறிவுக்கு
விருந்து

இத்தனைச்
சிறப்புக்கும்
ரூ. 2 தான்
என்றால்

●

தீர்ப்பு
வேறு
எப்படி
இருக்கும்?

சேவையே எமது லக்ஷியம்.

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் வி.த்து
முதலிய எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்
களும் ஏற்று வருகிறோம்.

❀

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும், ஆர்கனைசர்களும்
தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

❀

விபரங்களுக்கு

தலைமை ஆபீசுக்கு எழுதுக.

தந்தி: 'ஆயில்மில்ஸ்' போன்: 51
P. B. 151

ஸ்ரீ ரங்க விலாஸ்
ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாயக்கன்பாளையம், கோயமுத்தூர்.

கோவை ஜில்லா விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

உணவு தான்ய உற்பத்தியைப் பெருக்க, விவசாயிகளிடமிருந்து காலே நெம்பர், இன்ன உணவுப் பயிர், இவ்வளவு ஏக்கர் பயிர் செய்யப்பட்டுள்ளது ஆகிய விபரங்களடங்கிய விண்ணப்பங்கள் பெற்று—அமோனியம் சல்பேட்—ஜில்லா பூராவிலும் உள்ள எமது டிப்போக்களிலிருந்து சர்க்கார் நிர்ணய விலையில் வேண்டிய அளவுக்குத் தாராளமாய் சப்ளை செய்து வருகின்றோம்.

●

பருத்தி மகசூல் அதிகப்படுத்த:—

விவசாய டிமான்ஸ்டிரேடரிடமிருந்து அத்தாக்ஷி பெற்று பருத்தி உற்பத்திக்கு அமோனியம் சல்பேட் பெற்றுக் கொள்ளலாம்.

●

கரும்புப் பயிருக்கு:—

ஆங்காங்குள்ள கரும்புப் பயிர் மேற்பார்வைக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரத்தியேக விவசாய டிமான்ஸ்டிரேடர் அல்லது குளித்தலே ஷுகர்கேன் லெயிசன் பாரம் சூப்பரின்டண்டிடமிருந்து அத்தாக்ஷி பெற்று அமோனியம் சல்பேட் பெற்றுக்கொள்ளலாம்.



— THE —

SALESMAN

SANITARY ENGINEERS & CONTRACTORS.

5/319, AVANASHI ROAD,

COIMBATORE.

*

We stock all sanitary materials, wash-basins closets, Stone ware pipes etc.

*

Mosaic flooring a speciality.

*

YOUR HOME OFFICE or FACTORY

LET US BUILD IT FOR YOU.

உண்மையான

ஆயுர்வேத மருந்துகளும்

சாஸ்திர முறைப்படி

ஆயுர்வேத சிகிச்சைகளும்

தேவையா?

இவைகளை

ஆர்ய வைத்திய பார்மசி

(கோவை) லிமிடெட்டில்

பெறலாம்.

தலைமை ஆபீஸ்:
கோயமுத்தூர்.
(டெலிபோன் நெ. 108)

கிளை ஆபீஸ்:
இராயப்பேட்டை.
(டெலிபோன் நெ. 84110)

பி. கு.

கோயமுத்தூர் டிஸ்டிரிக்டைச் சேர்ந்த சிங்காநல்லூரில் 40 ஏக்கரா நிலம் கவர்மெண்ட் மூலம் வாங்கியிருக்கிறோம். இங்குச் சீக்கிரத்தில் 'நர்சிங் ஹோம்' ஒன்று ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

லோட்டஸ் மில்ஸ் லிமிடெட்,

சுந்தராபுரம் போஸ்ட், போத்தனூர்

தந்தி: { 'லோட்டஸ்' கோயமுத்தூர், போத்தனூர்.

டெலிபோன் நம்பர்: 124.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செகரட்டரீஸ்:—

லோட்டஸ் ஏஜன்சி லிமிடெட்,

☆

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்.	ரூ. 7,00,000.
வெளியிடப்பட்டதும், செலுத்தப்பட்ட மூலதனமும்.	ரூ. 2,88,200.
மொத்தம் கதிர்கள்	**15,640**
புதிதாக இணைக்கப்படும் கதிர்கள்	**3,200**
இரட்டை நூல் கதிர்கள்	**648**
மொத்தம் கதிர்கள்	**19,489**

20 நம்பர் முதல் 60 நம்பர் வரை ஒற்றை நூலும், இரட்டை நூலும் மிகவும் உயர்ந்த முறையில் தயார்செய்து வருகிறோம். 'ஆதிலெக்ஷ்மி' ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க் உள்ள எங்கள் நூல் மிகவும் பிரசித்தி பெற்றது.

★

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:— { சுந்தராபுரம் போஸ்ட், போத்தனூர்.

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதிகளும், கோவாபரேட்டிவ் ஸ்டோர் மூலம் தான்யம் வகையரூ சாமான்கள் மிகவும் மலிவான விலையிலும், இலவச வைத்திய உதவியும், காண்டீனும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஆரம்ப பாடசாலைகளும் ஏற்படுத்தி வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது.

21712

மகிழ்ச்சியான அறிவிப்பு!

PSG

உற்பத்தி
உயர்வால்
சிறந்த ரக
சாதனங்கள்!
குறைந்த விலை!



A. C. எலக்ட்ரிக் மோட்டார்



S. டைப் பம்பிங் செட்

PSG உற்பத்தி சாதனங்களுக்கு நாட்டில் அதிக கிராக்கி ஏற்பட்டு நாளுக்குநாள் கிராக்கி அதிகரித்து வருகிறது.

நாட்டின் இயந்திர சாதன தேவை உயர்வை உத்தேசித்து நாங்கள் எங்களுடைய தொழிற் சாலையை பன்மடங்கு விஸ்தரித்து நூதன முறைகளில் உற்பத்தியை வெகு வேகமாக அதிகரித்து இருக்கிறோம்.

எங்களுடைய பெருவாரியான உற்பத்தி முறைகளால் செய்யப் படும் PSG இயந்திர சாதனங்கள் குறைந்த விலையில் கிடைப்பதால், உபயோகிப்பவர்கள் பெரிதும் லாபம் அடைகிறார்கள்.

உங்களுடைய தேவையை தீர்மானிக்கு முன் PSG உயர்ரக இயந்திர சாதனங்களின, குறிப்பாக மோட்டார்களின் பம்பிங் செட்டுகளின் விலை விபரங்களைப் பார்த்துக் கொண்டு முடிவு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்,

பூளைமேடு போஸ்டு கோயமுத்தூர் (தென் இந்தியா)

தந்தி "CHARITY" கோயமுத்தூர். டெலிபோன் நெ. { தலைமை ஆபீஸ் ... 58; சேல்ஸ் பிராஞ்சு, கோயமுத்தூர் 148

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A.M.I.E.E., (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu, P. O., Coimbatore.

டெலிபோன் நெ. 17 தந்தி: "ரங்கவிலாஸ்"

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்
அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ் பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம், ரூ. 16,00,000 வெளியிடப்பட்டு வசூலானது ரூ. 15,02,500.

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய
இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்

Telegrams: PIONEER. Telephone: 160

THE COIMBATORE PIONEER MILLS, LIMITED,

PEELAMEDU, COIMBATORE, SOUTH INDIA.

SPINDLES — 19280. SPINNERS OF HIGH QUALITY YARN — 40s TO 100s.

Managing Director: G. R. GOVINDARAJULU NAIDU.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1950 MADRAS